Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 வெள்ளி-12 14-20 மே 2004



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 14 . 05 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# தேவை உணர்ந்து...!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்போது முதலில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக முன்வைக்கப்பட்டிருக்கும் திட்டவரைவுதொடர்பாக பேச வேண்டும் என வலியுறுத்துவது ஏன்?

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக மாறிமாறி ஆட்சி பீடம் ஏறிய சிங்கள அரசுகள் தமிழ்மக்கள் மீது ஏவிய யுத்தம் மிகக் கொடியது.

அந்த யுத்தவெறியாட்டத்தில் தமிழ் மக்கள் இழந்த உயிர், உடமை, உரிமை என்பன அளவிடமுடியாதவை.

காலத்திற்கு காலம் மாறிமாறி ஆட்சிபீடம் ஏறிய சிங்கள அரசுகள் ஒவ்வொன்றுமே நடைபெற்ற ஒவ்வொரு சமாதானப் பேச்சுக்களையும் தமக்கான அடுத்த கட்டயுத்தப்பிரகடனத்துக்குத் தேவையான கால அவகாசமாக மட்டுமே பயன்படுத்தின.

இதனால் தமிழ் மக்கள் சந்தித்தவை துன்பமும் துயரமும் மட்டும்தான். அவர்கள் தங்கள் வாழ்விடங்களை இழந்து சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு துயரங்களை மட்டுமே அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இதனால் புலிகள் இயக்கம் ஒவ்வொரு காலகட்ட சமாதானப் பேச்சுக்களின் போதும் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய மக்களின் அடிப்படைத் தேவை மற்றும் மனிதாபிமான பிரச்சினைகள் தொடர்பாகவே முதலில் பேசவேண்டுமென வலியுறுத்தி வந்தது.

இவ்வாறுதான் சுமார் நான்கு ஆண்டுகளாக தொடரும் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சிலும் இதற்கு முக்கியத்துவமளித்து பேசினர்.ஆனால் பேச்சோடு மட்டும் எல்லாம் நின்று போனது மட்டுமல்லாது சமாதானப் பேச்சும் இழுத்தடிக்கப்பட்டது.

இந்த நிலையில்தான் உடனடியாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உருப்படியாக உதவிகளை பெற்றுக் கொடுக்க வேண்டுமானால் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் தேவை உணரப்பட்டது.

அந்த அடிப்படையில்தான் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக பேசி உடனடியாக மக்களுக்கு செய்யக் கூடிய புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ள புலிகள் இயக்கம் விரும்புகிறது.

இதுவரை நடந்த பல சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் மக்களுக்கு எந்த உதவிகளும் வழங்கப்படாது ஏமாற்றப்பட்டது போல இம்முறையும் ஏமாற்றப்படாது அவர்களுக்கு தேவையான குறைந்தளவு பணியையாவது மேற்கொள்ளவேண்டுமானால் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் தேவை அவசியமானது.

அதற்கு தொடரப்படும் சமாதானப் பேச்சுவார்த்தையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைபற்றியே முதலில் பேசவேண்டியுள்ளது.

இதன் அடிப்படையிலேயே புலிகள் இயக்கம் முதலில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றியதாக முதலில் பேச்சு அமைய வேண்டுமென வலியுறுத்துகிறது.

## தூரனின் பார்வை

# சமாதானத்துக்காக அரசு விசுவாசத்துடன் உழைக்குமா?

இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை எட்டுவதற்காக கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் ஆரம்பமான விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைக்கால நிர்வாக சபை உருவாக்கம் உட்பட வேறு சில பிரச்சினைகள் காரணமாக ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

இப்போது புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்றதும் மீண்டும் வேண்டிய அவசியம் சனாதிபதிக்கு இருந்திருப்பின் அது குறித்து சகல தோழமைக் கட்சிகளுடனும் பேசி ஒரு முடிவிற்கு வந்திருக்க முடியும்- ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை.

அதற்கு அவ்வாறானதொரு முடிவுக்கு ஜே.வி.பியினர் ஒத்துழைப்பார்கள் என்று அவர் நம்பாதமையும் ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

நோர்வே அரசை சமாதான ஏற்பாட்டாளராக மீண்டும் செயற்பட வருமாறு சந்திரிகா

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டிய அவசிய சூழலும் சர்வதேச அழுத்தமும் அதற்கு ஏற்பட்டதன் காரணமாக சந்திரிகாவுக்கு நோர்வேயிடம் சரணடையவேண்டிய தவிர்க்கவே முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டதை அடுத்து இப்போது விடுதலைப் புலிகளுடனான தொடர்புகளை சமாதான நடவடிக்கைகள் குறித்து [illegible] மேற்கொள்ளத்தொடங்கியதன் ஆரம்பகட்டங்கள் நடந்தேறிவருகின்றன.

உண்மையில் இந்த முயற்சிகளில் இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வ தீர்வைக் காணும் ஆத்மார்த்த விருப்புடன் அரசு ஈடுபடுகிறதா என்பது சந்தேகமே ...!

தேர்தலுக்கு முன்புவரை-அதாவது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் இறுதிக் கணம் வரை எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கள் குறித்து தற்போதைய அதன் நிலைப்பாட்டிற்கு முற்றிலும் முரணானதும், எதிரானதுமான கொள்கைகளையே மக்கள் முன்வைத்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. எனவேதான் வரித்துக் கொண்ட ஒரு கொள்கைக்கு மாறாக முற்றிலும எதிரான ஒரு நிலைப்பாட்டினை ஐ.ம.சு. முன்னணி அரசு திடீரென எடுக்கவேண்டிய காரணம் என்பது ஆராயவேண்டிய ஒன்றேயாகும். அதுவும் சனாதிபதி தனது பிரதான பங்காளிக் கட்சியான,ஜே.வி.பியுடன் கலந்தாலோசிக்காமலே இவ்வாறானதொரு முடிவிற்கு வந்தமையானது வியப்புக்குரியதே.! அத்தகையதொரு தீர்மானம், தேசிய நலன்கருதிய முடிவின் அடிப்படையிலோ தமிழர் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக்காணவேண்டும் என்ற நோக்கத்தின் பாற்பட்டோ எடுக்க அழைப்பு விடுவதற்கு ஓரிரு நாட்கள் முன்னரே அமெரிக்கா மீண்டும் சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தியிருந்தமையை இங்கு நினைவுபடுத்துதல் அவசியமாகும்.

எனவே சமாதானம் குறித்த சர்வதேச அழுத்தங்களே சந்திரிகாவின் நிலைப்பாடு மாற்றத்திற்கு முதற்காரணம் என்றால் அது சரியானதாகவே இருக்கும்.

இரண்டாவது ஆட்சியை தொடர்ந்து நடத்தத் தேவையான நிதிவளத்தை வழங்கும். அதாவது இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகள் சமாதான முன்னெடுப்புக்களின் தன்மையையும், வளர்ச்சியையும் பொறுத்தே நிதி உதவிகளைச் செய்யமுடியும் என இறுக்கமாகக் கூறிவிட்டமையும் இதற்கு மற்றொருகாரணமாகும்.

ஆகவே சமாதானம் குறித்த ஏற்பாடுகளை யார் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி உடனடியாகச்செய்யவேண்டிய அவசியம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டமையானது அவரின் சுயவிருப்பு வெறுப்புக்களுக்கும் அப்பாற்பட்ட விடயம் என்பதில் ஐயமில்லை.

இப்போது எல்லா ஏற்பாடுகளையும் ஆரம்பித்த பின்னர்தான் அதுகுறித்து தனது விளக்கத்தை தனது தோழமைக்கட்சியினருக்கு தெரிவித்து அவர்களைச் சமாளிக்கவேண்டிய பரிதாபநிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது.


இந்தச் சமாதானம் குறித்த அரசின் நிலைப்பாட்டுடன் தற்காலிகமாகவேனும் ஒட்டிப் போகவோ அல்லது வெட்டிப்போகவோ முடியாத நிலை ஜே.வி.பிக்கு.....

எனவேதான் விருப்பமில்லாவிட்டாலும் கூட விடுதலைப்புலிகளோடு பேசவேண்டிய அரசின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போகவேண்டியதாகவுள்ளது என ஜே.வி.பியினர் புலம்பியுள்ளனர்.

இதேவேளை ஹெலஉறுமயவினர் ஆட்சியின் ஆரம்பத்தில் ஐ.ம.வி. முன்னணியை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் இருந்தபோதிலும் இப்போது பௌத்த சிங்கள மக்களுக்கு அரசு துரோகம் செய்துவிட்டது என்று வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியுள்ளதுடன் ஜே.வி.பி விடுதலைப் புலிகளை தமிழரின் ஏகப்பிரநிதிகள் என ஏற்றுக் கொண்டதன் மூலம் கொள்கையைக் கைவிட்டு சிங்கள மக்களை ஏமாற்றி நம்பிக்கைத்துரோகம் இழைத்துவிட்டது என்றும் குழற ஆரம்பித்துள்ளது.

எது எப்படி நடந்தாலும், சமாதான அனுசரணைக்காக வந்து அந்தப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட நோர்வே ஏற்பாட்டாளர்கள் தங்கள் வேலைகளைத் துரிதமாகவே, யாருடைய புலம்பலையும், எதிர்ப்பையும் கவனத்தில் கொள்ளாது மேற்கொள்ளத்தொடங்கி விட்டார்கள் என்பதில் ஐயமில்லை. விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் வருகையைத் தொடர்ந்து நோர்வே வெளிவிவகார அமைச்சரின் வன்னிக்கான விஜயமும் தேசியத் தலைவருடனான கலந்துரையாடலும் முக்கியத்துவம் பெற்ற நிகழ்வுகளாகியுள்ள நிலையில் எதிர்கால சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடர்பான விடுதலைப்புலிகளின் உறுதியானதும் தெளிவானதுமான நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நியாயமானதும் தவிர்க்கமுடியாத அவசியமானதுமான விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு தொடர்பான வரையறைகள் நிபந்தனைகளையே அல்ல என்பதை அரச தரப்பு புரிந்துகொள்ளவேண்டியது மிகமிக

(19ம் பக்கம் பார்க்க...)



# சமாதானத்துக்கு குறுக்குவழிகள் உண்டா?

நிலாந்தன்



*தனது* தேர்தல் வாக்குறுதி ஒன்றை நிறைவேற்ற மிகக்கவர்ச்சியான குறுக்குவழியொன்றை சந்திரிகா கண்டுபிடித்துவிட்டார் போலத்தோன்றுகிறது. நாட்டிலுள்ள சுமார் எழுபத்தேழாயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தனது கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் வேலைதரப்படும் என்று முன்பு சந்திரிகா வாக்களித்திருந்தார். இப்பொழுது அந்தவாக குறுதியை அவர் எப்படியோ நிறைவேற்றப்போகிறார் என்பதான ஒரு பரபரப்பான தோற்றம் உண்டாகியிருக்கிறது.

இதன்படி நாட்டிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு சம்பளத்துடன் கூடிய இரண்டாண்டுகால தொழிற்பயிற்சி வழங்கப்படும். இந்தப்பயிற்சி முடிந்ததும் அரச அலுவலகங்களில் பயிற்சிக்குரிய வேலை தரப்படும். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு 6000ரூபா சம்பளம் தரப்படும் என்று தெரியவருகிறது.

இதற்கான நிதி எங்கிருந்து பெறப்படுகிறது தெரியுமா? முன்பு ரணில் விக்கிரமசிங்கவின் அரசு Youth - Coop Programme - இளைஞர் கூட்டுறவு நிகழ்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்திற்காக ஒதுக்கிய நிதி செலவழிக்கப்படாமல் அப்படியே இருக்கிறதாம். அதைத்தான் இப்பொழுது சந்திரிகா எடுத்து பட்டதாரிகளுக்குச் சம்பளம் கொடுக்கப் போகிறார்.

இதன்மூலம், வேலையற்று வீடுகளில் விரக்திவசப்பட்டு முடங்கிக் கிடக்கும் பட்டதாரிகள் ஏதோவொரு தொழில் பயிற்சியில் மினக்கெடப் போகிறார்கள். இது அவர்கள் எதிர்காலத்தில் அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுவதிலிருந்து அவர்களைத் திசைதிருப்பி வைத்திருக்கும். அதோடு, அவர்கள் ஜே.வி.பி.யின் கொள்கைகளின்பால் கவரப்படுவதையும் தடுக்கும்.

இங்கே உண்மையில் பட்டதாரிகளுக்கு வேலை தரப்படவில்லை மாறாக இரண்டாண்டுகளுக்கு அரைகுறைச் சம்பளத்துடன் பயிற்சி தரப்படுகிறது என்பதே சரி. அதோடு அவர்கள் பெறப்போகும் பயிற்சி அவர்களுடைய கல்வித் தகைமைகளுடன் தொடர்புடையதாக இருக்குமா? என்பதையும் இரண்டாண்டுகளின்பின் அவர்களுக்குக் கிடைக்கப்போகும்வேலை அவர்களுடைய பட்டத்துடன் தொடர்புடையதாக இருக்குமா என்பதையும் ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

ஆனால் கிளர்ச்சிகளுக்குத் தலைமைதாங்கவல்ல இளைஞர்கள் யுவதிகளின் படை ஒன்றை இரண்டாண்டுகளுக்கு குறைச் சம்பளத்துடன் தாக்காட்ட இது உதவும். ஆம் இதை அப்படித்தான் சொல்ல வேண்டும். இங்கே பிரச்சினை ஒத்தி வைக்கப்படுகிறதே தவிர தீர்க்கப் படவில்லை.

ஆனால் சந்திரிகா அதை மிகவும் கவர்ச்சிகரமாகச் செய்யப் போகிறார் என்பதே மெய்நிலை. இதற்காக அவர் முன்பு ரணில் தொடக்கிய ஒரு திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதியையே பெறப் போகிறார். இது ஒன்றைக்காட்டுகிறது. தனது இலக்குகளை அடைவதற்கு சாத்தியமான எல்லாக் குறுக்குவழிகளினூடாகவும் நாட்டைக் கொண்டு போக அவர் தயாராகிவிட்டார்.

சமாதானத்தின் கதியும் அநேகமாக இப்படித்தான் இருக்கும் போலத் தோன்றுகிறது. நாடாளுமன்றத்தில் தனது கூட்டுமுன்னணியை ஸ்தரப்படுத்துவதற்கான ஒரு குறுக்குவழியாகவே அவர் சமாதானம் செய்யத் தொடங்கியுள்ளார். அதாவது, அவரைப்பொறுத்தவரை சமாதானம் எனப்படுவது ஒரு குறுக்குவழிதான். அதேசமயம் அந்தச் சமாதானத்தை அடைவதற்கு உரிய குறுக்குவழிகளையும் அவர் இனிக்கண்டு பிடிப்பார்.

யுத்தத்தில் குறுக்குவழிகள் இருக்கலாம். மாறாக சமாதானத்துக்குக் குறுக்குவழிகள் கிடையாது. விசுவாசமாகச் சமாதானம் செய்வதென்றால் அங்கே குறுக்குவழிகளுக்கு இடமில்லை. பரஸ்பரம் நம்பிக்கைகளின்மீது கட்டியெழுப்பப்படுவதே சமாதானம்.

இதில் குறுக்குவழிகளைத்தேடுவது என்பது சமாதானத்தின் வெளிப்படைத்தன்மையை சோதனைக் குள்ளாக்கும். முன்பு சந்திரிகாவுடன் செய்யப்பட்ட சமாதான முயற்சிகளை புலி களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வஞ்சகத்தின் அரசியல் - Politics of Duplicity - என்று வர்ணித்திருப்பதை இங்கே சுட்டிக் காட்டவேண்டும்.

இத்தகைய ஒரு பின்னணியில் இப்பொழுது சந்திரிகா சமாதானம் செய்யவேண்டுமானால் முக்கியமாக மூன்று தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும்.

முதலாவது, புலிகளுக்கும் அவருக்கும் இடையில் கடந்த பத்தாண்டுகளாக உருவாகி வந்திருக்கும் இடைவெளியைக் குறைத்து ஆகக்கூடியபட்ச புரிந்துணர்வு ஒன்றை உருவாக்குவது.

இரண்டாவது, சமாதானத்தை மக்கள் மயப்படுத்துவது.

மூன்றாவது, ஜே.வி.பி.யை சமாதானத்தின் பங்காளியாக்குவது.

இம்மூன்றையும் செய்வதானால் அவர் ஒன்றேயொன்றைச் செய்தாலே போதும். அதுதான் விசுவாசமாகச் சமாதானம் செய்வது. விசுவாசமாகச் சமாதானம் செய்வாராக இருந்தால் அதற்குக் குறுக்குவழிகளைத் தேடவேண்டியிருக்காது. விசுவாசமாகச் செய்யப்படும் சமாதானத்தில்தான் சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே மெய்யான புரிந்துணர்வு உண்டாகும்.

ரணிலுடனான சமாதானத்தில் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே முழு அளவிலான புரிந்துணர்வு இருந்தது என்பதல்ல. ஆனால் சமாதானத்துக்கான தனது விசுவாசத்தை வெளிப்படுத்தும் நல்லெண்ணச் சமிக்ஞைகள் பலவற்றை ரணில் ஆரம்பத்தில் வெளிப்படுத்தியிருந்தார். புலிகளின் மீதான தடையை நீக்கியது, மூடிக்கிடந்த பாதைகளைத் திறந்தது, காவலரண்களை அகற்றியது, சோதனைச்சாவடிகளை அகற்றியது... போன்ற சில நல்லெண்ணச் சமிக்ஞைகளை அவர் வெளிக்காட்டியிருந்தார்.

> யுத்தத்தில் குறுக்குவழிகள் இருக்கலாம். மாறாக சமாதானத்துக்குக் குறுக்குவழிகள் கிடையாது. விசுவாசமாகச் சமாதானம் செய்வதென்றால் அங்கே குறுக்குவழிகளுக்கு இடமில்லை. பரஸ்பரம் நம்பிக்கைகளின் மீது கட்டியெழுப்பப்படுவதே சமாதானம்.
>
> இதில் குறுக்குவழிகளைத்தேடுவது என்பது சமாதானத்தின் வெளிப்படைத் தன்மையை சோதனைக்குள்ளாக்கும். முன்பு சந்திரிகாவுடன் செய்யப்பட்ட சமாதான முயற்சிகளை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வஞ்சகத்தின் அரசியல் -Politics of Duplicity- என்று வர்ணித்திருப்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆனால் சந்திரிகாவைப் பொறுத்தவரை,அவருடன் ஏற்கெனவே ஒருதடவை சமாதானம் செய்த கசப்பான ஒரு மனப்பதிவு தமிழர்களுக்கு உண்டு. அவருடைய சமாதானத்துக்கான யுத்தத்தின் குரூரம் பொய்த்தன்மை கபடம் போன்றவைகள் குறித்து தமிழர்களின் மனதில் ஆழப்படிந்துள்ள பயங்கரமான முற்கற்பிதங்களை களைய வேண்டிய ஒரு முதற்பணி சந்திரிகாவுக்குண்டு.

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலுக்கு முதல்நாள் அவர் தமிழர்களுக்கு ஆற்றிய விசேட உரையில் மென்மையாக மன்னிப்புக் கேட்டிருந்தார். குறிப்பாக அந்த உரையில், யாழ்ப்பாணத்தின் வெற்றியை தனது அரசு கொண்டாடிய விதம் குறித்து முதற்தடவையாக வெளிப்படையாக வருத்தம் தெரிவித்திருந்தார். ஆனால் தமிழர்கள் அதை வெறுமனே ஒரு தேர்தல்கால தந்திரமாகவே பார்க்கிறார்கள். தவிர, அவருடைய வாக்குறுதிகளோ அல்லது மன்னிப்புக்களோ தமிழர்களுடைய காயங்களை ஆற்றலாம் என்றிருந்த காலங்கள் யாவும் எப்பொழுதோ தீர்ந்துபோய் விட்டன. இனி எதையும் செய்து காட்டினால்தான் உண்டு. சமாதானத்தைப் பொறுத்தவரை இது செயலுக்கான காலம்.

இப்பொழுதுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை கோட்பாட்டுரீதியாக அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலானதுதான். எனினும் நடைமுறையில் புரிந்துணர்வு உருவாகியது ரணிலுக்கும் புலிகளுக்கும் இடையில்தான். ஆனால் அதே அளவு புரிந்துணர்வு சந்திரிகாவுக்கும் புலிகளுக்கும் இடையில் இன்னமும் உருவாகி விடவில்லை.

எனவே, இப்பொழுது புரிந்துணர்வு உடன்படிக்கை உண்டு. ஆனால் மெய்யான புரிந்துணர்வு இல்லை. இதை உருவாக்குவதென்றால் சந்திரிகா துலக்கமான, திட்டவட்டமான நல்லெண்ணச் சமிக்ஞைகளை வெளிப்படுத்தியாகவேண்டும். அப்படிச் செய்தால்தான் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு கனம் ஏறும். அவர் அப்படி ஏதும் செய்வாரா?

மற்றது, சமாதானத்தை மக்கள் மயப்படுத்துவது. ரணில் இதைச் செய்யவில்லை. சந்திரிகாவும் செய்வது கடினம். ஏனெனில், ரணிலை அகற்றுவதற்கு அவர் சொன்ன பொய்கள் கற்பனைகள் எல்லாவற்றையும் அவர் மறுதலித்தால்தான் சமாதானத்தை மக்கள் மயப்படுத்தமுடியும். இதற்கு சிங்களவர்களின் மறதியைக்கூட்ட ஏதாவது மருந்து கொடுக்கவேண்டும். அல்லது சந்திரிகா சமாதானத்தின் தியாகியாக மாறுவது என்று முடிவெடுக்கவேண்டும். இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா?

மூன்றாவது, ஜே.வி.பி.யை சமாதானத்தின் பங்காளியாக்குவது. இதிலொருவிசயத்தை முதலில் தெளிவுபடுத்தவேண்டும். ஜே.வி.பி. "சமாதானத்தின்" எதிரிபோல தோற்றம் தருகிறதே தவிர மெய்யாகவே அது "சமாதானத்தை" எதிர்க்கவில்லை. இலங்கைத்தீவில் இப்பொழுது எந்தக்கட்சிக்கு யுத்தநிறுத்தம் அதிகம் தேவைப்படுகிறது என்றுபார்த்தால் அது ஜே.வி.பி.தான். ஏனெனில் துரிதமாக வளர்ந்துவரும் ஒரு கட்சி என்ற அடிப்படையில், யுத்தநிறுத்தம் நிலவினால்தான் அவர்கள் இப்பொழுது பெற்றுள்ள அமைச்சுக்களை வைத்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து தமது ஆதரவுத்தளத்தை மேலும் பலப்படுத்தமுடியும்.

ஆனால் இதை அவர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில் சமாதானத்தை தப்பாக அர்த்தப்படுத்தியே அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றார்கள். இதில் சந்திரிகாவை விடவும் படு தீவிரமாக சமாதானத்தைக் காட்டிக்கொடுத்தது அவர்களே. எனவே அவர்கள் திடீரென்று 180 பாகையில் திரும்புவது என்றால் அது அவர்களைப்பற்றி சிங்கள வெகுசனங்களின் மத்தியில் உள்ள படிமத்தை உடைத்துவிடும்.

தவிர, ஹெல உறுமயவும் எங்கே ஜே.வி.பி சறுக்கும் என்று பார்த்துக்கொண்டிருக்கிறது. ஜே.வி.பி. எவ்வளவுக்கெவ்வளவு "சமாதானத்தை" நோக்கிப்போகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு ஆதரவான தீவிரவாதிகள் ஹெல உறுமயவை நோக்கிப்போவார்கள்.

இத்தகைய ஒரு பின்னணியில் அவர்கள் சமாதான முயற்சிகளை வெளிப்படையாக ஆதரிக்கமுடியாது. ஆனால் உள்ளூர சந்திரிகா செய்பவற்றுக்கு அவர்கள் ஆதரவுதான். ஆனால் சமாதானம் பிசகும் என்று கண்டால் அவர்கள் சந்திரிகாவையும் சமாதானத்தோடு சேர்த்து காட்டிக்கொடுத்துவிடுவார்கள். எனவே அவர்களை சமாதானத்தின் பங்காளிகளாக்குவது ஒரு முக்கிய முன் நிபந்தனையாகும்.

இல்லையென்றால், தான் செய்யவிரும்பாத எல்லாவற்றிற்கும் சந்திரிகா, ஜே.வி.பி.யை சாட்டாகக் கூறத்தொடங்கிவிடுவார். முன்பு ரணில் எப்படி சந்திரிகாவை சாட்டாகக் கூறிவந்தாரோ அப்படி.

எனவே சமாதானம் செய்யும் போது ஜே.வி.பி.யை ஒரு பங்காளியாக்கும் பொறுப்பை சந்திரிகா தட்டிக்கழிக்கமுடியாது. அவர் அப்படித் தட்டிக்கழிப்பாராக இருந்தால் அவர் ஏதோ குறுக்குவழிகளைப்பற்றிச் சிந்திக்கிறார் என்று அர்த்தம். அதாவது சமாதானத்துக்கு விசுவாசம் இல்லை என்று அர்த்தம்.

அவர் விசுவாசம் இல்லை என்பது ஏற்கெனவே நன்கு தெரிந்த ஒரு விசயம்தான். ஆனால், அவருடைய விசுவாசத்தையும் விசுவாசமின்மையையும் அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு இருக்கிறது. சர்வதேச சமூகம் அந்தவேலையைச் செய்யும் வரையிலுமாவது சந்திரிகாவை சமாதானம் செய்யவிடுவது தமிழர்களை ராஜீய அர்த்தத்தில் மேலும் பலப்படுத்தும்.

உண்மையான நட்புறவு இல்லாமையே,மிகக் கொடிய தனிமை. - ஃபிரான்ஸிஸ் பேக்கன்

# நறுக்கென...

## ஓநாய்களின் கூட்டும் நரியின் துதிப் பாட்டும்



மட்டக்களப்பில் தொடர்ந்தும் கருணா கும்பலின் கொலை வெறித்தாண்டவம் அரசபடைகளின் அவதானிப்புடன் கூடிய அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவருவதானது விடுதலைப புலிகளை சீண்டி அவர்களுக்கு சினமூட்டி போர் நிலைகளை மீண்டும் உருவாக்கும் உள்நோக்கு சதித்திட்டத்தை கொண்டதே என்பது அங்கிருந்து வரும் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அவர்களது முகாம்கள், காவலரண்கள், சோதனைச் சாவடிகள் ஆகியவற்றைத் தாண்டி ஆயுதங்களுடன் வருவோர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து அவல நிகழ்வுகளை ஏற்படுத்திவிட்டு அதேபகுதியூடாக மீண்டும் சென்று தப்பிவிடுகின்றனர் என்பதன் அடிப்படையில் பார்த்தால், படைதரப்பின் பாதுகாப்புடன் கூடிய ஒத்துழைப்பு இந்தக் கொலைக் கும்பலுக்கு உள்ளது என்பது தெளிவாகும்.

ஏற்கெனவே 41நாட்கள் ஒரு அராஜக ஆட்சியை கிழக்கில் மேற்கொண்ட கருணா குழுவினர் செய்த அட்டகாசங்களை நான்கே நாளில் விடுதலைப்புலிகள் ஒடுக்கியபோது அதனை எதிர்கொள்ளமுடியாது ஓட்டம் பிடித்த கருணா அவரது அடியாட்களும் இராணுவ உதவியுடன் காட்டுப்பகுதியிலிருந்து தப்பியோடி இராணுவப் பாதுகாப்பு எங்கோ தலைமறைவாக இருப்பதும் மக்களால் பரவலாகப் பேசப்படும் விடயமாகும்.

அதுமட்டுமல்ல அந்த 41 நாட்களில் பலதடவைகள் கருணா ஒழிந்திருப்பது தொப்பிகலக் காட்டுப்பகுதிக்குள் இராணுவ ஹெலிகள் வந்திறங்கிச் சென்றதையும், புளொட் மோகன் உட்பட பல இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் அவருடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்ததையும் கூட ஊடகச்செய்திகள் உறுதிப்படுத்தியுமிருந்தன.

எல்லாவற்றையும் விட கருணா ஓட்டம் பிடிப்பதற்கு இரண்டொருநாட்களின் முன்னர் சிறிலங்கா இராணுவத் தளபதி லயனல் பலகல்லே கருணா புகழ்பாடியதையும் ஊடகங்கள் பெரிதாகப் பிரசுரித்திருந்தன.

இந்த துதிப்பாடல் எந்தநோக்கில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பதை விபரிக்க வேண்டிய தேவையே கிடையாது. ஒரு நாட்டின் இராணுவத் தளபதியானவர் ஒரு காலத்தில் அவரின் பிரதான இலக்குகளில் ஒருவராக விளங்கிய எதிரி ஒருவரை பாராட்டுகிறார் என்றால்...!

சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

புளொட்மோகனே 'பலகல்லே'வுடனான கருணாவின் தொடர்புப் பாலம் என்று கிழக்குத் தகவல்கள் கூறுவதை நிராகரிக்க முடியாது.

இந்த அடிப்படையில் பார்த்தால் பலகல்லே - புளொட்மோகன் - கருணா அணியின் கூட்டுச் சதியே கிழக்கின் அனர்த்தங்களாகியுள்ளன என்பது உண்மையென்றே தோன்றுகின்றது.

கருணா சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்தமையாலேயே அவருக்கு படைத்தரப்பு ஆசீர்வாதம் கிடைத்துள்ளது போலும்.

ஒரு தமிழ்த்தேசியம் பேசிய நபர் பிரதேச வாதம் கக்கியபடி பேரினவாதிகளிடம் சரணடைந்துள்ளமையானது விசித்திரமானது தான்...

## சபாஷ் 'சரியான போட்டி' கச்சிதமான பட்டம்



"தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டமையானது நாட்டுக்கும் மக்களுக்கும் ஜே.வி.பி. செய்த துரோகம்"

இது ஹெல உறுமய ஜே.வி.பி.க்கு கொடுத்துள்ள புதிய நற்சாட்சிப் பத்திரமாகும். ஏற்கனவே ஜே.வி.பி.யை ஹெலஉறுமய பிக்குகள் பௌத்தமதத்தின் எதிரிகள் சபாநாயகர் தேர்தலின் பின்னர் வர்ணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய அரசுக்கு முழுமையாக ஆதரவு வழங்க ஆரம்பத்தில் ஹெலஉறுமயவினர் முன்வந்தபோதிலும் பின்னர் பிக்குகளுக்கிடையே ஏற்பட்டகருத்து மோதல் காரணமாக சபாநாயகர் தேர்தலில் அரசு தோல்வியடைய அவர்கள் காரணமானதால், நாடாளுமன்றத்தின் முதல் நாள் அமர்விலேயே ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டு அவமதிக்கப்பட்ட கசப்பான அனுபவம் அவர்களுக்கு ஏற்பட்டது.

ஜே.வி.பி.யினர் அவர்களைத் துரோகிகள் என தூற்றினர்.

இப்போது ஹெல உறுமயவினர் ஜே.வி.பியினரை துரோகிகள் என்கின்றனர். ஆக இப்போது இரு தரப்பினருள் யார் உண்மையான துரோகிகள் என்பதைத் தெரிவுசெய்யும் பொறுப்பு பௌத்த சிங்கள மக்களுக்குரியதாகிவிட்டது. எனவே இந்த நிலையில் ஹெலஉறுமய பிக்குகள் எதிர்காலத்தில் அரசுக்கான ஆதரவை விலக்கி தனியாகச் செயற்படும் வாய்ப்பே அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால் அந்த நவக்கிரகங்களில் (ஒன்பது ஹெல உறுமய உறுப்பினர்களான பிக்குகள்) எத்தனைகிரகங்கள் அரசுட்னும், எத்தனை எதிர்க்கட்சியுடனும் எத்தனை நடு நிலையாகவும் சேர்ந்து செயற்படும் என்பதை இப்போது வரையறைசெய்து கூறமுடியாது.

அந்தளவுக்கு ஹெலஉறுமயவின் ஒருமைப்பாட்டுணர்வின் இரக்கம் உள்ளது.


முகப்புப் பெயர் ஜாதிகஹெலஉறுமய, உண்மைப்பெயர் சிகலஉறுமய என எல்லாவற்றிலுமே முரண்பாடுகளின் மூட்டைகளாகி நிற்கும் ஹெல உறுமயவினரின் இலட்சியம் சமாதான முயற்சிகளை எதிர்ப்பதுடன், விடுதலைப்புலிகளைப்போரில் தோற்கடிப்பது என்பவையேயாகும்.

சிகலஉறுமய பேரில் நேரடியாகப்போட்டியிட்டு மக்கள் ஆதரவை வெல்லமுடியாமல் தோற்றுப்போன திலக்கருணாநாயக்கா குழுவினர் பிக்குகளை தேர்தலில் போட்டியிடவைத்து மக்களின் மதகுருமார் மீதான மதிப்பு என்ற பலவீனத்தைப் பயன்படுத்தி வெற்றிபெறவைத்து ஆவர்களைத் தமது அரசியல் அபிலாஷைகளை எட்டுவதற்கான பகடைக்காய்களாகப் பயன்படுத்த மேற்கொண்ட 'சதி'யை ராஜதந்திரம் என்றா கூறப்போகின்றனர்?

இதுவே பச்சைத் துரோகம்?

காவி அங்கிதாரிகளுக்கு ஏற்படுத்திய மோசமான அவமதிப்பு, எதுவானாலும் ஜே.வி.பி.யும், ஹெலஉறுமயவும் ஆளையாள் துரோகிகள் என்பது சுவையான விடயமேயாகும்.

## இத்தனை கோவமா? 'சென்'னுக்கு வரலாமா?



கடைசியா சட்டியில் இருந்தது அகப்பை மூலம் வெளிவந்து விட்டது. இல்லை... இப்படிச் சொல்வதே பொருத்தம்... ஆழ் மனதில் இருந்த கொதிப்பும் கோபமும் வாய்விட்டு கொட்டவேண்டிய நிலைக்கு வந்தேவிட்டது.

இந்தியத்தூதர் நிருபம்சென் இலங்கைத் தமிழ்ப்பத்திரிகைகள் மீது வாய் வைத்ததைத்தான் கூறுகின்றேன்....

ஒரு தடவை அந்தப் புகழ்பெற்ற அரசியல்வாதியான வின்ஸ்டன் சேர்ச்சிலிடம் நிருபர் ஒருவர் கேட்டார்.

"உங்களைக் கண்டபடி தாக்கி எழுதிவிமர்சிக்கும் பத்திரிகைகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

அதற்கு, "அவர்களுக்கு நான் நன்றியுடையவனாக இருக்கிறேன்.... நான் எதனை செய்யக்கூடாதோ அதனைமுன்கூட்டியே எழுதி... அப்படிச் செய்தால் எப்படிவிமர்சிப்போம் என்று எச்சரிக்கையும் செய்கிறார்களல்லவா...? - என்றாராம் சேர்ச்சில்... பிறகு ஏதோ யோசித்துவிட்டு,

"பொய் வெல்லாது... அப்படி வென்றாலும்... உண்மை சுடும்..." என்றும் கூறினாராம் பூடகமாக.

அது அவர்பாணி, நிருபம் சென்னின் பாணி ஒரு ராஜதந்திரியின் தகைமை கொண்டதாகத் தென்படவில்லை... உண்மை வெளிப்பட்ட எரிச்சலில் சீற்றமும் சினமும் கொண்டு அர்த்தமின்றி கூச்சலிடும் ஒருவரின் இயலாமையே வெளிப்பட்டுள்ளது.

இலங்கைத்தமிழ்ப்பத்திரிகைகள் இலங்கைதொடர்பான இந்தியாவின் கொள்கைகள் குறித்து வெளியிடும் செய்திகள் - விமர்சனங்கள் அனாவசியமானதாகவும் நேர்மையற்ற வகையிலும் உள்ளதாம்!

இலங்கையில் என்ன நடந்தாலும் அதற்கு இந்தியா தான் காரணம் என இங்குள்ள பத்திரிகைகள் குற்றம் சாட்டுகிறார்களாம்!

இது சென் அவர்களின் சினக் கூற்று.

இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கையின் சுயநலத்துவத்தன்மையும் பக்கச்சார்பான அணுகுமுறையும், நேர்மையற்றதும் நீதியற்றதுமான தன்மையும் தமிழர்களோ தமிழ்பத்திரிகையாளர்களோ அறியாத விடயங்களல்ல.


இந்திய அரசு சிங்கள அரசியல் தலைமைகளுக்கு பின்பலமாக நின்று அவர்களின் தேவைகளுக்கு உதவி, தனது தேவைகளையும் நிறைவு செய்ய முயல்வதன் மூலம் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கமுயன்று தமிழர்களின் இன்றைய அவலங்களுக்கு காரணமான பங்காளியாக தன்னை இனங்காட்டி நிற்பது ஒன்றும் ரகசியமான விடயமுமல்ல...

போர்க்காலத்தில் போரிடும் இலங்கையரசுக்கு எவ்வகையில் இந்திய அரசு உதவியது என்பதும் சமாதான காலத்தில் அதற்கு எதிரான சக்திகளாக எவ்வாறு ரகசியமாக உற்சாகப்படுத்தி வந்த தென்பதும் கூட தமிழர்களோ, தமிழ்ப்பத்திரிகையாளர்களோ அறியாததல்ல...

அதனால் அவர்கள் உண்மையை எழுதினார்கள்... எழுதுகிறார்கள்... இனிமேலும் எழுதவே செய்வார்கள். அவர்கள் சனநாயக உரிமை அதுவாகும்.

அதில் சென் தலையிடுவதும், அதனை எரிச்சலுடன் விமர்சிப்பதும், தமிழ் பத்திரிகையாளர்களைக் குற்றம்சாட்டி அவமதிப்பதும் உலகம் நம்பும் காந்தீயப்பாரதத்தின் சனநாயகப் பண்புக்கு ஏற்றதல்ல... நிருபம் சென்னின் கருத்தை பெரும்பாலான தமிழுணர்வுள்ள தமிழர்களின் பத்திரிகைகள் நிராகரித்திருப்பதே அதற்குச் சான்றாகும்.

## மனிதத்தன்மையை மீறிய பாதகமான செயற்பாடுகள்



ஈராக்கியக் கைதிகள் மீதான சித்திரவதைக் கொடுமைகள் அமெரிக்காவினதும் அதனோடு சேர்ந்து ஈராக்மீதான படையெடுப்புக்குக் காரணமான பிரிட்டன் போன்ற நாடுகளினதும் மனித உரிமை தொடர்பாக கண்டனத்துக்குள்ளாகிவிட்டது.

சர்வதேசப் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தில் இந்த நாடுகளின் சர்வதேசசமூகம் மீதான சர்வாதிகார ஆக்கிரமிப்புப்போக்கு ஈராக் மீது மேற்கொண்ட எந்தவகையிலும் நியாயப்படுத்தவே முடியாத போரின் காரணமாக அந்த நாடு இன்று அமைதி பேணப்போனதாகக் கூறப்படும் அந்நிய இராணுவத்தின் நிலைகொள்ளல் காரணமாக அன்றாடம் சின்னாபின்னமாகிவருகிறது.

முன்பு இருந்த ஆட்சிக்கால நெருக்குவாரங்களைவிடவும் மிக மிக மோசமான அநாகரிகமான மனிதஉரிமைமீறல் சம்பவங்களின் பயிற்சிக் களமாக அமெரிக்காவும் அதன்பிற்பாட்டு நாடுகளும் ஈராக்கை பயன்படுத்திவருகிறார்கள் என்ற அச்சமூட்டும் செய்தியையே ஈராக் கைதிகள் மீதான அமெரிக்க இராணுவத்தின் இரணிய நடவடிக்கைகளும், சித்திரவதைகளும் வெளிப்படுத்தியுள்ளன.

வியட்னாம் முதல் ஈராக் வரையான ஆக்கிரமிப்புக்குள்ளான சகல நாடுகளிலும், அந்த நாட்டின் மக்கள் மீது மேற்கொண்ட மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்க முடியாத நிலையிலுள்ளனர். இந்தச் செயலை மனிதநேயமும் மனச்சாட்சியும் உள்ள எவரும் பரிந்து பேசவும் முடியாது வாய்மூடி இருக்கவும் முடியாது.

பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்டும் அமெரிக்க தலைமையும் விடுக்கும் முன்னுக்குப் பின் முரணான அறிக்கைச் சமாளிப்புகள் அமெரிக்காவை அவமானப்படுத்துபவையாகவே உள்ளது.

'சனநாயகத்தில் எல்லாமே சரியாக நடக்கும் என்று கூறிவிடமுடியாது என்று கூறும் ரம்ஸ்பீல்ட் அமெரிக்க சனநாயகம் சரியாக நடக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறார் என்றே கூறவேண்டும்.

அமெரிக்க சுதந்திரச் சிலையே அவமானத்தால் தலைகுனிந்து நிற்குமளவிற்கு இரத்தவாடை வீசும் சித்திரவதை முகாம்களின் நடவடிக்கைகள் அமைத்துவிட்டது என்ற எண்ணம் இன்று அமெரிக்காவின் அமைதி விரும்பிய மக்களிடம் ஏற்பட்டுவிட்டதையே, ஈராக்கில் இருக்கும் அமெரிக்கப்படைகளை திருப்பி அழை என்று அவர்கள் எழுப்பிவரும் கோஷம் நிரூபிப்பதாக உள்ளது.

அமெரிக்கத்துருப்பினரின் இந்த நடவடிக்கை உலக மக்கள் மத்தியில் அமெரிக்கா தொடர்பாக மோசமான எண்ணப்பாட்டையே தோற்றுவித்துள்ளது.

**— செங்குட்டுவன்**

# சமாதானம் எந்த தடத்தில்?

**சிறி. இந்திரகுமார்**

இந்தவாரம் சமாதான முயற்சியின் முக்கியவாரமாக அமைந்துவிட்டது.

காரணம் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களுடனான நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர் சனின் சந்திப்பு இதற்கு ஒரு காரணம்.

இப்போது சமாதானம் தொடர்பான ஆர்வம் சூடுபிடித்துள்ளது.

ஆனால் சனாதிபதி சந்திரிகா தன்னுடைய பலத்தை இன்னும் நாடாளுமன்றத்தில் நிரூபிக்காத நிலையில் அதுவும் அவரால் நிருபிக்கணமுடியுமா? என்ற நிலையில், சமாதானக் குதிரையின் வேகத்தைச் முடுக்கிவிட்டுள்ளார் என்ற சந்தேகம் எங்கும் வியாபித்துள்ள நிலையில் தலைவர் பிரபாகரனுடனான ஜோன்பீற்றர்சனின் சந்திப்பு நடந்துள்ளது.

இப்போது இரண்டு நிலைப்பாடுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஒன்று -சமாதானம் தொடர்பான புலிகளின் நிலைப்பாடு.

இரண்டு- சமாதானம் தொடர்பான அரசின் நிலைப்பாடு.

இந்த இரண்டு தரப்பினரின் நிலைப்பாடுகளுக்கும் கேள்விகளுக்கான தெளிவு ஒன்றை அல்லது இந்த இரண்டு நிலைப்பாட்டையும் ஒரு நேர்கோட்டில் கொண்டு வரும் முயற்சியின் தூதாகத்தான் நோர்வே குழுவினரின் முயற்சி அமைந்திருந்தது.

இதில் முதலாவதாக குறிப்பிட்டது போன்று சந்திரிகாவின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப சமாதானத்தைக்கொண்டுபோகமுடியாது. காரணம் - சந்திரிகாவுக்குப் பல நிலைப்பாடுகளின் அடிப்படையில் சமாதானம் தேவையாக உள்ளது.

ஒன்று -சந்திரிகா நாடாளுமன்றில் தனது அரசின் பலத்தை நிரூபிக்க வேண்டியுள்ளது.

இரண்டு- சந்திரிகா கூறிவரும் அரசியல் அமைப்பு மாற்றத்தை செய்யவேடியுள்ளது.

மூன்று- ரோக்கியோவில் வாக்களிக்ப்பட்ட 4.5 பில்லியன் டொலர் நிதியுதவியைப்பெற வேண்டும்.

என சந்திரிகாவின் சமாதானத் தேவை அதிகம்.

இந்த அடிப்படைகளுக்காக சந்திரிகா சமாதானத்தைக் கொண்டு செல்வாரானால் மெய்யான அர்த்தத்தில் சமாதானம் மூலம பெறமுயலும் எந்தக் கனியையும் பெற முடியாது.

அதோடு சந்திரிகாவின் விருப்பிலான சமாதானத்தில் தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடையாது, எந்தப் பலனையும் பெறமுடியாது,

ஆதலால்தான் சமாதானத்தை பொதுவான ஒரு நிலைப்பாட்டில் கொண்டு போகும் காரியத்தில் புலிகளின் தலைமை பாடுபடுகிறது.

இதில் முக்கியமாக பொதுவான நிலைப்பாட்டில் சமாதானத்தைக் கொண்டு போதல் என்பது புலிகள் சார்பு ரீதியான சமாதானம் என்று அர்த்தமல்ல.

அதாவது பொதுவான நிலைப்பாட்டுச் சமாதானம் என்பது தமிழ் மக்கள் விரும்புகின்றதன் அடிப்படையிலும் அவர்களின் ஆணையின் அடிப்படையிலும் ஏற்கனவே முன்னைய அரசும் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலுமானதாகும்- இது ஒரு பொது நிலைப்பாட்டுச் சமாதானமாகும்.





அதோடு மிக முக்கியமாக இன்றைய இலங்கையின் அரசியல் யதார்த்தத்தின் பால் தழுவிய சமாதானத்தைக் கொண்டு போகவே புலிகள் விரும்புகின்றனர்.

இதில் புலிகள் இயக்கம் தெளிவாக இருப்பதோடு அரசுக்கும், நோர்வேக்கும் தெளிவுபடுத்தவும் தவறவில்லை.

சமாதானத்தின் பலன் என்பது தமிழ் மக்களுக்கு ஒருவிமோசனத்தைப் பெறுவதற்குப் பதிலாக அரசுக்குக்குப் பலத்தை வழங்குவது அல்ல.

***முக்கியமாக இன்றைய இலங்கையின் அரசியல் யதார்த்தத்தின் பால் தழுவிய சமாதானத்தைக் கொண்டுபோகவே புலிகள் விரும்புகின்றனர்.***

***இதில் புலிகள் இயக்கம் தெளிவாக இருப்பதோடு அரசுக்கும், நோர்வேக்கும் தெளிவுபடுத்தவும் தவறவில்லை.***

***சமாதானத்தின் பலன் என்பது தமிழ் மக்களுக்கு ஒருவிமோசனத்தைப் பெறுவதற்குப் பதிலாக அரசுக்குக்குப் பலத்தை வழங்குவது அல்ல.***

இவை இரண்டையும் குழப்பியடிக்கும் வகையில்தான் சனாதிபதி சந்திரிகாவின் காரியங்களும் அவர் நோர்வேக் குழுவினரூடாகத் தெரிவிக்கும் விடயங்களும் இருக்கிறது.

ஆனால் புலிகள் இயக்கம் இதில் குழம்பிவிடவோ சந்திரிகா போன்று குழப்பிவிடவோ தயாரில்லை.

ஆதலால்தான் புலிகள் இயக்கம் சமாதனாப் பேச்சுக்கள் தொடங்குவதற்கு முன்பு சில வரையறைகளைத் தெளிவாக்கிக்கொள்ள விரும்புகிறது.

இந்த வரையறைகளைப் புலிகள் இயக்கம் வலியுறுத்துவது என்பது சமாதானத்தை மெய்யான அர்த்தத்தில் அதன் பாதையில் கொண்டுசெல்ல விரும்புவதே.

அதோடு நின்றுபோன சமாதான முயற்சி எங்கு நிறுத்தப்பட்டதோ அங்கிருந்தே தொடரப்பட வேண்டும் என்பதிலும் எதனை முதலில் பேச வேண்டிய தேவை உள்ளதோ அதனைப் பேசுவதிலுமே சமாதானத்தின் குதிரை விரைந்துபாயமுடியும்.

ஏற்கனவே சமாதானப் பேச்சில் எவை பற்றிப் பேச வேண்டும், என்பதையும் எவர் சமாதானப் பேச்சில் சம பங்காளியாக பேச வேண்டும் என்பதையும் சமாதானப் பேச்சு எங்கு நடைபெற வேண்டும் என்பதெல்லாம் நிர்ணயிக்கபடட ஒரு நிறைவான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் வகுக்கப்பட்ட தற்கமைவாகவே சமாதானப் பேச்சுத் தொடர்ந்தது. அதன் சுவட்டில்தான் இப்போது தொடரவேண்டும் என புலிகள் இயக்கம் விரும்புகிறது.

இதெல்லாம் ஒரு ஒழுங்கமைவின் அடிப்படையில் சமாதானக் குதிரையை இயல்பாகப்பாய விடுவதாகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவின் அரசு சமாதானப் பேச்சுக்களை இலங்கைக்குள்ளேயே நடத்தவேண்டும் என விரும்புவதும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சோடு நிரந்தர தீர்வையும் சேர்த்தே பேசவேண்டும் என்பதும் பலவீனமான அடித்தளத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப விரும்புவதையே காட்டுகிறது.

ஏனெனில் ஏற்கனவே மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டது போல, சர்வதேச மயப்பட்டுவிட்ட தமிழ் மக்களின் பிரச்சினையை ஒரு உள்நாட்டுப் பிரச்சினைபோன்று கீழிறக்க முயல்கிறது அரசு. இவற்றிற்கு இணங்கிப் போவதாக இருந்தால,

இதன் மூலம் நான்கு வருடங்களுக்கு மேலாகப் புலிகள் பாடுபட்டு சர்வதேச ரீதியாக புலிகள் தொடர்பாக ஏற்படுத்தியிருக்கும் ராஜீக அந்தஸ்த்தையும் கௌரவத்தையும் சிதைத்து விடுவதாக அமைந்துவிடும்!

சந்திரிகா அரசு இப்போது எதனையும் இறுமாப்போடு பேச முடியாது. சந்திரிகா நினைப்பது போலெல்லாம் காரியமாற்றுவதற்கு சந்திரிகாவுக்கு பலம் இல்லை. சந்திரிகாவின் அரசு இப்போது ஒரு பலவீனமான அரசு இதற்குள்ளும் சந்திரிகா அரசு ஒரு அரசியல் லாபத்தை ஈட்டிவிட முனைகிறது. அதாவது இருபத்தைந்து மில்லியன் ரூபா வரை விலைபேசி பெறமுடியாதுபோன ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்குப்பதிலாக சமாதான முயற்சியின் பெயரால் புலிகள் வசம் இருக்கும். தமிழ் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தை தனக்குச் சாதகமாகத் திருப்பலாம் என எண்ணுகிறாது.

இந்த நிலையில் சந்திரிகா விரும்புவது போன்று இறுதித்தீர்வு நோக்கி பேசவேண்டுமானால் முதலில் சந்திரிகாவும் அவரது அரசும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சை நடாத்தி தமிழ் மக்களுக்கு அதுகிட்ட செய்வதன்மூலம் தன்னை நிருபிக்கவேண்டும்.

இதுவரை சந்திரிகாவின் நடவடிக்கை சமாதானத்துக்கு விரோதமானதாகவே இருந்து வந்துள்ளது. இனிமேல்தான் அவர் சமாதானத்தின் பற்றுதலுக்காக உழைக்க வேண்டியிருக்கிறது.

மாறாக அரசியல் சதுரங்க் ஆட்டத்தின் ஒரு காயாக சமாதானத்தைப் பயன்படுத்துவாரானால்

சந்திரிகா போடும் கணக்குகளுக்கு ஏற்ப புலிகள்செயற்படமாட்டார்கள் இல்லை. சந்திரிகா 1994 இல் யாழ்ப்பாணப பேச்சுவார்த்தைகளின் போது சந்தித்தது போன்றோ அல்லது ரணிலின் அரசோடு பேசிய போது இருந்தது போன்றோ புலிகள் இல்லை.

சந்திரிகாவும் கதிர்காமரும் கூறிய போன்று புலிகள் போர் வெறியர்கள் என்பதை அவர்களால் நிருபிக்க முடியவில்லை. ஆனால் புலிகள் தாங்கள் சமாதானப் பிரியர்கள் என்பதை நிருபித்து விட்டாகள்.

இதனை எப்படியெல்லாம் நிருபிக்க வேண்டுமோ அப்படியெல்லாம் புலிகள் சர்வதேசத்தின் முன்னாள் தங்களை நிருபித்துவிட்டார்கள். நிருபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் புலிகள் இயக்கம் தெளிவாகவும் நிதானமாகவும் சமாதானத்தைக் கொண்டுபோக விரும்புவதால் சில வரையறைகளை வலியுறுத்தவும் செய்கிறார்கள்.

இலங்கையில் நான்காண்டுகால சமாதான முயற்சியில் சமாதானத்தைப் பாதுகாத்த சமாதானப் பாதுகாவலர்கள் ஒரு வகையில் புலிகள் தான்.

ஏனென்றால் சந்திரிகா சமாதானத்தைக் குழப்பி இருக்கிறார் ரணிலின் அரசு சமாதானத்தை கைவிட்டு இருக்கிறது. ஆனால் புலிகள் மட்டும் அமைதி காத்து சமாதானத்தை பாதுகாத்திருக்கிறார்கள்.

உன்னகத்தே உள்ள நோக்கங்கள் உன்னை வழி நடத்திச் செல்லட்டும்.நாணயமாக,மற்றவர்களை நடத்து. - மிக்கேல் கேலினின்

நேர் நோக்கு

# யதார்த்தத்தை நோக்கி ஜே.பி.வி

அதிகாரத் திற்குவந்துள்ள ஜே.வி.பி அந்த அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள பல சமரசங்களுக்கு வந்துள்ளமையை அதன் கடந்த சில நாட்கள் நடவடிக்கைகள் காட்டுகின்றன. ஒன்று அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டது. இரண்டாவதும் முக்கியமானது மானவிடயம் இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வுகாண விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது தவிர்க்கமுடியாதது என அதற்கு ஏற்பட்டிருக்கின்றதெளிவு.

(01) விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டுமென்பது தெளிவானவிடயம்.

(02) விடுதலைப் புலிகள் அமைப்பு தற்போதுள்ள பலம்வாய்ந்த அமைப்பாகும். அதனைப் பலப்படுத்திய ஐக்கிய தேசிய கட்சியாகும்.

(03) விடுதலைப் புலிகளுடனும் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த நாம் . தீர்மானித்துள்ளோம்.

(04) விடுதலைப் புலிகள் அமைப்பு முக்கிய பங்காளியாக செயற்படுவதை எம்மால் தடுக்கமுடியாது.

என்றெல்லாம் ஜே.வி.பி யின் செயலாளர் ரில்வின்சில்வா தமது கட்சியின் தற்போதைய நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இவையெல்லாம் யதார்த்தத்தை நோக்கி- அல்லது அதிகாரத்தை எவ்வாறேனும் தக்கவைக்க யதார்த்த பூர்வமாகச் செய்யவேண்டியவை நோக்கி ஜே.வி.பி. செல்வதையே காட்டுகிறது.

ஏனெனில் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தெளிவான விடயம். ஆனால் இந்த தெளிவு அல்லது அதனை உணர்ந்து கொள்ள ஜே.வி.பி க்கு இவ்வளவு காலம் பிடித்திருக்காது. ஆனால் அதிகாரத்தைக்



கைப்பற்ற சுலபமான இனவாத ஆயுதத்தை அது பயன்படுத்தி வந்ததால் அதனை வெளிப்படுத்தமறுத்து வந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தற்போதுள்ள பலம்வாய்ந்த அமைப்பு என்றும் அதனைப் பலப்படுத்தியது ஐக்கிய தேசியக் கட்சியாகும் என்றும் அது கூறுகிறது. அதாவது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்ட பின்னரே புலிகள் இயக்கம் பலம்வாய்ந்த அமைப்பாக மாறியது என்பதே அதன் வாதமாகும். ஆனால் புலிகள் இயக்கம் பலம்வாய்ந்த அமைப்பாக இருந்த காரணத்தாலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு முன் வந்தது என்பதே உண்மையாகும். அதில் சந்தேகமிருந்தால் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க சனாதிபதி சந்திரிகா எடுத்த முயற்சிகளை அவரிடம் கேட்டறிந்து கொள்ளலாம். இப்பொழுதும் புலிகளின் பலம் குறித்து சனாதிபதி சந்திரிகாவிடம் ஐயமெதுவுமில்லாததாலேயே அவர் பேச்சுக்கு முன்வருகிறார்.

விடுதலைப் புலிகளுடனும் ஏனைய சம்பந்தப்பட்ட அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவோம் என ஜே.வி.பி கூறுகிறது. பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகளின் முக்கிய பங்களிப்புக் குறித்து ஜே.வி.பி ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புக்களுடனும் பேசப போவதாக கூறுவது வேடிக்கையான ஒரு விடயமாகும். ஒன்று தமிழ் மக்கள் சார்பில் பேச ஏனைய அமைப்பு என்று ஒன்றில்லை. சிலவேளைகளில் அது டக்ளஸ் தேவானந்தாவை கருதக்கூடும். ஆனால் அவருடன் பேசிப்பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதுடன் பேசவேண்டிய தேவையுமில்லை என்பது இதுவரையும் ஜே.வி.பிக்கு புரிந்திருக்கவேண்டும். அப்படிப் புரிந்திருந்தாலும்கூட ஏனைய தரப்பு பற்றி ஜே.வி.பி. இப்பொழுது பேசவேண்டிய தேவையுள்ளது. ஏனெனில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக புலிகளுக்கு இராணுவத்தீர்வை முன்வைத்திருந்த ஜே.வி.பி இப்பொழுது புலிகளுடன் பேசவேண்டியது தவிர்க்கமுடியாது என்ற விடயத்தை தெளிவுபடுத்தியிருக்கிறது. ஆனால் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ள அல்லது வெளிப்படுத்த இதன்மூலம் மறுக்கிறது.

அதற்குக் காரணம் இதுவரை காலமும் அதுவெளியிட்டு வந்த வீரப் பிரதாப வார்த்தைகளை ஒரேயடியாக விட்டுவிடமுடியாமல் உள்ளதாலாகும். காலப்போக்கில் அல்லது தாம் பெற்றுள்ள அதிகாரத்தை காப்பாற்றிக்கொள்ள அது மேலும் இறங்கி வரவும் கூடும்.

தேர்தலுக்கு முன் வெளிநாட்டு நிதி உதவி தேவையில்லையென முழங்கியவர்கள் இப்பொழுது யதார்த்தத்தை உணர்ந்து அதனைப் பெறும் முயற்சியை நோக்கிச் செல்லப்போகின்றனர். அதற்கா அவர்கள் இவ்வளவு காலமும் பேசிவந்த கொள்கைகள் தத்துவங்களை கைவிடப் போகின்றனர். இவ்வாறெல்லாம் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள பல விடயங்களைக் கைவிடப்போகின்ற இவர்கள் அதிகாரம் பறிபோனால் மீண்டும் விக்கிரமாதித்தனின் வேதாளம் போல முருங்கைமரத்தில் ஏறக்கூடும்.

எது எவ்வாறிருப்பினும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண புலிகளுடன் மட்டுமே பேச வேண்டும் என்கின்ற யதார்த்தத்தை நோக்கி வரவேண்டிய நிலையிலேயே ஜே.வி.பி உள்ளது என்பது மட்டும் வெளிப்படை. ஆனால் அதனை ஜே.வி.பி. வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாது போகலாம் .

வேலவன்

# கிழக்கின் அசம்பாவிதங்களுக்கு அரசே பொறுப்பு...!

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஒரு அசாதாரண நிலைமைதான் காணப்படுகிறது.

இங்கு புலிகள் இயக்கப் போராளிகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைகளை செய்தவர்கள் இதுவரை இனம் காணப்படாதபோதும் அந்த கொலைகள் நடைபெற்ற இடமும் இந்தக்கொலைகள் நடைபெற்ற முறையையும் வைத்துப் பார்க்கும்போது இராணுவத்தினரின் உதவி இருந்திருக்கக் கூடும் என்ற சந்தேகம் வலுப்பெறும்வகையில் சம்பவங்களும், தாக்குதல் முறையும் காணப்படுகிறது.

இது புலிகள் இயக்கம் மீது திட்டமிட்டு நீண்டகால அடிப்படையில் நடைமுறைப் படுத்தமுயலும் ஒரு தாக்குதலாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கிறது.

அவ்வாறாயின் கிழக்கில் மேற்கொள்ளப்படும் தாக்குதலின் விளைவு நடைமுறையிலிருக்கும் யுத்த நிறுத்தத்தையும் நடைபெறப்போகும் சமாதான முயற்சிகளிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

இதனை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக அரசுக்கு எச்சரிக்கவும் தவறவில்லை. இதேநேரம் கிழக்கு நிலைமை தொடர்பாக கணகாணிப்புக்குழுவின் தலைவர் ரொன் புரூவ் ஹொவ்டே விடுத்த ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.

அவர் தனது அறிக்கையில்: கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை மிகவும் மோசமானது இது யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பாதிக்கக்கூடியது, எனச்சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனென்றால் சமாதான காலத்தில் புலிகள் இயக்கம் பல்வேறு . சம்பவங்களிலும் பல போராளிகளை இழந்துவிட்டது.

ஆயினும் புலிகள் இயக்கம் சமாதான முயற்சிக்கும் யுத்த நிறுத்தம் செம்மையாக நடைமுறையாவதற்கும் என பொறுமையோடு செயற்பட்டுவருகின்றனர்.

ஆனால் இத்தகைய திட்டமிட்ட தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டுபோக புலிகள் இயக்கம் அனுமதிக்கப்போவதில்லை. .

இது ஒரு கட்டத்தில் புலிகளுக்கும் அரசுக்கும் முறுகல் நிலையை ஏற்படுத்தச்செய்யும் அவ்வாறு ஒரு நிலை ஏற்படுகின்ற போது சமாதான முயற்சியினையே பாதிப்புக்குள்ளாகிவிடும்.

ஆகவேதான் புலிகள் இதனை அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.



ஆனால் அரச படையினர் மறைமுகமாக போராளிகள் மீது தாக்குதல் நடத்தி புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை முடக்கலாம் என கருதுகின்றனர்.

இது இராணுவத்தினர் சமாதான முயற்சியின் மீதும் பேசித் தீர்க்கமுடியும் என்ற நம்பிக்கையின் மீதும் பற்றுக்கொள்ளாது குறுகிய அடிப்படையில் தாம் இலாபம் ஈட்டலாம் என கருதுவதையேகாட்டுகிறது.

நோர்வேயின் சமாதான முயற்சி தொடங்கிய பின்னர் புலிகள் இயக்கம். சமாதானத்திற்காக எந்தளவு விசுவாசத்துடனும், பற்றுறுதியுடனும் செயற்படுகின்றனர் என்பதை எவரும் உணர்வர்.

ஆனால் இதற்கு மாறாக அரசு வெளித்தோற்றத்திற்கு சமாதான புரியர்கள் போல தங்களைக் காட்டிக் கொண்டு படையினர் மூலம் சமாதான முயற்சிக்கு விரோதமான காரியத்தைத் தூண்டிவிடுவது அரசு இருவேறுபட்ட முகங்களைக் கொண்டுள்ளதையே காட்டுகிறது.

ஈழப்போர் வரலாற்றில் அரசு கிழக்கு மாகாணத்திலேயே எப்போதும் தனது கெடுபிடிகளையும் முடக்கிவிடுவதுண்டு.

அவ்வாறு தனது படையினர் மூலம் நடவடிக்கைகளை அரங்கேற்றிவிட்டு பல்வேறு குழுக்கள் மீதும், நபர்கள் மீதும் பழியை சுமத்தி விடுவதுண்டு.

இவ்வாறுதான் தற்போதும கிழக்கு இறமையைக் கையாள்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கருணாவால் ஏற்படுத்தப்பட்ட அசம்பாவிதத்தைத் தொடர்ந்து சிறிலங்கா புலனாய்வுத்துறையினரோடு சேர்ந்து இயங்கும் புளொட் மோகன் போன்றோர் மட்டக்களப்புக்கு அடிக்கடி பயணம்செய்து தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியிருந்தனர் என்பது கவனிக்கததக்கது.

எது எப்படியிருப்பினும் இத்தகைய நடவடிக்கைகள் யாவும் அரசின் அனுசரணை யோடும் ஆதரவுடனுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதே உண்மை.

ஆகவே கிழக்கில் தொடரும் அசம்பாவிதங்களை முடிவுக்கு கொண்டு வந்து யுத்த நிறுத்தம் யுத்த நிறுத்தமாகப் பேணப்பட அரசு விசுவாசத்துடன் உழைக்கவேண்டியுள்ளது. மாறாக அரசு இரு வேறு முகங்களுடன் செயற்படமுனைந்தால் அதன் விபரீதங்களையும் அரசே அனுபவிக்க வேண்டிவரும்.

நக்கீரர்

# நீதி மறுக்கப்பட்ட அல்லது நீதி வழங்கப்படாத — ஒரு துயரத்தின் கதை

**“ 1985 ஆம் ஆண்டு நெடுந்தீவு கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையின் மிலேச்சத்தனமான தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டதன் 19 வது ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 15 மே 2004 அன்றாகும் ”**

மனித உரிமை அமைப்புக்களின் சான்றுகளில் இருந்து மறைக்கப்பட்டு, நீதிமறுக்கப் பட்டதாக, அல்லது நீதிவழங் கப்படாததாக பத்தொன்பது ஆண்டுகள் கழிந்தபின்னரும

நைனாதீவு சிறிலங்காக்கடற் படை இறங்குதுறையிலும் அந்த தப்பிய படகுப்பணி யாளரைப்பற்றிதொடர்ந்தும் சிறிலங்கா படையினர் விசா ரித்தேவருகின்றனர். இது ஏன்?



குமுதினிப் படகின் பலகைகள் களற்றப்பட்ட நடுப்பகுதி

உள்ள விவகாரம் குமுதினிப் படுகொலை பத்தொன்பது ஆண்டுகள் கழிந்தபின்னரும் குமுதினிப் படுகொலையில் உயிர் தப்பிய படகுப்பணி யாளர் ஒருவரை சிறிலங்கா கடற்படை தேடிவருகிறது.

குமுதினிப்படகு திருத தும் பணி கடந்த ஆறு மாதங் களுக்கு மேலாக ஊர்காவற் துறை இறங்கு துறையில் மந்த கதியில் நடந்துவருகிறது. இதில பல உள்விவகாரங்களும் உள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்துறை, இறங்குதுறை சிறிலங்கா கடற் படைமுகாமாக தொடர்ந்து இருந்துவருகிறது. இதன் அருகேதான் குமுதினி தரை யேற்றப்பட்டு திருத்தப் பணிக்கு உட்படுத்தப்பட்டுவரு கின்றது. அங்கு குமுதினி யின் சில பணியாளர்கள் தங்கியிருக்கின்றனர். இவர் களிடம் செல்லும் சிறிலங்கா கடற்படையினர் 1985 ஆம ஆண்டு குமுதினி படு கொலையில் தப்பிய படகுப் பணியாளர் எங்கே இருக் கிறார் என விசாரிக்கின்ற னர். அதேபோல் குறிகட்டு வான் இறங்குதுறையிலும்

1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் காலை ஏழு மணிக்கு நெடுந் தீவு மாவிலி துறைமுகத் திலிருந்து 64 பயணிகளுடன் புறப்பட்டபோது பொதுவேலை கள் திணைக்களத்திடம் இருந்து இப்போதைய வீதி அபிவிருத்தி அதிகாரசபை யின் குமுதினிப்படகு அரை மணி நேர பயணத்தின் பின் சிறிலங்காக் கூடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப் பட்டது.

இரு சிறிய பிளாஸ்


**தவபாலன்**

ரிக் படகில் வந்த சிறிலங்கா கடற்படையினர் குமுதினிப் படகை நிறுத்தச்சொல்லி அதை நிறுத்தியபின்னர் 6 கடற்படையினர் முக்கோணக் கூர்க்கத்திகள், கண்டங் கோடாரிகள், இரும்புக்கம்பி கள் சகிதம் குமுதினிப்பட கில் ஏறினர். படகின் பின் புறம் இருந்த பயணிகளை படகின் முன்பக்கம் செல்லு மாறும் மிரட்டினர் அவர்கள் அனைவரும் சென்றுவிட்ட னர். படகின் பின்புறம் இரு புற இருக்கைகளுக்கு

நடுவே இயந்திரத்திலிருந்து பின்புறம் புறப்புளருக்குச் செல்லும் ஆடுதண்டுப்பகுதி



குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்ட குழந்தை



குமுதினிப் படகின் உட்பகுதி

மூடப்பட்டிருந்த பலகை களை படையினர் களற்றி (இருக்கைகளிலிருந்து 4 அடி ஆழம் உள்ளதாக இது இருந்தது) அதன்பின் படகுப் பயணிகள் ஒவ்வொருவராக உள்ளே அழைக்கப்பட்டனர்.

குமுதினி இருபக்க வாசல்களிலும் உள்ளும், வெளியும் கடற்படையினர் இருந்தனர். ஒவ்வொருவராக வந்த பயணிகளை அழைத்து கத்தியால் குத்தியும் கண்டம் கோடரிகளால் வெட்டியும் இரும்புக் கம்பிகளால் தாக் கப்பட்டும் அந்த படகின் நடுப்பள்ளத்தில் போடப் பட்டனர். கொல்லப்பட்டவர் போக குற்றுயிராய்ப்போன வர்கள் குரல் எழுப்ப முடி யாது செத்தவர்கள்போல கிடந்த மக்களும் உண்டு.

பட்டுபோடப்பட்டது. உள்ளே பள்ளமாக இருந்த பகுதியில் மக்களைப் போடப்பட்டதால் முன்புறமிருந்து செல்லும் பயணிகளுக்கு ஒவ்வொரு வராக சென்றவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரி யாது. ஒருவர் நுழைவாயி னிலே சென்றவுடனே கட லில் குதித்துக்கொண்டார். அதன் பின் படகில் இருந்த ஏனையோரும்கடலில் குதிக் கத் தொடங்கினர் இதனைக் கண்ட படையினரின் துப் பாக்கிகளால் சுடப்பட்டுச் சிலர் கொல்லப்பட்டனர். ஏழுமாதக் குழந்தைமுதல் வயோதிபர்கள்வரை ஈவிரக் கமற்றமுறையில் படுகொலைசெய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தில்

தக்க குரல் எழுப்பியவர்கள் அதிகாரிகளால் தாக்கப்பட்டு இறந்ததாக உறுதிசெய்யப்


இறந்தவர் போலகிடந்த ஒரேஒரு படகுப்பணியாளர் மட்டும் உயிர்தப்பிக் கொண்டார். இப்படு கொலையின் பின் காயம் அடைந்தவர்கள் புங்குடுதீவு வைத்தியசாலைகும் யாழ். போதனாவைத்தியசாலைக்கும் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர். இவர்கள் கொல லப்பட்ட விடயத்தை மருத்து வமனையால் சிறிலங்கா காவல்துறையிடம் முறையிட் டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பதிலாக சில நாட்களில் தப்பியவர் களை மருத்துவமனைக்கு வந்த சிறிலங்கா கடற்படை யினர் தேடத்தொடங்கினர். உடனடியாக மருத்துவமனை யிலிருந்து விடுதிகளுக்கு இடம்மாற்றப்பட்டு மறைக்கப் பட்டனர். உயிர்தப்பிய படகுப்பயணிகளை படை யினர் புங்குடுதீவு மருத்துவ மனையில் தேடிச்சென்ற போது சிலர் மறைக்கப்பட்டு தலை மறைவாகியே சிகிச்சை பெறறனர். இருபெண்களைத் தவிர ஏனையோர்வெளிநாடு களுக்குத்தப்பிச்சென்றுவிட்ட னர். படகுப்பயணிகள் தப்பி விடக்கூடாது என்பதற்காக அவர்களைத் தேடித்திரிந்த னர். இன்றும் தேடிக்கொண்டே இருக்கின்றனர். எதுவிதவிசார ணைகளும் மேற்கொள்ளப் படாது இந்த முதற் கடற்படு கொலை மறுக்கப்பட்டு மறைக் கப்பட்டுள்ளது. ஆனால் சாட் சிகளை அழித்துக்கொள் வதிலும் தேடிக்கொள்வதி லும் சிறிலங்காக்கடற்படை யினர் தீவிர அக்கறைகாட்டி வருகின்றனர்.

போர்கள் நடந்த மன் னர் கால ஆண்டுகள் 40,50 கடந்தாலும் போர்களை மீள வும் உயிர்பெற்று பெரும் விளைவுகளையும் பரபரப்புக களையும் ஏற்படுத்தும். அதேபோல விசாரணை களற்ற மறைக்கப்பட்ட குமுதினி கடற்படுகொலை வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படவேண்டும். சிங்கள தேசக்காடையர்களால் நிகழ த்தி மறைக்கப்பட்ட கொடு ரங்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டும். மனச்சாட்சிகளை உலுப்பவேண்டும இதற்கு இதில் உயிர் தப்பி இன்று அச்சம்காரணமாக தலைமறைவாகி உண்மை களை மூடி மறைத்தவர்கள் உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும்.

# இளம் மெய்வல்லுனர்கள் அடையாளம் காணப்படவேண்டும்



ரமணன்



விஜயகீதன்



ஒலிம்பிக்நோக்கின் அடிநாதமே மக்களையும், கலாச்சாரத்தையும் புரிந்துகொள்வதும் சகிப்புத் தன்மையை வளர்த்துக்கொள்வது மாக வரையறை செய்துள்ளனர். (The Olympic ideal is a hymn To tolarence and understanding between people and cultures) விளையாட்டு இப்போது பொழுது போக்கு, தனிமனித மகிழ்வளித்தல் என்பவற்றைக்கடந்து இப்போது விளையாட்டு வணிகமயமாகி இலாபமீட்டும் ஒரு செயற்பாடாகிவிட்டபோதும் இது ஒரு சமூகப்பெறுமானமுடைய (social value) விடயமாகவும் மாறி விட்டது.

இதன் வெளிப்பாடாக “உலக மெய்வல்லுனர்தினம்” இவ்வருடம் தொடக்கம் மே மாதம் ஒன்பதாம் திகதி கொண்டாடப்படுகிறது. இந்த நோக்கில் இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் கொழும்பில் பதி னேழு (17) வயதுக்குட்பட்ட இளையோருக்கென 400 மீற்றர், 1500 மீற்றர், 100 மீற்றர் தடை தாண்டல் 3 கிலோமீற்றர் வேக நடை, நீளம் பாய்தல் பரிதிவீசுதல் போன்ற போட்டிகளை ஆண்களுக்காகவும் 200 மீற்றர், 100மீற்றர் தடை தாண்டல், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், வேகநடை ஆகிய போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளது. பல்வேறு வகையான மெய்வல்லுனர் போட்டிகளை நடத்தும் மெய்வல்லுனர் சம்மேளனம் இளையோருக்கான போட்டிகளுக்கு முக்கி யத்துவம் கொடுத்துள்ளமையானது. மெய்வல்லுனர் விருத்தியில் இளையோருக்கான முக்கியத்து வத்தைச்சுட்டி நிற்கிறது.

போட்டிகளில் இலக்கு கீர்த்திமிகு வெற்றிக்கும், கௌரவமான தோல்விக்கும் இடையேயான விளையாட்டு வீரனின் பண்பையும், (Sportsman ship) நேர்மைமிகு ஆட்டத்தையும் (fair play) கொண்ட இயல்பின் மீதே குவிப்பை கொண்டுள்ளது. எல்லோருக்கும் விளையாட்டு (sports for All) எனும் இலக்கை விளையாட்டுக் கொண்டிருந்தபோதும் திறமையும், உழைப்பும் வெளிக்கொணரும் வெற்றியும் அதன் சிறப்பு மிகு இலக்காகிறது. இந்த இலக்கை அடையும் மார்கங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் உலகில் சின்னஞ்சிறிய தேசிய இனமாக அடையாளப்படுத்தப்பட்ட தமிழீழத் தேசியமும், சர்வதேச அரங்கில் கௌரவம் பெறும் என்பதை நாம் அனைவரும் மனம் கொள்ளவேண்டும்.

சிறிலங்காவிற்காக சர்வதேசப் போட்டி ஒன்றில் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தவர் திரு. எதிர் வீரசிங்கம் எனும் தமிழர். அவர் தங்கப்பதக்கம் பெற்றுக்கொடுத்த அடுத்தநாளே ‘தமிழர் மீது 1958 இன வன்முறை கட்டவிழ்த்துவிடப் பட்டது என்பது ஒருபுறமிருக்க அவருடைய அடைவுமட்டத்தை ஐம்பதுவருடம் கடந்தும் தமிழர் தாயகத்தில்எட்டுவதற்குளந்தவொரு தமிழர் தாயகக்குடிமகனுக்கும் முடிய வில்லை என்பது வருத்தம் தரும் உண்மையாகும்.

தமிழர் தாயகத்தில் மெய்வல்லுனர்துறை மேம்பாடடைய வேண்டும் எனில் இந்த ஐம்பது வருட இடைவெளி நிரப்பப்பட வேண்டும் என்கிறார் யாழ் மாவட்டத்தில் உள்ள மெய்வல்லுனர் பயிற்றுனர் திரு. செல்வராஜா ரமணன் எதிர்காலத்தில் மேன்மைமிகு மெய்வல்லுனர் உயர்ச்சி ஏற்படுவதற்குரிய அடித்தளத்தை யாழ்ப்பாணத்தில் இடுவதில் இவருடைய பங்களிப்பு சிறப்பான இடத்தைப்பெற்றுள்ளது. இவரின் வழிகாட்டுதலின் கீழ் பயிற்சி பெறும் வீரன்சிவகுமார் கமலமோகன் உயரம் பாய்தலில் இரண்டு மீற்றர்களை எட்டிவிட்டான். மேலதிகமான பயிற்சியும், கடும் உழைப்பும் எதிர்காலத்தில் இவனுடைய சாதனைகளுக்கு வழி காட்டும் விடயங்களாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஏறக்குறைய பன்னிரண்டு பேர் இவருடைய வழிகாட்டுதலில் வடகிழக்கு மாகாணப்போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அகிலஇலங்கை இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்களை நீளம் பாய்தல், தத்தி மிதித்துப் பாய்தல் என்பவற்றில் பெற்றுக் கொண்ட இவரின் முயற்சியால் யாழ் மாவட்டத்தில் நான்கு இடங்களில் தேர்வு செய்யப்பட்ட மெய்வல்லுனர்கள் தொடர்ச்சியான பயிற்சிக்கு உட்படுத்தப்படுகின்றனர். யாழ்ப்பாண நகரப்பிரதேச விளையாட்டுத்துறை அதிகாரியாக இவர் கடமையாற்றுகின்ற போதும் தமது எல்லைகளுக்கு அப்பாலும் இவருடைய சேவை மெய்வல்லுனர்களுக்குக் கிடைக் கிறது.

விளையாட்டுப் போட்டி களுக்கான காலங்களில் மட்டுமே பயிற்சியில் ஈடுபடாமல், தொடர்ச்சி யாகப் பெற்றுக்கொள் ளும் பயிற்சி மூலமே மெய் வல்லுனர் நிகழ்வுகளில் சாதனை மட்டத்தை அடைய முடியும் எனத் தெரிவிக்கும் இவர் 1960களில் யாழ்ப்பாணத்தில் இருந்த மெய்வல்லுனர் அடைவு மட்டங் களை எட்டுகிறதே இப்போது பெரும் பிரச்சினையாக உள்ளதாகத் தெரிவிக்கிறார். திரு.எதிர் வீரசிங்கம், திரு.எஸ்.ஏ.பெனடிற் சாவகச்சேரி வாமதேவன் போன்ற பலர் அந்தக் காலங்களில் மிக உயர்ந்த சாதனைகளை நிகழ்த்தியிருந்தனர் என்பதனையும் குறிப்பிட்டார்.

மெய்வல்லுனர் என்பது தனி மனித ஆளுமை வளர்ச்சியில் மிகவும் பலம் பொருந்திய உந்து சக்தியாகும். கல்வியில் இருந்து பிரித்துப் பார்க்கப்பட முடியாத இதனை மேம்படுத்த பாடசாலை விளையாட்டுச் சங்கங்கள், மெய்வல்லுனர் சங்கம் முயற்சியெடுக்கவேண்டும்.

வடக்கு கிழக்கின் முன்னுதாரணமான இன்னுமொரு மெய்வல்லுனர் பயிற்றுனர் திரு.சண்முகநாதன் விஜயநீதன். இவர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரின் தொடர் பயிற்சி வழிகாட்டுதலின் கீழ் ஏறக்குறைய மூன்றுக்கு மேற்பட்டோர் தேசிய போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளனர். இவர்களில் ரதீஷன் என்பவர் மிக சிறப்பான அடைவு மட்டத்தை கோலூண்றிப் பாய்தலிலும், தசம நிகழ்ச்சியிலும் தேசிய மட்டப் போட்டிகளில் பெற்றுள்ளார்.

இளம் மெய்வல்லுனர்கள் அடையாளம் காணப்பட்டு ஊக்குவிக்கப்படவேண்டும் என்பதுடன் தமிழர் தேசிய மட்டத்திலான ஆதரவும் வழங்கப்படவேண்டும்.

மெய்வல்லுனர் உயர்ச்சியென்பது எமது வாழ்வின் மேன்மையின் அடையாளம் மட்டுமல்ல எமது தேசிய எழுச்சியிலும் பங்களிக்கும் அடையாளமாகிறது.

அன்ரன் அன்பழகன்

# வாழ்த்துக்கள் முரளி....!



2004 ஆம் ஆண்டின் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் உலகசாதனையை ஏற்படுத்தி கிரிக்கெட் உலகைவியக்க வைத்துள்ளார் சிறிலங்காவின் நட்சத்திர சுழற் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன்.

முதலாவது டெஸ்ட் உலகசாதனையை கடந்த மாதம் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவின் பிரைன் லாறா நிகழ்த்தியிருந்தார்.

முரளிதரன் இச்சாதனையை, ஒரு தடைதாண்டும் வீரர் எப்படி பல தடைகளை தாண்டி இலக்கை அடைகின்றாரோ அதே நிலையை எதிர்கொண்டார் என்றால் மிகையில்லை.

அதாவது 12ஆண்டுகிரிக்கெட் வாழ்க்கையில் முரளியின் துரிதவளர்ச்சியானது அவரது திறமைகண்டு அஞ்சிய மேற்குலக கிரிக்கெட் உலகின் ஆற்றாமைக்கு பேர்போன நடுவர்களால் ஏற்படுத்திய இடர்களுக்கு சோர்ந்து போகாது அத்தனை உத்வேகமாக மாற்றினார் என்று கூறுவதே பொருத்தப்பாடானதாக இருக்கும். முன்னைய சாதனைக்கு உரியவரான மேற்கிந்திய தீவின் வேகப் பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஸ் அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் ஆகியோரை விட விக்கெட் வீழ்த்தும் வேகத்தில் பின் தங்கி இருந்த முரளிதரனின் வேகம் பிற்காலத்தில் கிரிக்கெட் உலகம் வியக்கும் வகையில் வேகம் அடைந்தது.

இந்த நிலையில் முரளிதரன் ஆயிரம் விக்கெட்டுகள் என்ற மைல்கல்லை தொட்டு நிற்பார் என்ற கருத்தை வலுவாக்குவதுடன் கிரிக்கெட்டை பிரகவித்தவர்களாக தங்களைக்கருதும் மேற்கத்தையவர்களுக்கு வயிற்றில் புளியைகரைக்கும் ஒன்றாக மாறியுள்ளது. இதனாலேயே அவருக்கு எதிரான நடவடிக்கையில் மேற்கத்தையவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதும் மறுப்பதற்கில்லை. எதுஎப்படியோ முரளிதரன் சாதனை இலக்கைத் தொட்டு அமைதியாகவுள்ளார். கிரிக்கெட் உலகம் அவரை பாராட்டிநிற்கின்றது. ஆகவே முரளிக்கு எமது வாழ்த்துக்களும் சேரட்டும்.

# சாதனையில் வீரர்கள்...



முரளிதரன்:- இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் 2004 சிம்பாவே அணியுடன் கராரே மைதானத்தில் 89 டெஸ்ட் போட்டியில் 519 விக்கட்டுகளை கைப்பற்றினார் 31 வயதில் கைப்பற்றி உள்ளார்.



கொட்னிவோல்ஸ்:- மேற்கு இந்தியதீவு வீரர் 132 டெஸ்ட் போட்டிகளில் 519 விக்கட்டுகளை கைப்பற்றினார்.



சேன்வோன்:- அவுஸ்திரேலிய சுழல்பந்து வீச்சாளர் 110 டெஸ்ட் போட்டியில் 517வது விக்கட்டை இலங்கை அணியுடனான போட்டியில் கைப் பற்றியுள்ளார்.



கபில்தேவ்:- இந்தியவீரர் 131 டெஸ்ட் போட்டியில் 434 விக்கட்டுகளை கைப்பற்றியுள்ளார். இவர் ஒரு வேகப்பந்து வீச்சாளர்.



ரிச்சட்காட்லி:- நியூசிலாந்து வீர் 84 டெஸ்ட் போட்டியில் 431 விக்கட்டுகளை கைப்பற்றியுள்ளார்.



கிளென் மொக்ராத்:- அவுஸ்ரேலிய வீரர் 95 டெஸ்ட் போட்டியில் 430 விக்கட்டுகள் கைப்பற்றியுள்ளார்.



வசீம் அக்ரம் பாகிஸ்தான் வீரர் 103 டெஸ்ட் போட்டி யில் 414 விக்கட்டுகள் கைப்பற்றியுள்ளார்.

# "இடிபாடுகளுக்குள்ளிருந்தும் எழித்தெரிந்தவர்கள்"

சு. ஞாலவன்

நினைவுகளைப்போலவே நீண்டு செல்லும் நெடுஞ்சாலைகள் போக இரண்டு, வர இரண்டு என இடப்பட்ட வரிசைக்குள் விரையும் வாகனங்கள். பாதையின் இருமருங்கிலும் பசுமைமிகுந்து கிடக்கும் வயல்கள், தோட்டங்கள். இடையிடையே கனரகவாகனங்கள் நெடுஞ்சாலையிலிருந்து வெளியேறித் தம் பாதை தேடிஅடையும் கைத்தொழிற்பேட்டைகள். ஊர்மனைகளிலிருந்து தொழிலாளர்களை தம் மடியில் அள்ளிக் கொண்டு வந்துசேர்க்கும் நீளம் குறைந்த தொடருந்துகள். அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்தும், அநாவசியங்களைத் தவிர்த்தும், ஊருக்கொரு நூலகம், விளையாட்டுத்திடல். பாடசாலை, வைத்தியசாலை, மற்றும் பொதுமக்கள் கூடிமகிழ்ந்து குதூகலித்திருக்க ஓர் மண்டபம் இப்படியாக இருக்கும் பல ஊர்களுக்குப் பொதுவாய், மாவட்டத்திற்கு ஒன்றென நவீன உலகின் அற்புதங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் நகரங்கள் விண்ணை முட்டும் கட்டடங்கள், வீதிகளின் இருபக்கங்களும் வகைக்கொன்றாய் வசதியாய் அழகான கடைகள், கண்ணும் கருத்துமாய் காவலில் ஈடுபட்டிருக்கும் காவற்துறையினர், வீதிகளின் நடுவே விதம் விதமான வண்ணமலர்ச் செடிகள், கல்வி கற்கும் ஒரு வகையினர், வெவ்வேறு கடமைகளில் ஈடுபட்டுள்ள இன்னுமொரு வகையினரை இவற்றிற்கடுத்த மூன்றாவதாய், ஓங்கி வளர்ந்திருக்கும் இத்தேசத்தினை கட்டியெழுப்பிய தலைமுறையினர்: இளைய தலைமுறையிடம் தம் பணியை ஒப்படைத்துவிட்டு ஓய்வாய்ச் சேர்ந்து நாட்டு நடப்புகள் பேசுவதிலும் நற்பணிகள் ஆற்றுவதிலுமாய்! இழிந்தோர் மற்றும் ஏற்போரென்று எவருமே இல்லாத நன்னெறிச் சமத்துவ தேசம் ஒன்றாக நம்முடைய தேசம் ஆகினால்... ஆக்கப்பட்டால்..!

நிச்சயமற்ற ஒரு சமாதான சூழலில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். மீண்டும் ஒரு போர் ஆரம்பிப்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக, தென்னிலங்கையின் இனவாதமே அமையும். இந்த வகையில் தொடர்ச்சியான அழிவுகளும், இழப்புக்களும் மக்கள் மனங்களில் 'இனி நாம் உய்யும் வழியில்லை,' என்ற ஒரு விரக்தி நிலைக்கு இட்டுச்செல்லலாம். ஆனால் இடிபாடுகளும், இல்லாமைகளும் நிறைந்திருந்த இப்பூமியின் ஒரு பகுதியிலிருந்து எவ்வாறு இப்படி வியக்கத்தகு 'சொர்க்கபுரி' உருவானது என்று அறிந்துகொள்வதன்மூலம் அழிவு என்பது முடிவல்ல ஒருபுதிய தொடக்கத்திற்கான அடிக்கல் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

இன்று நம்முடைய மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட உறவுகள் வாழ்ந்துகொண்டிருக்கும் மேற்கு ஐரோப்பிய தேசங்கள், முழுமையான போர்க்கோலம் பூண்டிருந்த 2ஆம் உலகயுத்தக்காலகட்டம் அது. முதலாம் உலகயுத்தத்திலிருந்து மீண்ட தேசங்கள், இரண்டு தசாப்தங்களில் தாம் கண்டுவிட்ட வளர்ச்சிகளையெல்லாம் போர்த்தளபாடங்களாகப் பரீட்சித்துக்கொண்டிருந்தவேளை அது. ஜேர்மனி, அவுஸ்திரேலியா (Austria),இத்தாலி மற்றும் துருக்கி சேர்ந்த பலமான கூட்டோடு, பிரான்சு, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் கூட்டு மோதியது. இந்த நாடுகளின் காலனித்துவ மேலான்மை காரணமாகவும், ஜேர்மனியோடு கூட்டுச்சேர்ந்த ஜப்பானின் போரீடுபாட்டாலும் உலகம் முழுவதிலும் வியாபித்த 2ஆம் உலகயுத்தத்தில் 61 நாடுகளைச் சேர்ந்த 110 மில்லியன் (11கோடி) போர்வீரர்கள் ஈடுபட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது. உலகத்தின் ஒவ்வொரு மூன்றாவது மனிதனும் அன்றைய கட்டத்தில் ஒரு போர்வீரனாக இருந்தான் எனவும் அறியப்படும் இந்தப் போரில், படைவீரர்கள் இழப்பு 25 மில்லியன் (2,5கோடி) உயிர்கள்: அதில்10 மில்லியன் ரஷ்யப் படைவீரர்கள். இங்கு குறிப்பிடப்பட்டவை போர்வீரர்களின் இழப்புக்கள் மட்டுமே என்பது நோக்கத்தக்கது. உலகம் முழுவதிலும் பொதுமக்களின் இழப்பு உட்பட 60 மில்லியனுக்கும் (6 கோடி) அதிகமானது.

இப்படிப்பாரிய அழிவுகளைச் சந்தித்த 2ஆம் உலகயுத்தம் 1945இல் முடிவுக்குவந்தது. ஜேர்மனியக் கூட்டுப்படை ரஷ்யாவின் அர்ப்பணிப்பு மிக்க தாக்குதலில் படுதோல்வியைச் சந்தித்தது. ஜேர்மனியை நோக்கி முன்னேறிக் கொண்டு வந்த அமெரிக்கக்கூட்டு மற்றும் ரஷ்யப் படைகள் தாம் ஆக்கிரமித்த பகுதிகளை முறையே சொந்தம் கொண்டாடின. இதன் காரணமாகவே சோசலிஷ ஆட்சிக்குட்பட்ட பகுதி கிழக்கு ஜேர்மனி ஆகவும், முதலாளித்துவ ஆட்சிக்குட்பட்ட பகுதி மேற்கு ஜேர்மனி எனவும் பிரிந்துபோனது. தோற்ற பகுதியினர் மட்டுமன்றி வென்ற பகுதியினரும் பொருளாதார ரீதியாக பெரும் வீழ்ச்சியைச் சந்தித்திருந்தனர். தமது முழு உற்பத்தித்திறனையும் போரியல் தளபாடங்களுக்காக செலவிட்டமையே இதற்கான காரணமாகும். இந்தவேளையிலே பிரிட்டன் இலங்கையிடம் கடன்பட்டிருந்ததும், தனது உணவுத் தேவைகளுக்காக இந்தியாவையே நம்பியிருந்ததும் கவனிக்கத்தக்கது.

கிழக்கு ஜேர்மனி 03 ஒக்ரோபர்1989 இல் மேற்குடன் இணைந்தது.

முதலாம் உலகயுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட ஜேர்மனியை வென்றவர்களின் முழுப்போர்ச்செலவையும் கொடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. இவ்வாறான ஒரு நடைமுறையைப்பின்பற்றி தாம் பிடித்து வைத்திருக்கும் மேற்கு ஜேர்மனியிடம் முடியும்வரை கறந்துவிட வேண்டுமென்ற போக்கையே அமெரிக்க நேசநாட்டுப்படைகள் ஆரம்பத்தில் கொண்டிருந்தன. இருந்தும் இவ்வாறான ஒரு ஆக்கிரமிப்புப் போக்கை தாம்கடைப்பிடிக்கும் பட்சத்தில், கருத்தியல் ரீதியாகப் பலம் பெற்றுவரும் சோசலிஷக்கிழக்கு ஜேர்மனி, எங்கே ஒரு முன்னுதாரண தேசமாகப்போய்விடுமோ என்று அமெரிக்கா அஞ்சியது: ஜேர்மனியை விட சோசலிஷத்தையே தமது முதலாவது எதிரியாகக்கண்டது.

இதன் காரணமாக சோசலிஷம் நிரூபிக்கப்பட்டுக்காட்டப்படும் கிழக்கு ஜேர்மனிக்கு எதிராக, தம்முடைய முதலாளித்துவ திறந்த பொருளாதாரத்தின் மகிமைகளை மேற்கு - ஜேர்மனியில் நிகழ்த்திக் காட்டவென உத்தேசித்தது: மேற்கு - ஜேர்மனி சோசலிஷக் கருத்துப்பரப்புகைக்குள் ஆட்படும் பட்சத்தில், தன்னுடைய ஏனைய ஐரோப்பியக் கூட்டாளிகளையும் இழக்கவேண்டிவருமென அச்சம் கொண்டு, 1947யூன்மாதம் ஜேர்மனி உட்பட போரால் நலிவுற்ற ஐரோப்பிய நாடுகளுக்கான தனது உதவித்திட்டத்தை அறிவித்தது அமெரிக்கா.

அவ்வேளையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சராக இருந்த ஜோர்ஜ் கற்லெற் மார்சலின் யோசனையான இந்த "ஐரோப்பிய மீளமைப்புத்திட்டம்"(European Recobery Program, ERP) "மார்ஷல் திட்டம்" எனவே அழைக்கப்பட்டது. இதன் நோக்கங்களாக பின்வரும் 4 விடயங்கள் அமைந்திருந்தன.



01. அமெரிக்க உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்புக்களை ஐரோப்பாவில் ஏற்படுத்துதல். இதன் மூலம் அமெரிக்கா பொருளாதார வளர்ச்சிக்கு தளம் அமைத்தல்.

02. அமெரிக்காவின் உதவி கிடைக்காமல் போகும் பட்சத்தில், சோவியத்தின் சோசலிஷ ஆளுகை மேற்கு ஐரோப்பாவின் செல்வாக்குப் பெறும் ஆபத்தைத் தடுத்தல்.

03. சோசலிஷ கருத்தியலுக்கு எதிராக, போட்டியாக ஒரு முதலாளித்துவவெற்றி முன்வைக்கப் படவேண்டும்.

04. முதல் மூன்று விடயங்களையும் சாதித்துக் கொள்வதற்காக மக்களின் அன்றாட தேவைகளான வற்றைப் பூர்த்திசெய்தல்.

இவ்வாறாக இந்த நான்கு நோக்கங்களையும் கருத்தில் கொண்டு 1948ஆம் ஆண்டிலிருந்து 1952 வன்ரயிலான காலப்பகுதியில், இந்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் கடனடிப் படையில் 13 பில்லியன் அமெரிக்க டொலர்களைப்பெற்றன. இந்தப்பணத்தின் பெரும்பகுதி இந்த நாடுகள் அமெரிக்காவிலிருந்த இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டது. கடன் வழங்கிய 'காரணத்துக்காக உதவும்' அதேநேரம், தனது உற்பத்திகளைவிற்கும் ஒரு தந்திரமாகவும் அமெரிக்கா இதைக் கையாண்டது.

மேற்கு ஜேர்மனியைப் பொறுத்தவரையில் போருக்குப்பின் ஏற்பட்ட பணவீக்கம் காரணமாக, அப்போதிருந்த றைஸ் மார்க் (RM) தனது பெறுமதியை முற்றிலும் இழந்திருந்தது. குளிருக்கு எரிப்பதற்காய் பணத்தாள்களைக் கட்டுக்கட்டாய் எரிக்கும் அளவிற்கு நிலைமை மோசமடைந்திருந்தவேளையில் தான், "ஐரோப்பிய மீளமைப்புத் திட்டம்" நடைமுறைக்கு வந்தது. 1948யூன் மாதம் 21இல் புதிய நாணயமாக "டொச் மார்க்" (DM) அறிமுகப் படுத்தப்பட்டு, ஒவ்வொரு ஜேர்மனியருக்கும் (மேற்கு ஜேர்மனி) 40 - டொச்மார்க் கடனாகப் பெற்ற பணத்திலிருந்து வழங்கப்பட்டது. கடைகளில் எல்லாம் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் குவிந்து கிடந்தன. மிகுந்த துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்த மேற்கு.ஜேர்மனியர்கள்: அதுவரை ஒருவகைக் கிழங்குக்கஞ்சியையும், பாணையுமே உண்டுவந்தவர்கள், ஒரு நாள் இரவோடு எல்லாம் மாறியதைக்காண்கிறார்கள். அதிகமானவர்கள் தங்கள் 40,-டொச்மார்க்கிற்கு வயிறார உண்டார்கள், வேறு சிலர் நல்ல உடைகளை வாங்கினார்கள். கூடவே அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட இயந்திரங்களின் உதவியுடன் உள்ளூர் உற்பத்தி முடுக்கிவிடப்படுகின்றது. ஒவ்வொருவரும் தங்களாலான உச்ச உற்பத்தியில் ஈடுபட்டனர். பலரை இழந்து போயிருந்த தேசத்தில் பற்றாக்குறைகள் பல. குறிப்பாக ஆசிரியர்பற்றாக்குறை. திறமையுள்ளவர்கள் குறுகிய காலப்பயிற்சியுடன் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆக இந்த '40,- டொச்மார்க்'கே நாணயப்பரிமாற்றத்திற்குட்பட்டுகொள்வனவு - விற்பனை என்ற சுழற்சியில் புழக்கத்தில் இருந்தது. முக்கால்வாசித்தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டிருந்த ஒரு தேசத்தில், மூன்றில் ஒருபங்கினர் வதிவிட வசதிகளற்று வாழ்ந்துவந்த சூழலில், தன்னம்பிக்கையை மட்டும் விடாது கடுமையாக உழைத்தார்கள். இவர்களின் கடுமையான உழைப்பைக் கண்ட அமெரிக்கா மேலதிகமாக ஆளுக்கு 20, -மார்க் வீதம் கடன் வழங்கியது.


முடமாக்கப்பட்ட தமது தேசத்தினை மீண்டும் நிலைபெறச்செய்ய வேண்டுமென்ற பிரயத்தனத்துடன், கடுமையான குளிரிலும் உழைத்தார்கள் மேற்குஜேர்மனியர்கள். எட்டிய பயன்... 1952ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட கடன் மீளளிக்கப்பட்டது. போருக்கு முன்பு இருந்த தனிநபர் வருமானத்தைவிட, 35% னால் இப்போது அதிகரித்திருந்தது. தனது சகல வடுக்களிலிருந்தும் சுயமாகவே மீண்டு, எழுந்து நின்ற ஒரு தேசமாக தன்னை வளர்த்துக்கொண்டது. கடனாளியாக இருந்த நாடு 5வருடங்களுக்குள் கடன்கொடுக்கும் நிலைக்கு தன் உழைப்பிலே உயர்ந்து கொண்டது. ஒட்டுமொத்த மேற்கு ஜேர்மனியர்களின் இந்த வெற்றிக்கு முதுகெலும்பாக இருந்து "மார்ஷல் உதவித்திட்டத்தை' வழிநடத்திச் சென்றவரும், டொச் - மார்க்கின் தந்தை என சிறப்பிக்கப்படுபவருமான லுட்வின் எயர்ஹார்ட் இங்கே நினைவு கூரப்படவேண்டியவர். 1949இலிருந்து 1963வரை 14 ஆண்டுகள் நிதியமைச்சராக இருந்து நாட்டை, மக்களின் உழைப்பை பயன்காணச்செய்தார். இன்று 82மில்லியன் மக்களோடு ஜேர்மனி இருக்கும் இடத்தை உலக அரசியலில் அது வகிக்கும் பாத்திரத்தை, ஐந்து வருடங்கள் (1948 - 1952) அவர்களின் மூத்த சந்ததி சிந்திய வியர்வையினூடாகவே நாம் பார்க்க வேண்டும்.



ஜேர்மன் தலைநகரின் அழகிய தோற்றம்

இப்பொழுது சொல்லுங்கள்! எங்கள் தேசம் வளர்ச்சி பெறுவது யார் கையில் தங்கியிருக்கின்றது? வெறுமனே விமானக்குண்டுவீச்சுக்களால் கட்டடங்களைச் சிதைத்து விடுவதால், எங்கள் கனவுகளைச் சிதைத்துவிடலாமோ? கல்லெறிந்து நம் இனமென்னும் கூடு சிதறடிக்கப் பட்டதாக எதிரி கனவு காணலாம். ஆனாலும், உலகெங்கும் சிதறிய நம் துளிகளும், சிந்தையால் ஈழவர் என்ற இனம் அன்றோ! கூடு திரும்பும் 5 லட்சம் உறவுகளோடு எல்லோரும் சேர்ந்தால் எழாதோ இங்கோர் புது யுகம்!! கேட்டுக்கொள்ளுங்கள் அடிக்கடி உங்களை! ஓர் வலிமையான தேசத்தின் அடிக்கற்களாய் ஆகிய உங்களின் வலிமையைப் பெருக்குங்கள் பயன்தரு நூல்களை வாசியுங்கள்! புலம்பெயர்ந்துள்ள உங்கள் உறவுகளோடு நாளைய தேசத்தின் நாட்டத்தைப்பற்றியும் கதையுங்கள்! எங்கள் சூரியச்சுடரின் சுகமான அரவணைப்புக்குள் தமிழீழம் தலை நிமிரட்டும்.

"கனவு மெய்ப்படவேண்டும்!
கைவசம் ஆவது
விரைவில் வேண்டும்!
தனமும், இன்பமும் வேண்டும்!
தரணியிலே பெருமை வேண்டும்!!




# ஆயுதத்தை மட்டுமல்ல

தமிழ்நிலா

அமாவாசை இருட்டு கரி அப்பியிருந்தது. நிலா மகளுக்கு மிக அருகே சென்று கொண்டிருந்த தோழியை அவளால் பார்க்கமுடியவில்லை. அடர்ந்த காட்டுக்குள் அவ்வணி நகர்ந்து கொண்டிருந்தது. என்னுடன் நில் என்று பிடித்திழுக்கும் முட்புதர்களுக்கு டாட்டா காட்டிவிட்டு வர பெரும் பிரயத்தனப்பட்டனர். பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்த தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய மறுக்கும் சிறிலங்கா அரசு போல முட்பற்றை தான் பற்றிக்கொண்டவரை விடுவிக்க மறுத்தது. அதிகாலை 3.00 மணிக்கு முன் குறிப்பிட்ட இடத்தை சென்றடையவேண்டும். போதிய தூக்கம் இன்றித் தவித்த கண்கள் தமக்கு ஓய்வு வேண்டுமெனக் கெஞ்சின. அவர்கள் நேசிக்கும் மக்கள் நிம்ம தியாக உறங்க வேண்டுமாயின் இவர்களின் கண்கள் விழித்திருக்க வேண் டும். நிலாமகளுக்கு முன்னால் நகர்ந்து கொண்டிருந்த செந்தூரா தீடீரென நின்றாள்.

" என்ன பிரச்சினை? நிலாமகள் குசுகுசுத்தாள்.

"முன்னுக்கு ஏதோ அசுமாத்தம் தெரியுது போல அணி நகரேல்லை"

சிறிது நேரத்தின் பின் தீடீரென அவர்கள் மீது மின்னொளி பாச்சப் பட்டது. "ஒருத்தரும் அசையாதீங்கோ, செந்தூரா முன்னால போய்க்கொண்டிருந்த ஆக்கள் எங்க?"

பயிற்சி ஆசிரியர் கேட்ட போதுதான் செந்தூராவுக்கு தனது தவறு புரிந்தது. தனக்கு முன்னால் சென்றவள் நிற்கிறாள் என அவளும் நின்றுவிட்டாள். ஆனால் அது பாலைமரம். நித்திரைக்கலக்கத்தில் பாலைமரத்தைத் தோழி என நினைத்து விட்டாள். மிகுந்த சிரமப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள். பயிற்சி ஆசிரியர் வந்த சிரிப்பை வெளிக்காட்டாமல் எச்சரிக்கை செய்தாள்.

"நான் மன்னிப்பன் ஆனா சண் டையில இப்பிடி நடந்தா ஆமி மன்னிப்பானா? சண்டைக்குப் போகாம மறிச்சுப்போடுவன்."

"நான் இனி அவதானமா இருப்பன்."

பயிற்சி முடிந்து படுக்கைக்குச் சென்றபோது காலை புலரத் தொடங்கியிருந்தது.

"அன்பு உங்கட ரீமைக் கூட்டிக்கொண்டு ஆரதி அக்காட இடத்துக்கு உடனே போய்ச் சேருங்கோ"

'ஓம் அக்கா நிலாமகள் தட்டுமுட்டுச் சமான்களை கட்டிக்கொண்டு வெளிக் கிடுங்கோ"

உடனே ஆயத்தமானார்கள்.

"அக்கா நடராசா அண்ணற்ற காரிலதானே போகப்போறம்?"

"அதில என்ன சந்தேகம்? அவற்ற காரிலதான் போகப்போறம்."

நீண்ட தூர நடைப்பயணம். அந்த வளவினுள் இருந்த கொய்யா மரம் அவர்களை அழைத்தது. ஓடி ஒளித்திருந்த பசி கொய்யாப்பழத்தைக் கண்டதும் மீண்டும் தலை காட்டியது. அந்த வளவிற்குள்ளிருந்து வெளிப்பட்ட ஒரு வயோதிபத்தாயின் உள்ளம் அவர்களைப்புரிந்து கொண்டது.

"பிள்ளையள் வாங்கோ, நல்லா களைச்சுப்போனீங்கள். தண்ணி குடிச்சிட்டு கொய்யாப்பழமும் சாப்பிட்டுப்போகலாம்."

நிலாமகள் ஏறியிருந்த கொய்யாக்கிளை தன்னால் இயன்றளவு அவளது நிறைக்கெதிராகப் போராடி இறுதியில் தோற்றுவிட்டது.

உரிய இடத்தைச் சென்றடைந்ததும் கொய்யாக்கிளை முறித்ததற்காய் அனைவரையும் முழந்தாளில் இருக்கும் படி பொறுப்பாளர் கூறினார்.

"ஒரு சத்தமும் கேக்கக்கூடாது கேட்டா தண்டனை இரட்டிப்பாகும்." பொறுப்பாளர் அப்பால் நகர்ந்ததும் அச்சந்தர்ப்பத்துக்காய் காத்திருந்த நிலாமகள்.

"எல்லாரும் ஆண்டவனிட்ட என்னவரம் கேட்டு ஜெபிக்கிறீங்கள்? எல்லாம் வல்ல ஆண்டவனே! எனது தோழிகள் எதையோ கேட்டு உம்மிடம் மண்டியிட்டு நிற்கிறார்கள். அவர்களுக்காய் இரங்குவீராக, அவர்களது வேண்டுகோளை செவிமடுத்து அவர்களுக்கு அருள்புரிவீராக. ஆமென்."

""ஆர் சத்தம் போட்டது?"

"அது நான்"

"நிலாமகள் தனிய இருக்க மிச்ச ஆக்கள் எழும்புங்கோ"

"இது தேவையா?" என்பது போல தோழிகள் பார்க்க, கண்ணசைத்துச் சிரித்தாள்.

சாப்பாட்டு வாகனம் சற்றுத்தாமதித்து வந்ததால் சோறு பிசகாய் வந்து சேர்ந்தது. தோழிகள் சாப்பிட ஆயத்தமான போது நிலாமகள் தடுத்தாள்.

"காஞ்சமாடு கம்பில் விழுந்த மாதிரி விழாதீங்கோ கொஞ்சம் பொறுங்கோ் நான் ஒரு "ஐற்றம்"செய்து தாறன்."

"கடவுளே இண்டைக்கு இந்த சோத்துக்கு நாசம் தான். இண்டைக்கு எங்கட வயித்தில அடிக்கப்போறாள்."

தேநீர் பானையை அடுப்பிலேற்றி தலைக்குத் தடவ வைத்திருந்த எண்ணெய்யை இட்டு சோற்றைக் கொட்டிக்கிளறினாள். சூடேறியதும் பரிமாறினாள்.

சோற்றின் புளிப்பும், சூடும் சேர்ந்து ஒரு வித சுவையாக இருந்தது.

"எப்பிடி இருக்கு?"

"நல்லா இருக்கு."

மழைகாலமாகையால் பதுங்குகுழிக்குள் நீர் ஊற்றெடுத்து இருந்தது. காட்டுத் தடிகளைக்கொண்டு பதுங்குகுழிக்குள் கட்டிலமைத்தார்கள். காவல்கடமை முடிந்ததும் அதில் படுத்த நிலாமகள், நல்ல நித்திரை ஒன்று அடித்து விட்டு கண்விழித்தபோது உடல் விறைத்திருந்தது. அன்றிரவு பெய்த மழையால் நீரின் மட்டம் சற்று அதிகரித்ததால் நீரினால் அரிக்கப்பட்ட அவளது கட்டில்கால்கள் பாறிவிழுந்து விட்டன. கட்டில் நீந்திக்கொண்டிருந்தது.

இவ்வளவு குளிருக்க என்னெண்டு நித்திர கொண்டேனோ தெரியாது"

"உடம்பெண்டாத்தானே குளிரும். மரக்கட்டைக்குக் குளிராது"

"எருமை மாட்டில மழைபெய்தா அதுக்கு உறைக்காது தானே"

"நிலாமகள்: மரக்கொப்பில காயவிட்ட என்ர உடுப்ப குரங்கு தூக்கிக்கொண்டு ஓடுது."

"கொண்டு போகட்டும் விடு பாவம் அதின்ர பூட்டிமாரெல்லாம் ரவுசரும் சேட்டும் போட்டுக்கொண்டு திரிய தான் மட்டும் பிறந்த மேனியோட இருக்கிறன் எண்டு வெக்கம் வந்திட்டுது போல. அதுதான் அவரும் உடுப்புப்போட வெளிக்கிட்டிட்டார். விடு உன்ர மூதாதையர் தானே கொண்டு போகட்டும் பூட்டனாரே உங்கட பூட்டி சரியா கவலப்படுறா. இரண்டு நாளைக்குப்போட்டுட்டு அவவின்ர உடுப்ப திருப்பிக் குடுத்திடுங்கோ."

"நிலாமகள் இரவைக்கு வேற இடத்துக்கு போகவேணும் ஆயத்தமா இருங்கோ"

"நடந்தே அக்கா போறது?"

"இல்ல சந்திரிக்காச்சித்தி ஹெலி அனுப்புறாவாம். ஏறிப்போக ஆயத்தமா இருங்கோ"

வயல்வெளிகளுக்கூடாக பயணம் ஆரம்பமானது. நீண்ட காலம் பாவனையின்றி இருந்த உயர்ந்த வரம்புகள் நடப்பதற்கு ஏற்றனவாய் இருக்கவில்லை.

"ஆமி வைக்கிற பொறி காணாதெண்டு நண்டுகளும் பொறி வைச்சிருக்கு"

"அதுகளின்ர பிரதேசத்திற்க அத்துமீறி வாற ஆக்கள தடுக்க அதுகள் ஏதாவது செய்யத்தானே வேணும்."

இடையிடையே சலக்சலக் என்ற ஒலி எழுந்து கொண்டிருந்தது. வயல் நீருக்குள் அவர்கள் விழுந்தெழும்பிய ஒலியே அது.

"அங்க போய்ச்சேர்ந்த உடன் குளிக்கலாம்! தயவு செய்து இஞ்ச ஒருதரும் குளிக்காதீங்கோ."

நிலாமகள் சொல்லி வாய்மூடுமுன் "சலக்' தானும் ஒரு தடவை வயலுக்குள் நிலையெடுத்தாள்.

"அப்பாடா ஒரு மாதிரி வந்து சேர்ந்தாச்சு."

"ம்... வீராங்கனைகள் எவெரெஸ்ற் ஏறியிறங்கியிருக்கினம்."

"காலையில சண்ட ஆரம்பிச்சாலும் ஆரம்பிக்கலாம். ஆயத்தமா இருங்கோ."

"என்னக்கா பொசிசன் லைனில இருந்து கொஞ்சம் பின்னுக்கு வந்திற்றம். பிறகு எங்கட ரீமுக்கு என்னண்டு சண்டை கிடைக்கும்?"

"நாங்க இப்ப நிக்கிற இடம் முக்கியமான இடம் சண்டை தொடங்கினா இந்த இடத்தப்பிடிக்க கட்டாயம் முயற்சிப்பாங்கள் இதைக்காக்கிற பொறுப்பு எங்களிட்டத்தானிருக்கு. எல்லாரும் கவனமாச் சண்டைபிடிக்கோணும். இந்த இடத்தைப்பிடிச்சாங்களெண்டால் நேர ஊர்மனைக்குள்ள போயிடுவாங்கள்"

பொறுப்பாளர் கூறிவிட்டுப்போன வார்த்தைகள் நிலாமகளின் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டிருந்தது.

"இந்த இடம் பிடிபட்டா ஊர்மனைக்குள்ள போயிடுவான் பலவர்ணக்கனவுகளுடன் உறங்கும் ஊர்மக்களை காலையில் ஆமிதட்டி எழுப்பினா! வேண்டாம்...!

அந்தச்சிறுவன் சொன்ன அந்த வார்த்தைகள் அவள் எண்ண அலைகளில் மோதின. மக்கள் மத்தியில் இடம்பெற்ற போராளிகளின் கலை நிகழ்வொன்றிற்கு நிலாமகளும், தோழிகளும் சென்றிருந்தனர். அவர்கள் அமர்ந்திருந்த இடத்தில் ஒரு சிறுவர் குழாமும் வந்தமர்ந்தது. நிலாமகள் அருகிருந்த சிறுவனின் நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு அருகே இருந்த ஜீ.பி.எம்.ஜி ஒளிவீச, ஆவலுடன் அதைப்பார்த்துக்கொண்டிருந்தவன், குழந்தையை பரிவோடு தடவும் தாய் போல அதை வருடினான்.

"தம்பி, இத நீங்கள் தொடக்கூடாதப்பன்."

"ஏன் அக்கா? இன்னும் சில வருசங்களால நாங்களும் தூக்கத்தானே போறம்.

"ஓமக்கா நாங்களும் உங்கள மாதிரி வளர்ந்த பிறகு இதத்தூக்கத்தானே போறம்? இப்ப தொட்டுப்பார்த்தா என்ன?'

அவர்கள் இருவரினது கூற்றையும் மற்றச்சிறுவர்களும் ஆமோதித்து அது தொடர்பாக விவாதிக்கவும் ஆயத்தமானார்கள்.

"என்ன நீங்களும் இந்த ஆயுதத்த தூக்கப்போறீங்களா?"

"ஓமக்கா! கிளிநொச்சிக்கு வீடு பார்க்கப்போன அப்பாவச்சுட்ட ஆமிய நான் சுடவேணும்."

அவன் கண்களில் அனல் தெறிக்க ஆவேசமாகக்கூறினான்.

'பிள்ளையின்ர அப்பாவச் சுட்டவன சுட நாங்க இருக்கிறம். பிள்ள அதப்பற்றி யோசிக்காம நல்லாப்படிக்கோணும்"

"ஓம் அக்கா, படிச்சுட்டு உங்களைப்போல....."

அவளது விழிகளைப்பார்த்து பேச்சை நிறுத்திக்கொண்டான்.

"அக்கா எங்கட ஊருக்கு ஆமி வருவானா?'

ஒருவன் கேட்ட கேள்விக்கு மற்றவன் பதில் சொன்னான்.

"வரமாட்டானடா, எங்கட அண்ணாக்களும், அக்காக்களும் வர விடமாட்டினம்.

அந்தச்சிறுவர்களின் வார்த்தைகள் வண்டுபோல அவள் நினைவுப்பூக்களுக்குள் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்தன.

அடிக்கடி 'ரட்,ரட், கும்,கும் என்ற ஒலிகள் எழுந்த வண்ணம் இருந்தன. சண்டைக்களத்தில் நிற்கமுடியாமல் பறவைகளும், மிருகங்களும் பதவியை இராஜினாமாச்செய்துவிட்டு இடத்தைக் காலிபண்ணிவிட்டன. போர் ஆயுதங்கள் திருப்பள்ளி எழுச்சி பாடும் பொறுப்பை ஏற்றுள்ளன. வோறொரு இடத்தில் இவர்கள் நின்ற போது, இவர்களுக்கு முன்னால் நின்ற எதிரிகளின் பொழுது போக்கே இதுதான்.

"வன்,ரூ,திறி" என்று கத்தி வாய் மூடுவதற்குள் அவர்கள் ஏவிய 60 எம்.எம். இவர்களிடம் வந்துவிடும், இங்கே 60 எம்.எம் வெடிக்கும் சத்தம் கேட்டு பெரிதாகக் கூக்குரலிட்டுச் சிரிப்பார்கள். "வன்,ரூ,திறி" சத்தம் கேட்கத்தொடங்கியவுடனே இவர்கள் பதுங்கு குழிக்குள் நிலையெடுத்து விடுவதால் சேதமெதுவும் இருக்காது. ஒரு நாள் அவர்களின் கூக்குரலை இலக்காய் வைத்து இவர்கள் அனுப்பிய 60 எம்.எம் அவர்களைப்பதம் பார்த்தது. அன்றுடன் தமது விளையாட்டை கைவிட்டுவிட்டார்கள்"

"கும்...கும்"

"மாமா 'ஸ்பெசல்' அனுப்புறார். வாங்கத்தயாரா இருங்கோ."






## உருவகம்

# ஒரு முகிலின் கறை

வானம் உடைந்து கொட்டியதோ என்று ஒவ்வொரு வரும் எண்ணும் வண்ணம் சீ! என்று சூறாவளியுடன் கூடியமழை அடித்துக்கொண்டிருந்தது. சில நாட்களாகவே இப்படித்தான். கார் முகில் ஒன்று பூமிக்குத்தான் யாரென்று காட்டுவேன் என்று கடும் பிரயத்தனம் செய்து கொண் டிருந்தது "சூரியன் யாரவன் எனக்கு முன்னே!" என்று சொல்லி. தன்னால் முடிந்த இருட்டையே எங்கும் போதித்தது. சில இடங்களில் சூரியன் மறைக்கப் பட்டிருந்ததால் விடியலிற்கான பொழுதுகள் அங்கே அறியப்படாமல் இருந்தன.



வானம் பார்த்த உழவர்கள் வீட்டுக்குள்ளேயே முணு முணுத்துக்கிடந்தார்கள். கதிர்பரப்பியெழும் அந்தக்கதிரவனின் வரவினில் கருக்கொள்ளும் காலையின் அழகினில், அவர்கள் கொண்ட காதலின் விளைவால், தாம் சுமந்த சோகங்களை இப்படி இடையே ஓர் முகில் வந்து, தன்னிச்சைக்கு இரையாக்கியதோ என்று அஞ்சினார்கள்.

மழைகள் ஒழுங்கானவைகள் தான்! இந்தச் சூறாவளிதான் தனக்கு அதை சுயமாக்கிக் கொண்டு விட்டது! சிலர் சொன்னார்கள்.

சூறாவளியோ கற்பூரச் சட்டியை காலால் மிதித்து சொல்லியது, அப்பட்டமான பொய் அது என்று இருந்தும் நிழல்களாக இருக்கும் கிளைகள் முறிவதிலும்,நம் நிம்மதி குலைவதிலும் சூறாவளியின் விருப்புகளே வெளிப்பட்டு நின்றன.

"சூரியன் எதற்காக இப்படிப்பட்ட சுயநல முகில்களை வானம் ஏற்றினான்?"

"ஏற்றும் போது ஒழுங்காகத்தான் இருந்திருக்கும். ஏறிய பின்னர் தான் உச்சிமமதை உள்ளே ஏறி உருக்குலைக்கக் காத்திருக்கும் சூறாவளியோடு சேர்ந்து...சீ! என்று தொடர்ந்தும் அடித்துக்கொண்டிருந்தது.

"நேசிக்கப்படுவதை விடுத்து நிந்திக்கப்படுவதை ஏன் இது விரும்புகின்றது?"

"ஒருமுறை ஓங்கி மூசும் போது,தானே அனைத்துமாய் எண்ணும் தலைக்கனம். சூறாவளியின் வருடலில் உச்சி குளிர்ந்த தால் ஏற்பட்ட கிளர்ச்சி வேறு அனைத்துமாய் இருக்கும் கதிரவன் பகடு ஏதுமின்றி அமைதியாய் இருக்க, அவன் ஏற்றி விட்ட முகிலோ..."

"காற்று அடங்கும்போது பாருங்கள்!" "காற்று அடங்கும் வரை காத்திருக்க வேண்டுமா?"


சிரித்தவாறே "காற்று அடக்கப்படும் காலம்வரும். கறையேறிய முகில்கள் அப்போது பதில் சொல்லவேண்டிவரும். இயற்கையாக, இயற்கையோடு, இயற்கைக்காக மானிடவிழுமியங்களில் இயங்கும் சூரியனின் சுழற்சியில் இப்படிப்பட்டவைகள் இனம் காணப்படும். இருந்தும் மேலதியவை குறித்தும் நாம் விழிப் பாக இருக்கவேண்டும்.!"

"என்னவோ அமைதியாய் இருக்கு சூரியன் மீது இன்னும் ஆத்திரமாய் உள் ளது."

"எங்கள் மூச்சுக் காற்றில் சுமந்த முனைப்பினை மறுதலித்து. தன்னோடு இனங் காட்டிய முகிலின் மோகத்திற்கு ஒரு போதும் இடம்கொடோம். அதனால் கீழே சிந்துவதற்கு வழி பார்த்திருந்தோம். எம்மை எப்போதும் அறிந்த கதிரவா! இப்போது உந்தன் மடியில் நாங்கள்!" இவ்வாறு இலைகளில் வடிந்து கொண்டிருந்த மண்ணை நேசிக்கும் துளிகள்.

இடைவெளிகள் இதயங்களுக்கிடையில் இல்லை என்பதைப் புரிந்து வைத்திருக்கும். தன்மடி வளர்ந்த துளிகளை எண்ணிக் கதிரவன் களிப்படைந்தான்.

அந்த முகில் ஒருநாள் முடிந்து போனது. நேசிக்கப்பட்டு நெஞ்சங்களில் நிலைத்திருப்பதை விடுத்து நிந்திக்கப்படுவதைத் தேர்ந்தெடுத்த அது, கறைபடிந்த தனது கதை யோடு முடிந்து போனது. எந்தக் கோயில் மணியும் ஒலிக்கவில்லை! எங்கேயேனும் தீபங்கள் ஏற்றப்படவில்லை! எவர் கண்களும் கசியவில்லை!!



"சண்டைதொடங்கிட்டுதுபோல."

சண்டை ஆரம்பமாகிவிட்டது என்றசெய்தி தொலைத்தொடர்பு கருவிமூலம் அவர்களுக்கு எட்டியது.

"பிள்ளைகள் ராத்திரி நான் சொன்னமாதிரி எல்லாரும் நிலை எடுத்து இருங்கோ."

"அக்கா பின்னால வாற செல் பையன்கள இண்டைக்கு நாங்க தான் ஏந்தப்போறம்"

"நிலாமகள் கூறவும், சொல்லி வைத்தது போல எறிகணைகள் கூவிவந்தன. அவர்கள் நின்ற பிரதேசத்திற்குள் செறிவாக விழுந்த எறிகணைகளிடமிருந்து தம்மைப்பாதுகாக்க அவர்களுக்கு கிடைத்த ஒரே ஒரு பாதுகாப்பு, அவசர அவசரமாக இரவு வெட்டப்பட்ட திறந்த அகழிகளே, மரங்கள் முறிந்து அகழிகளுக்கு மேல் விழுந்தன.

"நிலாமகள் பாதுகாப்பா இருங்கம்மா. இந்த இடத்தின்ர பாதுகாப்பு எங்கட கையில, இடத்துப்பாதுகாக்க எங்களப்பாதுகாப்பா வைச்சிருக்கோணும்."

அணித்தலைவி தனது அகழிக்குள்ளிருந்து குரல் கொடுத்தாள். அவர்கள் உயிரைப்பறித்தே தீருவோம் என்பது போல எறிகணைகள் சுற்றிச்சுற்றி அப்பிரதேசத்துக்குள் விழுந்துகொண்டிருந்தன.

"கும்" அணித்தலைவி இருந்த அகழிக்குள் புகைந்தது.

"அக்கா" கூவிக்கொண்டு நிலாமகள் எழுந்தோடினாள். அகழிக்குள் இருந்த இருவரையும் காணவில்லை.

அணித்தலைவியின் நீண்ட பின்னல் மரக்கிளையில் தொங்கிக்கொண்டிருந்தது. துக்கம் நெஞ்சை பிழிய போகத்திரும்பியவளின் அருகே அடுத்த எறிகணை

"ரெண்டு மூன்று பேர் காயப்பட்டிட்டினம், வாகனத்துக்கு அறிவியுங்கோ."

"வோக்கி சிதறிட்டுது என்னெண்டு அறிவிக்கிறது?"

"செந்தூரா.. அந்தக் தம்பியின்ர கையில இந்த ஆயுதத்தை குடுக்க நான் விரும்பேல்ல, அவன்ர கையில சுதந்திர தமிழீழத்தையும் , அதக்கட்டி எழுப்பிற பொறுப்பையும், பாதுகாக்கிற பொறுப்பையும் தான் குடுக்கவிரும்புறன். ஒவ்வொரு மாவீரனும் இதத்தான் விரும்புவினம்..."

"ஓம் நிலாமகள் நாங்கள் எங்கட இளம் சந்ததியிட்ட கொடுக்கப்போறது ஆயுதத்தையல்ல.."

செந்தூராவின் உறுதிமொழியால் அகமகிழ்ந்த நிலாமகளின் முகம் சிரித்தது. தலை அமைதியாய் நிலத்தில் சாய்ந்தது.

"தம்பி நான் உன்னட்ட தரப்போறது...."

# பொய்யமர்வு

அமரத்துவமான
உண்மைகளின் மேல் ஏறி
ஆட்சி அமர்கிறது பொய்.
நிஜங்களின்
நீடுளியில்
குடியேறி கூத்தாடும்
விசமிகள்.
பழுப்புச் சிரிப்போடு
தூரத்திலே
விழுப்புண் வீரர்கள்,
பொய்யிலே
உண்மையின் கலப்படமும்
பொறிந்தொழுகியபடி.........

ப. அருள்நேசன்

# மீழும் மனித ஏக்கங்கள்


அந்தப் பாதை
அகலத் திறந்திருக்கும்
இடையிடையே...
அரக்க மண் அணைகளில்
துவக்கு முனைகள்
தெரிந்தபடி...

இப்போதும்
பள்ளிக்குத்தான் போகிறேன்.
பாதையருகேயென் பழைய வளவின்
ஊஞ்சலாடி மகிழ்ந்த
மாமரத்தின் காய்கள்,
கனிகளை..
எட்டமுடியாத ஏக்கத்துடன்
அதற்கப்பாலே...
'.............'
நல்ல முற்றம்
நலிவடையாத தென்னைகள்,
நான்கு அறைகளுடைய
வாடகை வீடுதான்- எனது
இன்றைய இருப்பிடமாய்...

எத்தனை தடவைகள்
ஏறியிறங்கிய அந்தப் படிகளில்
ஏதோவொரு நம்பிக்கையுடன்
காணி தருவாரெனக்காத்திருக்கும்
பலருடன் இணைந்து எனது அப்பாவும்....
'...........'

அடிக்கடி
படலை பார்த்துப்படிக்கும்
அக்காவின் நச்சரிப்பெல்லாம்
இப்போது
வன்னிக்குப்போய்விடவேண்டும்.
என்பதுதான்.

பாடம் முடிந்து
பாதையால் வருகிறேன்.
பாதுகாப்பு எல்லையிலுள்ள
எனது காணியை
ஏக்கமுடன் பார்த்தபடி...



ஓ....
மாலையானவுடன்
மரண அமைதிக்காய்-என்
மாமர வளவு கடந்து
வேகமுடன்....

நா. கானகன்



# குழந்தைநாதம்

## தெனாலிராமன் வளர்த்த குதிரை

கிருஸ்ணதேவராயரின் குதிரைப்படை மிகவும் பிரமாண்டமானதாகும். ஆயிரக்கணக்கான குதிரைகள் அவருடைய குதிரைப் படையில் இருந்தன. போர் இல்லாத சமாதான காலங்களில் அவ்வளவு குதிரைகளையும் பராமரிப்பதற்கு அதிக சிரமப்பட வேண்டி இருந்தது. செலவும் அதிகமாக ஆயிற்று.

செலவையும் நிர்வாகச். சிரமத்தையும் குறைப்பதற்கு மன்னர் ஒரு முடிவு செய்தார். குடிமக்களிடம் வீட்டுக்கு ஒரு குதிரையைக் கொடுத்து வளர்க்கச் சொல்லலாம். குதிரையை அவர்கள் வளர்ப்பதற்கு மாதா மாதம் ஒரு உதவித்தொகையைக் கொடுத்து விடலாம்.

இது தான் மன்னரின் திட்டம். மன்னரின் திட்டம் முரசறையப்பட்டு மக்களுக்குத் தெரி யப்படுத்தப்பட்டது.



மக்கள் சாரி சாரியாக வந்து ஆளுக்கு ஒரு குதிரையை வளர்ப்பதற்காக வாங்கிச்சென்றார்கள். தெனாலிராமனும் வளர்ப்பதற்கென தனக்கு ஒரு குதிரையையும் வாங்கிக் கொண்டான்.

குதிரையைப் பெற்றுச் சென்றவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குதிரையைக்கொண்டு வந்து காண்பித்து விட்டுச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனையும் போடப்பட்டது.

தெனாலிராமன் குதிரை வளர்ப்பு தொடர்பாக தனது வழக்கமான வேலையைச் செய்யத் தொடங்கிவிட்டான்.

அவன் குதிரையை ஒரு குடிசையினுள் அடைத்து வைத்தான். குடிசை வாசலில் சுவர் ஒன்றை எழுப் பினான் அந்த சுவரின் ஒரு பக்கத்தில் மட்டும் சிறு துவாரம் ஒன்று அமைத்தான். தெனாலிராமன் அன்றாடம் ஒரு கைபிடி அளவு புல்லை மட்டும் எடுத்து அந்தத் துவாரத்தின் வழியாக உள்ளே நீட்டினான்.

குதிரை அந்தப்புல் கற்றையை வெடுக்கெனப் பிடுங்கிக்கொள்ளும். அந்த ஒரு கைபிடி புல் தான் குதிரைக்கு அவன் அளிக்கும் அன்றாட தீனி. குதிரை வயிறார உண்ண வழியில்லாதகாரணத்தால் எலும்பும் தோலுமாக இளைத்திருந்தது. எந்தநேரத்திலும் உயிரை விட்டு விடக்கூடும் என்ற பரிதாப நிலையில் குதிரை இருந்தது. மன்னர் விதித்த நிபந்தனையின்படி குதிரை வளர்ப்பவர்கள் குதிரையை மன்னரிடம் கொண்டுசென்று காண்பிக்கக்கூடிய நேரம் வந்தது.

குதிரை வளர்ப்பவர்கள் தாங்கள் வளர்க்கும் குதிரைகளுடன் வந்து சேர்ந்தனர்.

தெனாலிராமன் மட்டும் குதிரையுடன் வராமல் தான் மட்டும் வந்திருந்தான். மற்ற குதிரைகள் எல்லாம் மிகவும் கவனிப்புடன் நன்றாக வளர்க்கப்பட்டிருந்தன. அவை ஆரோக்கியமாகவும் பலத்துடனும் திகழ்ந்தன. மன்னர் தெனாலி ராமனை நோக்கி "தெனாலிராமா உன்னுடைய குதிரை எங்கே" என்று கேட்டார்.

"மன்னாதி மன்னரே குதிரை மிகவும் வலிமையும் முரட்டுத்தனமும் கொண்டதாக உள்ளது. அதை இங்கே கொண்டு வந்தால் ஒரு ரகளையே செய்து இங்கே கூடியுள்ள மக்களுக்குப் பெருந் தொல்லையே விளைவித்துவிடக்கூடும் என எனக்கு அச்சமாக உள்ளது. அருள் கூர்ந்து நமது குதிரை வளர்ப்புத்துறையின் தலைவரை என்னுடன் வீட்டுக்கு அனுப்புங்கள். அவர் அங்கே வந்து நான் வளர்க்கும் குதிரையை பார்வையிடட்டும். அவர் என்ன கருத்து சொல்லுகின்றார் பாருங்கள்" என்றான் தெனாலிராமன். அரசாங்க குதிரை வளர்ப்புத்துறை அதிகாரிக்கு நீண்ட தாடியிருந்தது.

அவர் மன்னரின் உத்தரவுப்படி தெனாலி ராமனுடன் அவனுடைய வீட்டுக்குப் புறப்பட்டார். வீட்டை அடைந்ததும் "தெனாலிராமா நீ வளர்க்கும் குதிரை எப்படி இருக்கின்றது" என்று அதிகாரி கேட்டார். குதிரையை அடைத்து வைத்திருக்கும் குடிசையைச் சுட்டிக்காண்பித்த தென்னாலிராமன் "அதோ அவற்றிலிருக்கும் சிறு துவாரத்தின் வழியாக உள்ளே எட்டிப்பாருங்கள்" என்றான்.

"இது என்ன விநோதமான ஏற்பாடாக இருக்கின்றதே! குதிரையை யாராவது இப்படி அடைத்துவைத்து வளர்ப்பார்களா?" என்று கேட்டார் அதிகாரி. "இது முரட்டுக் குதிரையாக வளர்ந்து விட்டிருக்கின்றது. விட்டால் நம் இருவருடைய உயிரும் அதோகதிதான். அதனால் இந்த துவாரத்தின் வழியாக மிகவும் ஜாக்கிரதையாக எட்டிப்பாருங்கள்" என்றான் தெனாலிராமன்.

அதிகாரி பயந்து கொண்டே துவாரத்தின் வழியாக கழுத்தை உள்ளே நீட்டிப்பார்த்தார்.

அதிகாரியின் நீண்ட தாடியைக் கண்ட உடனே தெனாலிராமன் வழக்கமாகக் கொடுக்கும் புல் என்று எண்ணிக்கொண்டு 'லபக்' என்று அதனை வாயினால் கௌவிப் பிடித்துக்கொண்டது.

"ஐயோ ஐயோ என்று அலறியவாறு தாடியை குதிரையிடமிருந்து விடுவித்துக்கொள்ளப் படாதபாடு பட்டார்"

ஆனால் முடியவில்லை. குதிரையோ தாடியுடன் சேர்த்து அதிகாரியை உள்ளுக்குள் இழுத்தது. "தெனாலிராமா என் உயிரைக் காப்பாற்று" என்று அதிகாரி அலறினார்.

"நான் என்ன செய்ய முடியும். குதிரை, அளவுக்கு அதிகமாக தீனியைத்தின்று கொளுத்துக் கிடக்கிறது" நீங்கள் தான் உங்கள் சாமர்த்தியத்தால் விடுபடவேண்டும்' என்று கூறி தெனாலிராமன் தூங்கிவிட்டான்.

அதிகாரியின் ஜீவமரணப்போராட்டத்தைக் கேள்விப்பட்டமன்னர் அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் தெனாலிராமனின் வீட்டிற்கு விரைந்து வந்தார்.

குதிரை, அதிகாரியின் தாடியைப்பிடித்து உள்ளுக்குள் இழுக்க, அதிகாரியோ தாடியை காப்பாற்ற வெளியே இழுக்க, நடைபெற்றுக்கொண்டிருந்த போராட்டத்தைக்கண்டு மன்னர் திகைத்தார். பிறகு காவலர்களை விட்டு அதிகாரியைக் குதிரையிடமிருந்து மீட்க நடவடிக்கை எடுக்குமாறு கூறினார்.

காவலர்கள் என்ன முயன்றும் அதிகாரியைக் குதிரையிடமிருந்து மீட்க முடியவில்லை. கடைசியில் அதிகாரியின் தாடியைக் கத்தரிக்கோலால் கத்தரித்து அதிகாரியைக் குதிரையிடமிருந்து மீட்டார்கள். மன்னர் உத்தரவுப்படி குதிரை இருந்த கட்டடத்தின் முன்புறச் சுவர் இடித்துத் தள்ளப்பட்டது. உள்ளே பார்த்தால் நிற்கக்கூட சக்தியில்லாமல் குதிரை எலும்பும் தோலுமாகக் காட்சி அளித்தது. "தெனாலிராமா குதிரை வளர்ப்பதற்காக நான் கொடுத்த நிதியை நீ தின்று கொழுத்துவிட்டு, குதிரையை பட்டினிபோட்டு பாழாக்கி விட்டாயே" என்று மன்னர் கோபித்துக் கொண்டார். தெனாலிராமன் மன்னரை பவ்வியமாக வணங்கி "மன்னர் பெருமானே இந்த அளவுக்கு குதிரைக்கு தீனி கொடுத்திருக்கும்போதே அதிகாரியின் தாடியை மீட்பது பெரும்பாடாகிவிட்டது. இதற்கு வயிறு நிறைய தீனி கொடுத்திருந்தால் அதிகாரியை ஒரேயடியாக விழுங்கி ஏப்பமிட்டிருக்கும்" என்றான். மன்னன் தன்னை மறந்து சிரித்துவிட்டார்.

"தெனாலி ராமா உன்னுடைய நகைச்சுவை ஆற்றலால் ஒவ்வொரு தடவையும் தப்பித்துக் கொள்கிறாய். நீ செய்த தவறை வேறுயாராவது செய்திருந்தால் மரணதண்டனை கொடுத்திருப்பேன். உன்னுடைய நகைச்சுவைப்பேச்சு உன் உயிரையே காப்பாற்றி விட்டது. என்றாலும் இந்த மாதிரி வாயில்லாப்பிராணிகளின் உயிரோடு விளையாடும் வழக்கத்தை இன்றுடன் விட்டுவிடு" என மன்னர் எச்சரித்தார்.

### பார்போற்ற வாழ்ந்திடு

*சின்னப் பாதங்கள் வைத்து - நீ*
*சிட்டுப் போலவே வந்து*
*சிறந்த கல்வியைப் பெற்று*
*பார் போற்றிட வாழ்ந்திடு மகளே!*

*அன்னை மடிவிட்டு இறங்கி - நீ*
*அன்பு பயின்றிடு இங்கு*
*ஆசான் அறிவுரை கேட்டு -*
*என்றும் பண்பினைப் பேணிடு*
*மகளே!*

*வண்ணத் தமிழுடன் சமயம் - நீ*
*விரும்பிடும் சுற்றாடற்கல்வி*
*வாய்மொழி ஆங்கிலம்*
*அழகியல் - உயர்*
*கணிதமும் கற்றிடு மகளே!*

வாஹினி.

### நகைச்சுவை



"கணபதிக்கும் கம்ப்யூட்டருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?"

"இரண்டிற்கும் அருகிலேயும் மௌஸ் இருக்குமே!"

## வாரம் ஒரு குறள்



*'கல்வி' ஒருவரை வாழவைக்கும். அந்தப் பெருமையையும், சிறப்பையும் தன்னகத்தே கொண்டதுதான் கல்வி. ஆனால் எந்தவொரு விடயத்தையோ அல்லது எந்தவொரு நூலையோ கற்பதற்கு நாம் தயாராகும் போது அதன் ஆழமாக மிக நுட்பமாக கற்றிட வேண்டும். அது மட்டுமன்றி கற்ற கல்வி போலவே வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட வேண்டும். அதாவது கற்பது எல்லாமே வாழ்க்கையை நல்லவழியில் வாழ்வதற்கே என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.*

*ஆனால் இன்றைய கல்வி வியாபாரம் போன்று மாறி வருகின்றது எதனையும் முழுமையாக ஆராய்ந்து அறியாமல். இங்கொன்றும் அங்கொன்றுமாக. பலதையும் நுனிப்புல் மேய்ந்தால் போல கற்றுவிட்டு. எல்லாமே தெரியும் எனும் நிலையாக மாறிவருகின்றது. ஆனால் இதன்படி வாழநினைத்தால் வாழ்க்கை சிக்கலுடையதாகவே இருக்கும். அதனால் தான்.*

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக."*

*என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.*

## சொற்சிலம்பம் - 35

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| து | கோ | வி | ர | ப | கி | யா |
| உ | ய | தை | ழை | க் | ல | லா |
| கொ | மு | ஆ | த | கி | டு | ட் |
| ட் | றெ | னா | பொ | த் | யி | ம் |
| நி | மா | *ப | து | டி | மி | சு |
| வி | ட | ந் | செ | டு | கீ | ழை |
| வ் | கொ | ளி | வா | மே | தி | தா |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -33 இன் விடைகள்

01. வாழை.
02. மா.
03. பலா.

01. ஆதவன்.
02. ஞாயிறு.

### சொற்சிலம்பம் - 33 இன் பரிசுக்குரியவர்

த.தமிழன்பன்,
1ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

### சொற்சிலம்பம் - 33 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ஜெ.தட்சாயினி, ஆண்டு-04, விக்னேஸ்வரா வித்தியாலயம்,கோம்பாவில்.
02. ஆர்.விஜயசிறி, வேலணைகிழக்கு, 4ம் வட்டாரம்.
03. ல.நிரோஜன், D8 உருத்திரபுரம் இல.54, கிளிநொச்சி.
04. ம.ரதீஸன் ஆதவன், கனகாம்பிகைக்குளம், இரணைமடு.
05. த.மலர்விழி, 391,திருநகர், மல்லாவி.
06. செ. நிலாவரசி, கரைநகர், யாழ்ப்பாணம்.

01 விளையாட்டுக்களில் மூன்று?

01) ..............................
02) ..............................
03) ..............................

*சொற்சிலம்பம் - 35*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

02. இறைச்சியைப் பெறும் உயிரினங்களில் இரண்டு?


01) ..............................
02) ..............................

பெயர் :- ..............................

முகவரி :- ..............................

..............................

## ஒரே மாதிரியான முடிகளை சூடியுள்ள இரு அரசிகளைக் கண்டு பிடியுங்கள்.



## புரிதலும் தெளிதலும்

எங்கள் மத்தியில் சில சொற்பதங்கள் உள்ளன தப்பிவிடுதல், நழுவிவிடுதல், வெட்டிவிடுதல், இவற்றின் பின்னால் நடந்து முடிந்துவிடும். காரியங்கள் வளர முயலும் ஒரு விரிட்சத்தை கிள்ளி எறிந்து விடுவது போல அமைந்துவிடுவதுண்டு.

இப்படிப் பிதற்றுவது அல்லது கோவப்படுவது சில பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரங்களின் பொறுப்பிலிருக்கும் திணைக்களங்கள், நிறுவனங்கள், மற்றும் சில உதவும் நிறுவனங்கள் என்பவற்றின் நடவடிக்கைகளினாலாகும்.

இலவசக் கல்வி முறை உள்ள ஒரு நாட்டில், அல்லது சமூகத்தில், கல்விப் பாரம் பரியம் பற்றியும்,கல்வியினால் சாதனைகள் செய்பவர்கள் என்றும் எங்களுக்கு நாம் போடும் மாலைகள் ஏராளம்.

ஆனால் இந்தக்கல்வியினால் ஒரு எல்லையைத்தொடமுயலும் ஒரு வறுமைப்பட்ட பிள்ளை தன் கல்விக்காக இவர்களின் வாசல்களைத் தட்டும் போது நாம் மேற்சொன்ன தப்பிவிடுதல், நழுவிவிடுதல், வெட்டிவிடுதல், என்பவற்றை கனகச்சிதமாக நிறைவேற்றுவதில் வின்னர்களாகி விடுகிறார்கள் இது நியாயமா? இது தகுமா?

### பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்

வட்டக்கச்சியில் ஆறுபிள்ளைகளைக் கொண்ட தந்தையை இழந்த குடும்பம். தாயே கூலி வேலை செய்து பிள்ளைகளைக் கல்விகற்க வைத்துள்ளார்.

இப்படிப்பட்ட பிள்ளை பலராலும் பல முறை "இவையலுக்கு ஏன் படிப்பு" என்ற வசை மொழிகளையும் தாண்டி கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு விட்டார்.

அடுத்து தனது கல்விச் செயற்பாட்டுக்கு தேவையான குறைந்தளவு உதவிவேண்டி பொறுப்புணர்வுடன் உதவிசெய்யவேண்டிய திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் தயவை வேண்டிய போது அரச அதிகாரிகள் முதல் உதவும் நிறுவனம் வரை அந்தப் பிள்ளைக்கு உதவ முன்வரவில்லை.

ஒரேஒரு நிறுவனம் வழங்கிய சிறு தொகையைக் கொண்டு பல்கலைக்கழகத்தில் தன்னைப் பதிவுசெய்துவிட்டு அடுத்த கட்டத் துக்காகக் காத்திருக்கிறாள் அந்த மாணவி.

யார் பொறுப்பை உணர்வார்? யார் அந்த மாணவியின் துயரை தீர்ப்பார்? சிலவேளை இது சமூகத் தொண்டுக்குள்ளும் கல்வி வளர்ச் சிக்குள்ளும் அடங்கவில்லையோ என்னவோ?

நாம் எங்கே போகிறோம் சிந்தித்து கல்வியின் பாதையில் நடைபோட தயாராக வேண்டாமா?

பொறுப்பு வாய்ந்த திணைக்களங்களும், நிறுவனங்களும் இது பற்றிச் சிந்திக்க வேண்டாமா? சிந்திக்கவேண்டும் இதுவே எங்களின் எதிர்பார்ப்பு.

சில நடைமுறைச் சிக்கல்களையும் அற்ப காரணங்களையும் கூறி அந்த மாணவியின் கல்விக்கு உதவுவதிலிருந்து தப்பிவிடுதல் கூடாது.

இது ஒரு மாணவியின் உயர்கல்வி நோக்கிய பயணத்தின் ஆரம்பம். அந்த மாணவிக்கும், அந்தக் குடும்பத்திற்கும் நம்பிக்கை ஊட்ட வேண்டிய பொறுப்பு நிச்சயம் எல்லோருக்கும் உண்டு.

இது விடுத்து எவரும் ஒதுங்கிவிடக் கூடாது.

— வேழினி

**தொடர் - 18**

"நேற்று முந்தநாள் வேகங் களுடன் பார்க்கும்போது, வலு ஆறுதலாகப் போகப்போகிறோம், போலிருக்கிறதே!" "நறொக் நகரைத் தாண்டிக்கொஞ்சத்தூரம் போனதுமே பிறகு இந்த மாதிரி பெருந்தெருவோ - அல்லது தார்போட்டபாதையோ கூடக்கிடையாது: மண்பாதை குண்டுங் குழியும் - வெள்ளமும் கூட - இருக் கிற காட்டுப்பாதை. முதல்



## (கென்யப் பயணக்கட்டுரை)
# காட்டு வெளியிடை

**சாந்தன்**



200கீ.மீற்றரைத்தாண்ட எடுக்கிற அதேயளவு நேரம் அடுத்த 75கி.மீற்றரைக் கடக்க எடுக்கும். அதாவது நறொக்வரை பழைய வேகத்திலேயே போகப்போகிறோம்.." அயூப் விளக்கினார்.

ஜோமோ கென்யாட்டா சர்வதேச விமான நிலையத்தை விட்டுப்புறப்பட்டு வானில் வந்து கொண்டிருந்த அந்த அன்றுகாலை வேளையில் அலிஸ்ஸாண்டி கூறிய புத்திமதிகளும் எச்சரிக்கைகளும் எனக்கிப்போது நினைவுக்கு வந்தன. நகரங்களில் வானின் ஜன்னல்களைத் திறக்கவேண்டாமென்று கூறியபின் அலிஸ் சொன்னார், "காட்டிலுங்கூட அப்படித்தான்! ஜன்னலைத் திறந்தால் கையொன்றைக்கூட இழக்கவேண்டி வரலாம்!" அந்த எச்சரிக்கை தொடர்ந்தது! "மஸாய் மாறாவுக்கு நீங்கள் போவதும், மஸாய் மாறாவில் போகப் போவதுந்தான் உண்மையான ஸஃபாரி! எதற்கும் நீங்கள் தயாராக இருக்கவேண்டும்". சிலவேளைகளில் உங்கள் வாகனம் பாதைக்குழியில் இறங்கிவிட்டால் அல்லது சேற்றில் சிக்கிவிட்டால் இறங்கித் தள்ளக்கூட நேரிடலாம். அநேகமாக எங்கள் வாகனங்களில் ஒரு தடவையில் பத்துப்பன்னிரண்டு சுற்றுலாப் பயணிகள் போவார்கள். இதில் நீங்கள் மூவர் மட்டுமே அதிலும் இரண்டுபேர் தான் ஆண்கள் - ட்றைவரை விட..."

ஜன்னல் கதவைத் திறந்தால் கையையேகாவு கொண்டுவிடக்கூடிய காடு, இறங்கித் தள்ளினால் என்ன செய்யுமோ என்று பயமாயிருந்தது! அதைக்கேட்டால் அலிஸ் தவறாகப் புரிந்துகொண்டுவிடுவாரோ என்றும் பயமாக இருந்தது: கேட்கவில்லை.

நக்குறுவிலிருந்து தெற்கே - கொஞ்சம் கிழக்காக- நேரேபோய் நய்வாசாவைத் தாண்டிய கையோடு மேற்கே திரும்பி நேரே போக வேண்டுமென்றார் அயூப் - இரண்டு நாட்கள் மஸாய்மாறாவின் வனவனாந் தரங்களெல்லாம் சுற்றிவிட்டுத்திரும்பும் போது ஒருநாள் நய்வாஷாவில் தங்குவோம் என்றும் சொன்னார். ஞாயிற்றுச் சந்தைகள் கூடி நின்ற சின்னச்சின்ன ஊர்களைத் தாண்டிப் போனோம். சிவப்பும், பச்சையும், மஞ்சளும், நீலமும், கறுப்பும் என்று பளிச்சிட்ட நிற உடைகளில் மனிதர்கள், காய்கறிக்கடைகள், கழுதை வண்டிகள்! படமெடுக்க ஆயத்த மானோம். அயூப்கத்தினார்.

"நோ,நோ! வேண்டாம்....!"

"ஏன்?"

"இந்த மக்கள் படமெடுக்க விடுவதே கிடையாது. முதல்ாவது காரணம், மூடநம்பிக்கை. தங்கள் படத்தை வைத்துத் தங்களுக்கு யாராவது தீங்கு செய்துவிடலாமென்று மந்திரதந்திரங்களில் நம்பிக்கையுள்ள இவர்கள் பயப்படுகிறார்கள். மற்றது, வெளிநாட்டார் இங்கு வந்து தங் களைப் படம் பிடித்துக்கொண்டு போய் விற்றுப் பெரும் பணம் சம்பாதிக்கிறார்கள் என்றும் கோபம். அதில் ஓரளவு உண்மையு மிருக்கிறது...."

நாங்கள் படமெடுத்துக் கொண்டுபோய் அவர்களுக்கு செய் வினை - சூனியம் செய்யவோ, அந்தப்படங்களை விற்கவோ போவதில்லை. இந்த அற்புதமான ஆபிரிக்கக் கிராமியக் காட்சிகளைத்த வறவிடுவதா?

"அவர்களுக்குத் தெரியாமல் ஓடும்வாகனத்திலிருந்தே மெல்ல எடுத்து விடலாம்!"

"வேண்டாம்....!" - அயூப் அலறினார்..." கல் எறிவார்கள்! இப்படித் தான் கொஞ்சநாட்களுக்குமுன் ஒரு வெள்ளைக்காரன் படமெடுத்ததைக் கண்ட ஒரு மனிதன் துரத்தி கல்லெறிந்ததில் அந்த வானின் காண்ணாடி சிதறியே போனது!"

நய்வாஷா கூட அழகான நகராய்த்தானிருந்தது. கடைகள் யாவும் பூட்டியபடி அவசரமாய் அதைத் தாண்டிப்போனோம். நகரைத்தாண்டிய கையோடு அழகான மஞ்சள் அக்கே 'ஷியா மரத்தோப்புகள் மாறிமாறி வந்தன. குடைவிரித்துப் பரந்தகிளை களும், வெண்தேமல்படர்ந்த மஞ்சள் அடி மரங்களுமாய் அத்தோப்புகள் மறைய மீண்டும் முகில்தவழும் மலைவிளிம்புகளும் வெளிகளுமாய் பாதை நீண்டது. கென்ய மலைக்ளைப் பற்றி முன்பு சொன்னேனோ தெரியாது: சொன்னாலுங்கூட இன்னொருதடவை ஏன் எத்தனை தடவைகளும் - அவற்றைப் பற்றிச் சொல்வது தகும். நாங்கள் அறிந்த மலைகளைப்போல் நெட்டுக்குத்தாக நீற்றுப்பெட்டியை நிமிர்த்தி வைத்தாற்போல - மரங்களும் பற்றைகளும் அடர்ந்து இருண்டு - என்றெல்லாமில்லை. தலையணை களைப் பக்கம்பக்கமாய் பாயில் அடுக்கிவிட்ட மாதிரி: வாய்க்கால் களின் வரம்பு மாதிரி. பள்ளத்தாக்கின் பக்கங்களில் - பசும்புல் போர்த்தியபடி - தானுங்கூடவரும் பெருமரங்கள், பற்றைகள் இல்லையென்கிற மாதிரி. மேற்பரப்பும் அநேகமாகப் பரந்து மழுங்கி இருக்கும். ஏறி அந்த உச்சி யில் உலவிவரலாம் போலவும், படிந்திருக்கும். மெல்லிய முகில்களுள் புகுந்துவரலாம் போலவுமிருக்கும். குறைந்த பட்சம் இப்படியே வானைத்திருப்பிக்கொண்டு மேலே போய் ஒரு 'றவுண்ட்' அடித்துத் திரும்பலாமென்று ஆசை காட்டுகிற மலைகள். அப்போது காலை வெய்யி லில் மஞ்சள் பூசிக்கிடந்தன.

"இந்த மலைகளுக்கு மேலே வானிலோ, நடந்தோபோகமுடியாதா?" - அயூப்பைக்கேட்டேன்.

"இல்லை: பாதையே கிடையாது" என்றுவிட்டார். ஏக்கத்துடன் அந்த மலைகளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அதோ....!" என்றார் அயூப், சற்றுப் பொறுத்து,..." ஒரு மஸாய்!"

"எங்கே...?" ஒன்றுமே தெரிவதாயில்லை. இன்னும் உற்று நோக்கியதில் தொடுவான் அருகே நகர்ந்துகொண்டிருந்த ஒரு செம்புள்ளி கண்களில்பட்டது. கிழக்காபிரிக்காவின் வனாந்தரங்களில் மந்தை மேய்த்துத் திரியும் அந்த நெடிதுயர்ந்த மக்கள் கூட்டத்தைப்பற்றி, சிவப்புப்போர்வை களும்,கையில் கங்கணங்களும் ஈட்டிகளுமாய், பசுப்பாலையும் - அவசரத்திற்கு மாட்டின் கழுத்தைக் குத்தி அதிலிருந்து இரத்தத்தையும் - குடித்தலைந்து திரியும் அந்த மக்களைப்பற்றி நிறைய வாசித்திருக்கிறேன்: 'நஷனல் ஜ்யோகிறஃபிக்' சஞ்சிகையில் அவர்களின் அற்புதமான படங்க ளையும் பார்த்த ஞாபகம். இப்போது அவர்களை, அந்தக்கோலத்தில், அந்தப் பின்னணியில் பார்க்கப்போகிற பரபரப்பு.

இங்கு வந்து இத்தனை நாட்களுமிருந்தது கிக்கியுபிரதேசம். கிக்கியுக்கள் தங்கள் பாரம்பரிய பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனை கள், குடியிருப்புகள் - எல்லாவற்றை யும் அநேகமாக மாற்றிக்கொண்டு விட்டார்கள் என்றேபட்டது. இவ் வளவு நாட்களும் நாங்கள் காண நேர்ந்த சாதாரண சனங்கள் எங் களவைபோன்ற - காலனித்துவ எச்சசொச்ச - சாதாரண உடைகளில் தான் இருந்தார்கள். இருப்பிடங்கள், குடியிருப்புக்கள்கூட ஏறத்தாழ அவ்வாறே.

எனவே தங்கள் அடையா ளங்களைத் தக்கவைத்துக் கொண்டி ருக்கிற மஸாய்கள், எங்கள் ஆவலைத் தூண்டியதில் வியப்பில்லை.

எனக்கு முன்னாலிருந்த பொருள், என்னை வியப்பி லாழ்த்தியது. பல்லாங்குழிப்பலகை!

"இது என்ன?" என்று கேட்டேன்.

"ஒரு விளையாட்டுக்கான பலகை..."

"அந்த விளையாட்டுக்கு என்ன பெயா?"

"(எ)ம்பாவோ!"

ம்பாவோ! எப்படி விளையாடுவது?"

அந்த ஆள் கா்ட்டிய முறை - எனக்குத்தெரிந்தவரையில் எங்களு டைய விளையாடும் முறை போலவே தானிருந்தது. மணிகளாக நாங்கள் புளியங்கொட்டைகளைப் பயன் படுத்தியதுபோல, அவர்களும் புளியங் கொட்டைமாதிரி அதே அளவுள்ள விதைகளை வைத்திருந்தார்கள். "அது பாவோ - பாவோ மரத்தின் விதை கள். அவற்றை வைத்துவிளையாடுவ தால் இதற்கு 'ம்பாவோ' என்று பெயர்..."

(தொடரும்)

# அன்னை

விழிகாணும் தெய்வமாக
வழிகாட்டும் சுடராக-வாழ்வில்
ஒளிதந்த பௌர்ணமி....
பாசம் தனைப் பொழிந்து
தேசம் எங்கும் புகழோடு விளங்கும்
வாசம் வீசும் மல்லிகை....

தன் உதிரத்தில் பாதியை
உணவாய் சொரிந்து
பிள்ளையின் உயிரை-தன்
வெள்ளை உள்ளத்தில் சுமந்து
கற்பனைகள் பல கொண்டு
கண்ணைக்காக்கும்
இமை போன்றவள்....

பள்ளிக்குச் சென்று
கல்விச் செல்வம் பெற்று
வயதுக்குச் சரியான
வாழ்க்கை தந்திட
வழிகாட்டும் கலங்கரை....

நேர்மையும் நீதியும் நெஞ்சிலே கொண்டு
சாதனைகள் பல புரிந்து
சரித்திரம் படைத்திட-எம்மை
ஏற்றி வைத்த ஏணியவள்....

க.முருகானந்தன்,

# தேவை ஒரு தோழி

வெளிப்படையான பேச்சு
குழந்தை மனம்
கலப்படமற்ற பாசம்
கபடமில்லா நெஞ்சம்
இவைகளை தன் சீதனமாக்கி
என்னுடன் உறவாட
தேவை ஒரு தோழி!
அன்பு செலுத்தவும்
ஆதரவு காட்டவும்
தட்டிக் கொடுக்கவும்
தட்டிக் கேட்கவும்
தன்னலமற்ற தன்னம்பிக்கை
கொண்டவளாக
தேவை ஒரு தோழி!
நட்பு என்ற வார்த்தையை
சீரழிக்கும் இப்பூமியில்
எனக்கும் நல்ல நட்புக்
கிடைக்கும்
என்ற நம்பிக்கையில் வாழ்ந்து
கொண்டிருக்கும்
எனக்கு தேவை ஒரு தோழி!

கு.ஹம்சாயினி

## பணி

அம்மாவிற்கு வீட்டு
ஆசானுக்கு நாட்டு
இளைஞருக்கு நாடுபோற்றவாழ்தல்
த்மிழ் மக்களுக்கு ஈழத்தை
விருத்தி செய்தல்.

## போர்

அடக்கப்படும் உயிரினங்கள்
கிளர்ந்தெழுந்து தன்னைப் பாதுகாக்க
செய்யும் செயற்பாடே.

## கல்வி

மூன்று எழுத்துக்களைக் கொண்ட
மூவுலகு போற்றும் முத்தான சொல்.

## வாழ்வு

இவ்வுலகில் துன்பமும் இன்பமும்
மாறி மாறி வீசும் காற்று
புயல் காற்று வீசினாலும்
ஆணிவேர் கொண்ட மரம் போல்
உறுதியாக நிற்கவே.

## பகல்

இயற்கையின் இன்பத்தால்
கண்ணிற்கு இனிமையூட்டி
மனதிற்கு மகிழ்வூட்டி
மானிடத்தை புரிந்து கொள்ளுதல்.

ஜோ. தயானந்தி

## கவிதை

நினைவுகள் சுழற்சியாக
எண்ணங்கள் சிறகடித்து
பறப்பதனால் பிறக்கின்ற
வார்த்தைகளின் வடிவம்.

## வேண்டுப்

உறவு வளர புரிந்துணர்வு வேண்டும்
மனிதம் வளர - ஆரோக்கியம் வேண்டும்
அறிவு வளர தேடல் வேண்டும்.

## உருவாக்கம்

வெறும் வளர்ச்சி(மனிதனை)ஒருவனை
சிறந்த மனிதனாக்குவதில்லை
தேடலும் சிந்தனையுமே
மனிதனை முழுமனிதனாக
உருவாக்கின்றது.

## நட்பு

பேனாவின் நட்பு
கவி சுரக்கும்
பேப்பரின் நட்பு
அறிவு வளர்க்கும்
கல்வியின் நட்பு
சிறப்புடன் வாழவைக்கும்

## நிலைக்காதது

உண்மை மௌனிப்பதுண்டு
மரணிப்பதில்லை
பொய் குதூகலிப்பதுண்டு
நிலைப்பதில்லை.

சு.சுபாலிங்கேஸ்வரி.

# ஊக்கமாத்திரை

வாழ்வில் நம் எண்ணங்களே நம்மை உயர்த்தும் என்பதால், நம்மையே நாம் தாழ்த்திக்கொள்வது கூடாது. மற்றவர்களைப் போல்தான் நாமும் என்ற மனப்பக்குவம் வேண்டும்.

தாழ்வு மனப்பான்மை தோல்வியைத் தான் அளிக்கும் என்பது அறிஞர்கள் முடிவு.

நமக்கு என்னதெரியும் என்று எண்ணுவதை விட, நமக்கும் தெரியும் என்னும் உண்மைநிலையை உணர்த்தவேண்டும். நண்பர்கள் கூட்டத்தில், உற்றார் உறவினர்களிடத்தில், தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள் ஒட்டி நிற்கவே முடியாது: தள்ளி நிற்கத்தான் முடியும்: காலப்போக்கில் தள்ளி வைக்கப்பட்ட நிலையை உணர்ந்து வேதனைப்பட்வேண்டிவரும்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தாழ்வு மனப்பான்மை செய்யும் பெருங்கெடுதல் ஒன்று உண்டு. அது வீரனையும் கோழையாக்கிவிடும்: துணிவு என்னும் நிலையே மனதில் தோன்றாமல் இருக்கச் செய்யும்:



## உன்னைத் தாழ்த்திக் கொள்ளாதே

அச்சத் தன்மையைக் காட்டுமே தவிர ஆண்மைத் தன்மையைக் காட்டாது: தன்னால் அதைச் செய்யமுடியுமா என்ற நடுக்கத்தை வளர்த்து, எதையும் செய்யமுடியாமல், எதற்கும் பிறர் துணையை நாடியே செய்யக் கூடியதாக்கிவிடும்.

நல்ல நண்பர்களைக் கூட இழக்கவேண்டிவரும் நாட்கள் செல்லச் செல்லத்தான் தன் தாழ்வு மனப்பான்மை தன்னை எந்த நிலைக்கு உள்ளாக்கியிருக்கின்றது என்று எண்ணிப் பார்க்கச் செய்யும். எனவே, வாழ்வில் முன்னேறும் நோக்கமுடையவன் எப்போதும் எவ்விடத்தும் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுதல் கூடாது.

## உழைப்பின் பலன்

மனிதன் தன்னுடைய குறிக்கோள் எதுவென்றுணர்ந்து செயலாற்றவேண்டும். தன் குறிக்கோளுக்கென்று மாற்றுப் பலனை உடனே எதிர்பார்த்துச் செயல்படுவது கவலைக்கு வித்தாகும். உழைப்புக்குப் பலன் வந்தே தீரும்.

"உழைப்பில் முன்னேறுகின்றவர்கள் பலனை அடைகின்றவர்கள். உழைக்காமலே முன்னேற நினைப்பவர்கள் முறையான வாழ்வை மேற்கொள்ளாதவர்களாவார்கள்" என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

வாழ்க்கையில் உழைப்பை மறந்த பலரை நாம் சந்திக்கின்றோம். அவர்கள் தம்முன்னேற்றத்திற்குத் தாமே தடைகளாக இருப்பது மட்டுமல்லாமல், பிறர் முன்னேற்றத்திற்கும் தடைக்கல்லாக வருகின்றவர்களாவர். எனவே, அவர்கள் மனம் அமைதி காணவழி இல்லாமல் போகும்.

பிறர் தன்னை மதிக்கவேண்டும் என்று நினைக்கும் மனப்போக்கும் தவறே. நம்வழி நல்ல வழியாக - நாம் செல்லும் வழியில சென்றால், நாம் தேடும் மதிப்பும், மனநிறைவும் தானே வந்து சேரும்.

எம்.கதிரேசன்

## குறுக்கெழுத்துப்போட்டி - 70

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 | |
| | 09 | | | | | 14 |
| | 16 | | | | | |
| | 23 | 24 | | | | |
| | | | 32 | | | |
| | | | 39 | | | |
| | | | 46 | | | |

பெயர்:-..............................
முகவரி:-..............................
..............................
..............................

### இடமிருந்து வலம்

01. பொறுமைக்கு இலக்கணமாக விளங்குபவன்.
06. தயிரில் இருந்து பெறப்படுவது.
09. குதிரை.
16. மன்னன்.
23. சிரார்த்த தினம்.
32. கோயில்.
39. அதிஸ்டம்.
46. சந்திரன்.

### மேலிருந்து கீழ்

01. உபாயம்.
06. அரிசியை இதில் இருந்து பெறுகிறோம்.
14. ஒழுக்கம்.
16. புதுமை.
24. ஆண்டு.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.68 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. ஆனந்தபைரவி.
08. சமாதானம்.
15. இனம்.
20. கிலி.
22. பரிதாபம்.
31. கடிகாரம்.
36. சிகரம்.
45. பதிவிரதை.

**மேலிருந்து கீழ்**

01. ஆசனம்.
07. விக்கினம்.
09. மாம்பழம்.
12. பங்கம்.
36. சிசு

**இளையவர்களே!**
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி,இல.69
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.68 இன் பரிசுக்குரியவர்

எஸ். கிசோபிகா,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.68 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. ஜீ.ஜீவப்பிரிதா, உருத்திரபுரம், கிளிநொச்சி.
02. க. பிரதீஸ்வரன், செல்வாநகர், கிளிநொச்சி.
03. கு.ரமேஸ், இல.14, வைரவபுளியங்குளம், வவுனியா.
04. க.பிரியங்கா, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
05. க. நடராசா, செக்கட்டிப்புலவு, வவுனியா.
06. செ.ஜஜீபன், திருவையாறு, கிளிநொச்சி.

உன் வசதிக்கும் வருவாய்க்கும் ஏற்ப, வாழ்க்கை நடத்து; கையில் இருக்கும் துணியை அளந்து கொண்டு,சட்டையை வெட்டு - ராபர்ட் பார்ட்டன்

# குழந்தைகளின் உள நல வளர்ச்சிக்கு கை கொடுப்போம்

"எந்தக் குழந்தையும்
மண்ணிற் பிறக்கையில்
நல்ல குழந்தைதான் - அவை
நல்லவை ஆவதும் தீயவை
ஆவதும் அன்னை
வளர்ப்பினிலே....."

என்ற சினிமாக் கவிஞன் ஒருவனின் கருத்துப்படி எந்த ஒரு குழந்தையும் பிறக்கும்போது நல்ல குழந்தையாகவே பிறக்கின்றது. அந்தக்குழந்தையை நாடு போற்றக் கூடிய நல்லதொரு பிரஜையாக வளர்த்தெடுப்பது பெற்றெடுத்த தாயின் பொறுப்பு என்பதனையே அவனது சினிமா வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

அந்தவகையில் ஒரு குழந்தையை நல்லதொரு பிரஜையாக வளர்த்தெடுப்பதற்கு தாயானவள் பிரதான இடத்தினை வகித்துக்கொள்கின்ற போதிலும் தந்தை மற்றும் பாதுகாவலர் உறவுக்காரர்களும் செல்வாக்கு செலுத்துவது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

வளரும் பிள்ளைகள் குதூகலமாகவும் உபயோகமுள்ளவர்களாகவும் வளமுடையவர்களாகவும் வளர அவர்களது ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் மிகவும் முக்கியமானது. அவர்களது ஒவ்வொரு வயதிற்குமுரிய காலகட்டங்களில் இருக்க வேண்டிய ஆசாபாசங்களும் செயல்களும் பற்றி நாம் அறிந்திருக்கவேண்டும். இவ்வாறு அறிந்திருப்பதன் மூலம்தான் அந்தப் பிஞ்சு உள்ளங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எங்களால் தீர்வுகண்டு உதவிக்கரங்களை நீட்டமுடியும்.

குழந்தைகள் பிறப்பு முதல் மூப்படையும் வரை உள்ள காலப்பகுதியில் மிக்க மாறுபாடுகளுக்கு உள்ளாவது நாம் அறிந்தவிடயமாகும். அவர்கள் உடலால் மட்டுமின்றி செயல்களிலும் சிந்தனைகளிலும் கற்கும் முறைகளிலும் மாற்றத்தை வெளிப்படுத்துவார்கள்.

ஒரு பிள்ளையே ஒவ்வொரு வயதிற்குமுரிய காலகட்டங்களிலும் சிந்திப்பது. கற்பது உணர்வது எல்லாமே வித்தியாசப்படும். அப்படியிருந்தபோதும் சில செயல்கள் சகல வயதினருக்கும் சகல குடும்பங்களுக்கும் பொதுவானதாகும்.



இப்படிப்பட்ட மாற்றங்களை வெளிக்காட்டிவரும் வளரும் பயிர்களின் சமூக உள நல விருத்தியை மேம்படுத்தும்வகையில் பெரியவர்களின் அன்பும் அக்கறையும் ஊக்கமும் முதன்மை பெறுகின்றன. குழந்தைகளுக்கு அன்பைச் செலுத்தும் அதே நேரம் அவர்கள் அந்த அன்பை உணர்ந்து கொள்வதற்கும் பெரியவர்கள் பக்கபலமாக இருக்க வேண்டும்.

பிள்ளைகளுடன் கதைத்தல், கதைசொல்லுதல், ஆடுதல், பாடுதல், விளையாடுதல் போன்றவை அன்பை வெளிப்படுத்த சிறந்த வழியாகும். பிள்ளைகள் படிப்படியாக வளரும் பிராயத்தில் அவர்கள் அக்கறையும் ஆர்வ

**கொடி-கமலதாஸ்**

மும் செலுத்தும் விடயங்களிலும், துறைகளிலும் பெற்றவர்களோ அல்லது பாதுகாவலர்களோ கூடி அளவளாவுவது அன்பை வெளிப்படுத்த கிடைக்கும் இன்னுமொரு நல்லமுறையாகும்.

அடுத்து பிள்ளைகள் மீது அன்பு செலுத்தினால் மட்டும் போதாது அவர்கள் உடல் ரீதியாக சுகதேகியாக திகழவேண்டும். அப்போது தான் பிஞ்சு உள்ளங்கள் புதிய சிந்தைகளில் தங்களை புகுத்திக்கொள்வார்கள்.

உடலியல் ரீதியாக சுகதேகிய குழந்தைகள் குதூகலமான குழந்தைகளாக வளரும் பாக்கியத்தைப் பெறுகின்றன. அவ்வாறு குழந்தைகள் வளர்வதற்கு சிறந்த சுகாதார நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சுத்தமாக வாழும் பழக்கத்தை பழக்கப்படுத்துதல் சுத்தமான



உணவு, பாதுகாப்பான குடிநீர் அளித்தலின் மூலமும் குழந்தைகளின் உடல் உள ஆரோக்கியத்தை பேணிக்கொள்ளமுடியும்.

இவை மட்டுமின்றி பல்வேறு நோய்கள் ஏற்படாதவண்ணம் தடுப்பு மருந்துகள் ஏற்றும் சந்தர்ப்பங்களில் அதனை தவறவிடாது ஏற்றுதல்வேண்டும். குழந்தைகள் சுகயீனம் அடையும்போது முறையான சிகிச்சை அளித்தல் அதுபோல் சுகயீனம் முற்ற குழந்தைகளுக்கு ஏற்ற பாதுகாப்பான சக்திவாய்ந்த உணவுகளை அளித்தல் மூலமும் குழந்தைகளின் போசாக்கு நிலையைப் பேணிக்கொள்ளமுடிகின்றது.

அடுத்து இந்தக் குழந்தைச் செல்வங்களுக்கு வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு அனுபவங்கள் மூலம் படிப்பினைபெற வழிசெய்து கொடுக்கவேண்டியதும் நமது பொறுப்பாகும். கூடியவரை அவர்களது வேலையை அவர்களே செய்து கொள்ளவிடுவது அவர்களது முன்னேற்றத்திற்கு உதவுகின்றது.

குழந்தை வாழ்ந்து கொண்டிருக்கும் சுற்றுச்சூழல் பற்றிய அறிவையும் அவர்களுக்குக் கட்டாயம் புகட்டிக் கொடுத்தல்வேண்டும். குழந்தை சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் சார்ந்து ஆர்வமாக கேட்கும் கேள்விகளுக்கு ஏற்றபதில்களைக் கொடுப்பது மட்டுமல்லாது சுற்றுச் சூழல் மற்றும் வீட்டில் ஏற்படும் பல்வேறு செயல்கள் நடைபெறும் முறைகள் பற்றிய அறிவையும் அவர்கள் தெரிந்திருக்கச் செய்வதும் பெற்றவர்களின் கடமையாகும்.

குழந்தையின் சிந்தனை உணர்வுகள் கருத்துக்களை மற்றவர்களுக்கு உணர்த்துவதற்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளான எழுதுதல், சித்திரம் வரைதல், பேசுதல் போன்றவற்றிற்கு நாங்கள் எந்தவிதமான தடைகளையும் விதிக்கக்கூடாது.

இவ்வாறாக வளர்ந்துவரும் குழந்தைகள் பெற்றவர்களுக்கு தொல்ல்லைகளையோ உபத்திரத்தையோ கொடுக்கும் சந்தர்ப்பங்களில் அவர்கள் மீது உடலியல் ரீதியாக துன்புறுத்துவதோ உளவியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்துவதோ தவறானதொன்றாகும். அவ்வாறு துன்புறுத்துவதன்மூலம் பிள்ளையின் உள நல வளர்ச்சி மழுங்கடிக்கப்பட்டு அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே தொல்லை தரும் குழந்தைகளை அதற்கேற்ப இசைந்து குழந்தை மகிழ்வாக இருப்பதற்கு வழிசமைத்துக்கொடுப்பதும் நமது கடமை மட்டுமல்லாது கட்டாயமும் ஆகும்.

மொத்தத்தில் குழந்தைச் செல்வம் அரிதானது. அதனை திறம்படப் பேணிப்பாதுகாப்பது புனிதமானது. அந்தப் புனிதத்தை அளிக்கும் வல்லமை பொருந்தியவர்கள் பெற்றவர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஆவர். எனவே அவர்கள் விழிப்புடன் செயற்பட்டு குழந்தை உள நல வளர்ச்சிக்குக் கை கொடுத்து அவர்களை நாளைய சமூகத்தை ஆட்சி செய்வதற்கு வழிசமைத்துக் கொடுப்பது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

பிள்ளை ஒரு கிள்ளை-
அதைக்
கூட்டில் அடையாதே...
மழுங்கிப் போகும்
உயிர் சிந்தை -அதன்
மகிழ்வை நீ
குலைக்காதே.....



# ஓ... எத்தனை அழகு

அண்மையில் வெளியூர்களிலிருந்து மூன்று நண்பர்கள் வந்திருந்தார்கள். ஒருவர் ஜேர்மனியிலிருந்து வந்திருந்தார். மற்றவர் இந்தியாவிலிருந்தும் அடுத்தவர் கொழும்பிலிருந்தும் வந்திருந்தனர். தனித்தனியாக, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வந்த இந்த நண்பர்கள் இங்கே அதிகம் ரசித்தது நட்சத்திரங்களைத்தான்.

இருளில் நீண்டநேரம் வானத்தைப் பார்த்தபடி தங்களின் இனிய நாட்களை, இளமைக்காலத்தை, பிள்ளைப் பருவத்தை நினைவுகூர்ந்தார்கள். அவர்களுடைய குரலில் ஏக்கம் தாளாதிருந்தது. துயரம் பின்னியிருந்தது. இழப்பின் கனதியால் அவர்கள் தளம்பினார்கள்.

இப்போது அவர்கள் வாழுகின்ற இடங்களில் வானம் இல்லையா, அங்கே நட்சத்திரங்கள் இல்லையா என்றெல்லாம் நீங்கள் கேட்கக்கூடும்.

அங்கெல்லாம் வானம் இருந்தாலும் அதைப் பார்ப்பதற்கும் ரசிப்பதங்குமுரிய வாசல்கள், வாய்ப்புகள் இல்லாமல் போய் விட்டன. இயந்திரமயமாகிய வாழ்க்கையில் சிறு அமைதிக்கும் அங்கே இடமில்லை. நின்று வானத்தைப்பார்க்கும் வாழ்க்கையை இழந்துவிட்டோம் என்ற துக்கம் அங்கே பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

போகிறபோக்கில் வானத்தைப்பார்க்க முடிந்தாலும் நட்சத்திரங்களை ரசிக்கக்கூடிய நிலைமை கொஞ்சமும் இல்லாமல்போய்விட்டது என்றார் ஒரு நண்பர் வேதனையோடு. நட்சத்திரமண்டலங்களைப் பற்றி தானறிந்த பல அறிவியற் தகவல்களைச் சொல்லிக் கொண்டு வானத்தை அண்ணார்ந்து பார்த்தபடி, நட்சத்திரங்களினூடே அவர் பயணித்தார்.

மற்ற நண்பருக்கு நட்சத்திரங்களைப் பற்றிய ஐதீகக்கதைகள் நிறையத் தெரியும். எத்தனை விதமான கதைகள், எத்தனை எத்தனை வினோதமான கதைகள், எவ்வளவு அதிசயங்கள் நிறைந்த கதைகள்... அப்பப்பா சொல்லிக்கொண்டே போனார் முடிவற்று, நேரம்போவது தெரியாமல் நள்ளிரவு கடந்து வெகு நேரமாக... அதிகாலை மூன்று மணிக்குமப்பால் அவருடைய கதைகள் நீண்டிருந்தன.

இப்படி வானத்தையும் நட் சத்திரங்களையும் மட்டும்தான் அவர்கள் ஆவலுடன் ரசித்தார்கள் என்றில்லை. மரஞ்செடிகள், வயற்பரப்புகள், ஒழுங்கைகள், கிராமங்கள், காடுகள் என்று எங்களூரின் எங்கள் அயலின் அத்தனை அமைப்புகளையும் அவர்கள் ஆவல் கொண்டு பார்க்கிறார்கள். ஏக்கத்தோடு எதையோ இழந்துவிட்டோம் என்ற பெருமூச்சோடு இவையெல்லாம் ரசிக்கும் அவர்களின் மனம் இவற்றிற்காகவே தாகம் கொண்டு தவிக்கிறது.

இவ்வாறான அனுபவத்தின் நிலையில்தான் புலம்பெயர்ந்து போய் மீண்டும் இங்கு வருகின்ற எல்லோருக்கும் உண்டு.

வெளிநாடுகளில் இருந்துவரும் பிள்ளைகளைக் கவனித்தால் இதை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ளலாம்.

நாய்களைக் கண்டால் அவர்களுக்கு அலாதியான பிரியமாக இருக்கிறது. ஆட்டுக்குட்டிகள் மாடுகள், குருவிகள், மரங்கள், வயல்வெளிகள், சைக்கிளோடிகள், வண்டில்மாடுகள் என்று எங்களுக்கு மிகச்சாதாரணமாக இருப்பவையெல்லாம் அவர்களுக்கு வினோதமானவையாக, மிகவும் பிடித்தவையாக இருக்கின்றன.

ஏன் நாங்கள்கூட எங்களின் இளமைக்காலத்தின் நாட்களை, அந்த நாட்களின் சூழலை மனதில் மீட்டுப்பார்க்கிறோமல்லவா?

சொந்த ஊரைவிட்டு அல்லது முன்னர் வாழ்ந்த இடத்தைவிட்டு நீண்ட காலம் வெளிஊரில் இருந்துவிட்டு மீண்டும் அங்கே போகும்போது எங்களின் அனுபவம் எப்படியிருக்கும்?

தாகம்கொண்டது மனம்.

நினைவுகளால் சூழப்பட்டது வாழ்க்கை.

அமைதிக்கும் இயற்கைக்கு மாக தவிக்கிறது நம் இதயம். ஆனால் யதார்த்தமோ இரண்டையும் விட்டு வெகுவேகமாக வேறெங்கோ ஓடிப்போகிறது.

எல்லா இடங்களிலும் எல்லாத் தேசங்களிலும் விரிந்துதான் உள்ளது வானம் அங்கேயும் இருக்கின்றன நட்சத்திரங்கள் அங்குமுண்டு சூரியன் அங்கேயும் வருகிறது நிலவு ஆனால் அதைக்கவனிக்கத்தான் முடிவதில்லை.

மின்சாரம் இரவின் நளினத்தில் பாதியைத் திண்டுவிடுகிறது. அது வீட்டுக்குள் நம்மை முடக்கிவிடுகிறது .

வாழ்வை மிகப்பிரமாண்டமான அளவுக்கு முன்னோக்கி நகர்த்திய மின்சாரம் சில சந்தர்ப்பங்களில் மனிதனை அந்நியப்படுத்தியும் விட்டது. சிறைப்படுத்தியும் வைத்திருக்கிறது.

நகர்மயமாதல் வாழ்வை இயந்திரமாக்கிவிட்டது. உலகமயமாதலில் எல்லாமே இயந்திரகதிக்கு நகர்த்தப்பட்டுள்ளன. கட்டடங்களுள் மனிதன் புதையுண்டுபோய் விட்டான் என்றொரு கவிதையில் குறிப்பிட்டுள்ளதைப்போலதான் யதார்த்தமிருக்கிறது.

நட்சத்திரங்களை இழந்த நாங்கள் இயற்கையை விட்டு தொலைவிற்குப் போகும் நாம் பிரச்சினைகளாலும், இரைச்சலாலும், நின்மதியின்மையாலும் சிறைப்பிடிக்கப் பட்டிருக்கிறோம்.

இந்தச் சிறையிலிருந்து மீளத் துடிக்கிறது மனம்.

வெளியை இழக்கும்போது வெளியிலுள்ள எல்லாமே இழக்கப்படுகின்றன.

நட்சத்திரங்களை, வானத்தை, மேகங்களை, நிலவை மையமாகவைத்து எத்தனை கதைகளை நாங்கள் கேட்டிருக்கிறோம்.

முற்றத்தில்வைத்து, தாத்தாவோ, பாட்டியோ சொல்கின்ற கதைகளெல்லாம் இன்றில்லாமல் போய்விட்டன.

முற்றத்திற்கு வருவதே, முற்றத்தில் கூடுவதே, முற்றத்தில் படுத்திருப்பதே வழக்கொழிந்துவிட்டது.

முற்றத்தில் பிள்ளைகளை வைத்துக்கொண்டு நிலாவைப்பார்த்து, நட்சத்திரங்களைப்பார்த்து கதைகளைச்சொல்லச் சொல்ல எத்தனை கதைகள் எங்களுக்குக் கிடைத்தன.

அத்தனைதூரம் கற்பனை விரிந்தது. அதெல்லாம் ரசனைக்கும் வாய்மொழி இலக்கியத்திற்கும் கிடைத்த கொடைகள் தான்.

பிள்ளைகள் முற்றத்தில் வீசும் காற்றில் இதமாகப்படுத்திருந்தார்கள். காற்றாட எல்லோரும் முற்றத்தில் கூடியிருந்தோம். இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவு இழையறாது தொடர்ந்திருந்தது. கடற்கரையில் படுத்திருந்தோம். வாய்க்காலோரம் நடந்தோம். முற்றத்து வேம்பின்கீழ் இளைப்பாறினோம் காற்று இதமாக வீசியது. எங்களின் மேனியையும் மனதையும் அது இதமாக வருடியது. வெறித்த வெளியில் ஒளியைக் குடித்துமிழ்ந்தோம். ஒளியில் பொலிந்தது மனமும் உடலும்.

எல்லாம்போயின: போயின போயின எல்லாமே.

தொலைக்காட்சி வந்து எங்களை வீட்டிற்குள் முடிக்கிவிட்டது. அதிலும் தமிழில்மிகவும் மட்டமான நிகழ்ச்சிகளை வழங்கும் தொலைக்காட்சிகள் இன்று பெருகிவிட்டன.

குழந்தைகளிலிருந்து தாத்தா பாட்டிவரை இன்று தொலைக்காட்சிகளின் முன்னால்தான் குந்தியிருக்கிறார்கள்.

**வெளிவாசல்பாலன்**

காற்றுக்கும் மின்சாரத்தைத்தான் நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. இளநீரை, மோரை, தோடம்பழச்சாற்றை, பழங்கஞ்சியை இழந்து சோடாவுக்கும் வேறுபோத்தல் பானங்களுக்கும் போனது போல இனி போத்தலில்வரும் காற்றுக்காகக் காத்திருக்கும் காலமும் வந்துவிடும்.

இப்போதே ஊற்றுத்தண்ணீரை, எங்கள் கிணற்று நீரைக் குடிப்பதற்குப் பதிலாக போத்தல் தண்ணீரைக்குடிக்கும் பெருமையான காலத்துக்கு வந்துவிட்டோம். தொலைக்காட்சிகளைப் பார்க்கும் போதுகூட நாம் தேர்வு செய்து அறிவுபூர்வமான நிகழ்ச்சிகளைக் காணலாம்.

NATIONAL GEOGRA PHY என்றொரு அலைவரிசை உண்டு. அதில் எத்தனை தகவல்களை, எத்தனை அதிசயங்களைப்பெறவும் காணவும்முடியும். யார்தான் அதைப் பார்க்கிறார்கள்? அப்படி எத்தனையோ நல்லவையுண்டு. ஏன் எவரும் அதை நாடுவதில்லை? வன்மமும் போலியும் யதார்த்தமிகையும் நிறைந்த நிகழ்ச்சிகள் ஒரு புறம். அவற்றைப் பார்த்து ரசித்து வாழும் மனோநிலை மறுபுறம்.

பொழுதுபோக்கிற்காக, ஓய்வுக்காக நாம் வெளியே போனால்கூட விடுதிகளுக்குள்தான் போய் முடங்குகிறோம்.

வெள்ளையர்களோ விடுதிகளிலும், புல்வெளியில், மங்கிய விளக்கொளியில் வானத்தையும் அயலையும் ரசிக்கும் விதமாகவே தங்களின் பொழுதைக்கழிக்கிறார்கள்.

எங்களின் விடுதிகள் புல்வெளிகளிலும் பிரகாசமான மின் குமிழ்களால் சூழப்பட்டிருக்கும். இயற்கையிலிருந்து துண்டாடப்பட்டிருக்கும் புல்வெளி செயற்கையானதாகவே இருக்கும்.

அவர்களோ வீட்டினுள்ளும் மின்சாரம் இருந்தாலும் இன்னும் மெழுகுதிரி வெளிச்சத்தில் உண்பதையும் படிப்பதையும் ஒரு மரபாகத் தொடர்கிறார்கள். நாங்களோ அவ்வாறிருப்பது குறைவானது என்ற மனப்போக்கில் இருக்கிறோம். அவர்கள் கடற்கரைக்கும் சதுப்பு வெளிகளுக்கும் காற்றையும் இயற்கை உறவையும் தேடிப் போகிறார்கள்.

நாங்களோ இவையெல்லாம் குறைவானவை என்று புறமொதுக்கிவிடுகிறோம்.

எந்த அவசியமுமற்று வேலி மரங்களையே வெட்டி, அதன் நிழலை நீக்கி, மதிலைக் கட்டும் பெருமைக்கு வந்துவிடுகிறோம். நகர்களில் மதிலின் தேவை தவிர்க்கமுடியாமல் போகலாம்.ஆனால் மதிலின்தேவை அவசியமற்ற இடங்களில் வேலியை வெட்டி எறிந்துவிட்டு அனலடிக்கும் வெக்கையில் கிடந்துழலுகின்றோம்.


ஒழுங்கைகளில், தெருவோரங்களில் நிழலுக்கு மரம் நிற்பதே கிராமியத் தன்மையைத் தந்துவிடும் என்ற குறைமனம் பெருகியிருக்கிறது.

எல்லாவற்றையும் வெட்டி எறிந்து விட்டு, வெட்டைவெளியில் மின்சாரக்கம்பிகளை இணைத்துவிட்டால் வளர்ச்சி அடைந்துவிடுவோம் என்ற எண்ணம் எங்களில் பலருக்குண்டு. மரங்களைவிட்டு அவற்றின் சம்மதமின்றி பறவைகள் மின்சாரக்கம்பியில் இருக்கும் காலத்தை அழைத்து வருகின்றோம். மனிதனும் இயற்கையை விட்டு துண்டாடப்பட்டுவிட்டான். இனி என்னதான் மிஞ்சியிருக்கப்போகிறதோ?

உண்மையான நட்புறவு இல்லாமையே,மிகக் கொடிய தனிமை. - ஃபிரான்ஸிஸ் பேக்கன்

# இலக்கியப் பகிர்வு

இணுவில் பொதுநூலக இலக்கிய மன்றம் தனது முதலாவது வெளியீடாக அப்பையா பரமேஸ்வரன் என்னும் இணுவையூர் உத்திரன் அவர்களின் நிறங்கள் என்னும் சிறுகதைத் தொகுப்பினை சென்ற வருட நடுப் பகுதியில் வெளியிட்டுள்ளது.




"இணுவில் உத்திரன்" இலக்கிய உலகிற்கு அறிமுகமான ஒரு புதிய வரவு. அண்மைக்காலமாக இலக்கியத்திற்குள் ஆர்வத்துடன் உள்நுழையும் புதிய படைப் பாளிகள் பலர் தத்தம் படைப்புக்களை நூல்களாக வெளியிட்டுவருகின்றனர்.

சமீபகாலமாக ஏற்பட்டுள்ள புதிய அச்சு வசதியின் பன்முக வெளிப்பாடுகளாக இந்த நூல்களைக் குறிப்பிடலாம். எனினும் கம்பியூ ட்டர் அச்சு வசதியின் உச்சங்களை இவை தொடுவதாக இல்லை. வெறுமனே வண்ணக் கலவைகளாகவும், கல்வெட்டுக்கள் போலவும் (பழைய நினைவஞ்சலி மலர்கள் போல) இவற்றில் கணிசமானவை வெளி வருவது கவ லைக்குரிய விடயமாகும்.

நவீன அச்சிடல் மூலம் மிக நுட்பமான அழகு பொங்கும் வெளியீடுகளைக் கொண்டு வரமுடியும். கொண்டு வரலாம். எனினும் பல வெளியீட்டாளர்களுக்கு இது தொடர்பான அக்கறை இல்லை. "நிறங்கள்" சிறுகதைத் தொகுப்பும் தனது அச்சிடல் அமைப்பில் அதிக அக்கறை காட்டவில்லை.

"நாங்கள் வாழும் பூமியில் இருக்கக் கூடிய பிரச்சினைகள் சாதாரணமான ஒரு சமுதாயப் பிரச்சினைகளைவிட வேறு விதமானவை. நாங்கள் ஒரு யுத்த சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். பல்வேறு யுத்தங்களுக்கு முகம் கொடுத்து இருக்கின்றோம். வெவ்வேறு விதமான இராணுவக் கெடுபிடிகள் ஆக்கிரமிப்புக்கள் இவையெல்லாம் இந்த மண்மீதுள்ள எங்கள் சுதந்திரங்கள் பறிக்கப் பட்டதற்கு சான்று பகர்பவை. நான் பண்ணை வெளியில் காற்று வாங்கியதில்லை. கீரிமலைக் கடலில் குளித்தது இல்லை. மாவிட்ட புரக் கந்தனை வணங்கிய பலனும் அல்ல. மூன்று பக்கங்களாலும் நசுக்கப்பட்ட ஒரு சூழலில் வாழ்ந்தவர். யுத்த அவலங்களை எல்லாம் நான் நேராகத் தரிசித்தவன் "

என்று சொல்லும் இணுவையூர் உத்திரன் அரசு அடக்குமுறை சிங்கள இராணுவ அத்து மீறல்களை உணர்ந்து கொண்டவர்.




சிங்கள இராணுவம் யாழ்ப்பாணத்தை சுற்றி வளைத்து பசியாறிக்கொண்டிருந்தபோது சில படைப்பாளிகள் தமது கண்களை மூடித் தொப்பிகள் போட்டிருந்தனர். அது மட்டுமல்லாது. தாம் இலங்கை வானொலியில் எழுதிய நாடகங்கள், பத்திரிகைகளில் எழுதிய சிறுகதைகளில் தமிழர்கள் அடிமைகளாக சரியாக வாழவில்லை எனவும் குறைபட்டார்கள்.

ஒரு புகழ் பூத்த கலைஞர் எழுதிய நாடகத்தில் "சந்தியில் உள்ள சிங்கள இராணுவம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருக்குது. அவன்களைச் சொறிஞ்சால்தான் அவர்கள் திருப்பி அடிப்பார்கள்" அது பிழையில்லைத் தானே எண்ட மாதிரி எல்லாம் எழுதித்தள்ளினார். பின்னர் பரிசுகளும் பெற்றுக்கொண்டார்.

இப்படிச் சொந்தச் சகோதரர்கள் ஈன நிலை கண்டு துள்ளாத, வெகுண்டெழாத படைப் பாளியை எந்த வகையில் சேர்த்துக் கொள்வது.?

இணுவில் உத்திரன் இந்தச் சமூகத்தில் வாழ்பவர். அதனால் தான் அவர் படைப்புக்கள் இந்த மண்ணின் மீதும் மக்களின் மீதும் கொண்ட பற்றுதலின் வெளிப்பாடுகளாக அமைகின்றன. அந்தவகையில் அவர் பாராட்டுக் குரியவர்.

"ஆசிரியர் இணுவில் உத்திரன் சமூகத்தினை நன்கு அவதானிப்பவர் என்பதும் நிறைய இலக்கிய நூல்களைக் கற்று வருபவர் என்பதும் தெள்ளத் தெளிவாகின்றது. கற்றவனும சமூக அவதானிப்பாளனும் தான் கண்டவற்றை, கேட்டவற்றை தான் உணர்ந்தவாறு தனது எழுத்துக்களில் கொண்டுவரும்போது அவை கலைத்துவமான படைப்புக்களாகின்றன"

என மூத்த எழுத்தாளர் செங்கை ஆழியான் அவர்கள் கூறுவது மனங்கொள்ளத் தக்கது ஆகும். உத்திரன் அவர்களின் கதைக்களங்களாக பல் வேறு சம்பவங்கள் அமைகின் றன. அவை எல்லாம் நம் முன்னே நடக்கும் சாதாரண சம்பவங்களே அவற்றினை அவர் கேள்விகளாக்கி எம்மை யோசிக்க வைக்கின்றார்.

உத்திரனின் எழுத்து நடை கிண்டல் கலந்த நடை வாசிப்பதற்கு சுவாரசியமாக அமைகின்றது. ஆனால் அதுவே சிலவேளைகளில் நீண்டு வாசிக்க தடங்கலை ஏற்படுத்துகின்றது.

நீண்ட கதைகள் உள்ளதுபோல சில குட்டிக் கதைகளாக அமைந்தும்விடுகின்றன. இந்த நீட்சியும், இருக்கமும் கதையின் கருவுக்கு ஏற்ற விதமாக அமையவில்லை.

விரிவாக எழுதவேண்டிய சில கதைகள் சப்பென்று சுறுங்கிப் போய் விடுகின்றன. கதைகளுக்குப் பின்னால் எழுதப் படும் சிலகவிதை வரிகள், கருத்துக்கள் கதையின் உச்சத்தை ஊறு செய்யும் சங்கதிகளாகிவிடும். இதுதொடர்பாக ஆசிரியர் கவனித்தால் நல்லது. அவருடைய பல கதைகளில் இது உள்ளது.

"வியப்புக்குரியவை கற்பனைகள் அல்ல" என்னும் கதையில் கதை நாயகன் தொடர்பாக ஆசிரியர் விபரிக்கும் விடயம் அர்த் தமுள்ளது.

"அவருடைய இலக்கு வரையறுக் கப்பட்ட ஒரு வட்டத்திற்குள்ளேயே அடைபட்டு நின்று விட்டது. அது எங்கள் சமூகத்திற்கு பயன்படக் கூடியதாய் அமையவே இல்லை. நமது சமூகம்,மக்கள், மொழி,ஊர், சகோதரர் போன்ற சமூக வாழ்க்கையைப் பற்றி யெல்லாம் அவர் அக்கறை கொள்வதே இல்லை."

பொதுவாக உத்திரனிடம் உள்ள நல்ல பண்பு அவர் எமது பாரம்பரிய விழுமியங்களின் நல்ல விடயங்களை கட்டிக்காப்பவராக உள்ளார். சொந்த ஊர், உறவுகள், நண்பர்கள் மீதும் ஈடுபாடு கொண்டவராக உள்ளார்.

அவர் சொல்லும் கதைகளும், இடங் களும் பாத்திரங்களும் அவரது ஊரைத் தழுவியபடியே செல்கிறது.

"என் வாழ்க்கையிலே என் இதயத்துக்கும் கண்களுக்குமிடையே பாலம் அமைத்த முதல் தேவதை" என்ற அவரது பிரயோகம் அவரது ஆற்றலை வெளிப்படுத்துகின்றது.

அவரது ஆரம்ப முயற்சிகள் பாராட்டப் பட வேண்டியவை, மதிக்கப்படவேண்டியவை, எதிர்காலத்தில் சிறுகதையின் உன்னதங்களை அவர் அடையவேண்டும்.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

## பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

யாழ்ப்பாணத்திலிருந்து 40 கிலோமீற்றர் மணற்காடு உள்ளது. அங்கு எல்லாமே மணல்தான் கடற்காற்றினால் மணல் அள்ளப் பட்டுக்கொண்டு இருக்கும் காரணத்தால் எந்தவிதமான பயிர்ச் செய்கைக்கும் அந்த மண் உதவுவதில்லை என்பது நீங்கள் அறிந்தவிடயம்தான்.

என்றாலும் இந்த மணற்பிரதேசத்தை வளமுள்ள மணலாக மாற்றவும் கடல் அரிப்பினைத்தடுக்கவும், கடற்காற்றினால் மணல் அள்ளுண்டு போகாமல் தடுக்கவும், சூழல் பாதுகாப்பிற்காகவும் ஏதாவது செய்யவேண்டும் என்ற அக்கறை எப்போதோ பிறந்துவிட்டது.

அரசதிணைக்களங்களும் ஏனைய பொதுஅமைப்புக் களும் சூழல் தொடர்பான அக்கறையுள்ளவர்களும் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்தார்கள்.

அதனால்தான் இப்பகுதியில் மரங்கள் நடுகைசெய்ய முனைந்தார்கள். ஆனால் எந்த மரத்தை நடுகை செய்வது என்ற ஆய்வின் பயனாகக் கண்டறியப்பட்ட மரம்தான் "சவுக்குமரம்" ஆகும்.

மணற்காட்டிலே வெட்டவெளியான 9300 ஹெக் ரேயருக்கு மேற்பட்ட நிலத்தில் 1976-1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 410 ஏக்கர் நிலத்தில் சவுக்குமர நடுகை மேற் கொள்ளப்பட்டது.

1990 களைத் தொடர்ந்த காலப்பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் மேலும் பல ஹெக்ரேயரில் சவுக்கு மரங்கள் நடுகைசெய்யப்பட்டன.

மண்ணைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை தொடர்ந்த இராணுவ நடவடிக்கையால் சீர்குலைந் தாலும். கனிசமான மரங்கள் இப்போது எம் மண்ணைக் காத்து வருகின்றன.

எனினும் இதன் பெறுமதியை உணராத சிலர் இம் மரங்களைக்கு கண்டபடி வெட்டி விறகுத் தோவைக்காகவும் ஏனைய மரத்தேவைக்காகவும் பயன்படுத்தி வருவதாக அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன

இதுபோன்ற செயல்கள் எம் கண்களை நாமேகுத்தும் செயலுக்கு ஒப்பானது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

(சி-9609)

# சூரிய மின்கலத்தின் மூலம் நீர் இறைத்தல்

சூரிய மின்கலத்தைப் பயன் படுத்தி வீட்டுப்பாவனைக்கு மின் ஒளி பெறல், சூரிய மின்கல அடுப்பு சிறிய அளவிலான விவசாயச் செய் கைக்கு நீரிறைத்தல், குளிரூட்டிகளை இயங்கச் செய்தல் கலங்கரை விளக் குகள் வீதி விளக்குகளைப் பொருத் துதல், நீரை வெப்பமேற்றி சுத்தி கரித்தல் தொலைத் தொடர்பு சாதனங் களை இயங்கச் செய்தல் வாகனங் கள் படகுகளுக்குரிய மின்கலங் களுக்கு மின்னேற்றம் செய்தல் போன்ற பல தரப்பட்ட பாவனை களுக்கு இந்த மின்கலத்தைப்பாவிக் கலாம்.

வீட்டுப்பாவனைக்கு ஏற்ப சூரிய மின்கலங்களைப் பெற்று தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள உதவுகிறது. சூரிய மின்கலங் கள் 10 வோல்ட் (V) தொடக்கம் 120 வோல்ட் வரையான மின்சாரத் தினை வழங்கக்கூடியது.

ஒரு சூரிய மின்கலத்தினை பதினைந்துவருடங்கள் பாவிக்க முடியும். வீட்டுப்பாவனைக்கு ஏற்ற



வாறு சூரியமின்கலத்தை (சோழர்) பெற்று வீட்டின் கூரை மீது பொருத்தி கார் பற்றி 12V ஒன்றுடன் அதனை இணைத்து விடுவோமேயானால் சூரிய மின்கலம் மூலம் பற்றறிக்கு மின்னேற்றம் செய்யப்படுகின்றது.

பற்றறியில் இருந்து பெறப் படும் மின்சாரத்தை எமது பாவனைக் குப் பயன்படுத்தலாம். சிறிய அளவிலான மின்குமிழ்களைப் பொருத்து வதன் மூலம் வானொலி தொலைக் காட்சி சிறிய மின் விசிறி ஓடியோ வீடியோ சாதனங்கள் என்பவற்றையும் இயக்க முடியும். மீள் மின்னேற்றம் பெறக்கூடிய பற்றறிகள் டோச் பற்றி, பென்டோச் பற்றறி என்பவற்றுக்குக் கூட மின்னேற்றம் செய்யலாம் சிறிய அளவிலான குளிர்சாதனப்பெட்டியைக் கூட இயக்கமுடியும் தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனம் மாணவர்களின் கல்வியை மேம் படுத்தும் முகமாக பொதுஇடங்களில் அதாவது பின்தங்கிய பாடசாலைகள், முன்பள்ளி, பொதுமண்டபங்களில் இலவசமாக மின்வழங்கல் சேவையைச் செய்துள்ளது என்பது குறிப் பிடத்தக்கது.

முத்துஐயன் கட்டு ப.கிருஸ்ணபிள்ளை என்பவர் ஒரு முன்னணி விவசாயி. இவர் தனது வீட்டில் 40 W வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற சோழர் இருக் கிறது இதை கிணற்றுக்குப் பயன்படுத்தி 1/4 ஏக்கர் காணியில் மேட்டு நிலப் பயிர்ச்செய் கையில் ஈடுபடலாமா? என்று கேட்டிருந்தார்.

விவசாயச் செய்கைக்கு சூரியமின் கலத்தைப் பயன் படுத்தலாம் கிணற நிலிருந்து நீர் இறைப்பதற்கு கூடுத லான மின்சாரம் தேவைப்படு கிறது. வீடுகளுக்குப் பொரு த்தப்படும் சிறிய சோழரில் இருந்து கூடுதலான மின் சேகரிப்பு இல்லை. அதாவது 40 வோல்ட் மின்சாரம் பெறும் சோழரில் நீர் இறைக்க மின்சாரம் போதா மையேயாகும்.

40 வோல்ட் மின்சாரத் தில் கிணற்றுக்குப் பூட்டப்படுகின்ற பம் பியை இயக்க மின்சார வலு காணாது. Piston Systum கையால் இயக்கும் பம்பியை (குளாய்க் கிணற்றுக்குப் பாவிக்கப்படும் பம்பி) போன்ற இயக்கப்பாட்டை ஒத்ததாக இருக்கிறது. இந்தப் பம்பி மோட்டரை இயக்க 24V 100W வலுவுள்ள 2 சூரிய மின் கலத் தொகுதி மூலம் தான் பம்பியை இயக்கமுடியும்.

கிணற்றிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்வதற்கு மோட்டருடன் புறபால் (நீருறிஞ்சி) பொருத் தப்படுகிறது. இந்தப் பம்பியானது மோட்டர் மூலம் இயக்கப்படும் போது நிலத்தடி நீரை வெளியே தள்ளுகிறது. விவசாயிகள் இதன் மூலம் நீரைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொருண்மிய மதியுரையகம் ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் பரீட்சாத்தமாக சூரிய மின்கலம் மூலம் தன்னிச்சையாக இயங்கும் நீரிறைக்கும் இயந்திரம் (சோழர் பம்) பூட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

வெளிநாடுகளில் வாழுகின்ற புலம்பெயர்ந்த எமது மக்களால் இச்சோழர்பம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவ்வியந்திரத்தின் மூலம் சூரிய மின் பிறப்பாக்கியைப் பயன்படுத்தி இங்கு கிணற்று நீரில் விவசாயம் மேற்கொள்ளக் கூடிய நிலங்களுக்கு இதில் இருந்து நீரைப் பெறக்கூடியதாக இருக்கிறது இந் நீரிறைக்கும் இயந்திரத் தின் நோக்கம்.

1. சூழல் மாசடையாமல் பாதுகாத்தல்.
2. எரிபொருட் செலவு விரயமாவதைத் தடுத்தல்.

எமது பிரதேசத்தில் கிடைக்கிற சூரியஒளி மூலம் உச்சப் பயன்பாட்டை அடையலாம்.

சிவகமலா

# பதிப்புலக வேந்தர்களே!

இனி நீங்கள் உங்கள் தேவைகளுக்காய் அந்நிய மண்ணில் அலையவேண்டியதில்லை. மொழிச்சிக்கல், பாதுகாப்புப்பிரச்சனை, பிரயாணச்செலவு அதிகரிப்பு, அலைச்சல், போன்றவற்றால் சிரமப்படத் தேவையில்லை. உங்கள் தேவைகளை எங்கள் மண்ணிலே அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றோம்.
தமிழீழப்பகுதியில் மாத்திரமன்றி இலங்கையிலேயே முதன் முதலில் கலர் பிரித்தல் **(ROLER IMAGE SETTER) - COLOUR SEPARATION** சேவையை அறிமுகப்படுத்துகின்றோம்.





- COLOUR SEPARATION SERVICE
  அனைத்து அளவுகளிலும் செய்து கொடுக்கப்படும்.
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை
  (4x8 SIZE PCC COLOUR DIGITAL PRINT )
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை
  4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை
  HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப்போடுதல்
  (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE


இவை தவிர்ந்த எமது வழமையான சேவைகளான
புத்தகம்,போஸ்ரல்,வாழ்த்துமடல், அழைப்பிதழ்
என்பன வடிவமைத்து பதிப்புச்செய்து பெற்றுக்கொள்ளவும்
இன்றே நாடுங்கள் எங்கள் வாடிக்கையாளராகுங்கள்

# நிலா பதிப்பகம்

யாழ்சாலை, கிளிநொச்சி.




தொ.பேசி:
021-228 5935
தொ.நகல்:
021-228 5935




## இலக்கியப் படைப்பாளிகளே...

உங்களிடமிருந்து வெள்ளிநாதம்
எதிர்பார்ப்பது-

தரமான
சிறுகதை, கவிதை,
உருவகம்,

இன்னும், இன்னும் உங்கள் எண்ணங்களில் தோன்றும் வண்ணங்கள்... உங்கள் படைப்பாளிகளின் பரப்புகள் போராட்டம், சமூகம் என விரிந்த பார்வையாக இருக்கட்டும்.

படைப்புக்கள் அனுப்பப்பட
வேண்டிய முகவரி-
ஆசிரியர் :- வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

## வெள்ளிநாத வாசகர் கவனத்திற்கு

எமக்கு நீங்கள் அனுப்பும் ஆக்கங்களில் தவறாது உங்கள் தெளிவான முகவரியை எழுதி அனுப்புங்கள். அது நாம் உங்களோடு தொடர்புகொள்ள இலகுவாக இருக்கும்.

நன்றி

ஆசிரியா
வெள்ளிநாதம்

நாடு பூராகவும்
ஈழநாதத்தைப் பெறலாம்

2004

## ஈழநாதம் பத்திரிகை சந்தா விபரம்

| காலம் | வெள்ளிநாதம் | தினசரி | வெள்ளிநாதமும் தினசரியும் |
|---|---|---|---|
| 1/4 ஆண்டுக்கு | 300/= | 750/= | 975/= |
| 1/2 ஆண்டுக்கு | 550/= | 1400/= | 1850/= |
| ஆண்டுக்கு | 1000/= | 2650/= | 3600/= |

**தபால் மூலம் உங்களிற்கு பத்திரிகைகள் அனுப்பி வைக்கப்படும் சந்தாதாரர்கள் தொடர்புகொள்ள வேண்டியமுகவரி**

பொதுமுகாமையாளர்,(ஈழநாதம்)
யாழ்.சாலை,கிளிநொச்சி.


## பணிநிலை வெற்றிடம்

*காந்தரூபன் அறிவுச்சோலை–சிறுவர் இல்லம்.*

**01.கல்விப்பகுதி :-**

01.அதிபர் - தகைமை
பல்கலைக்கழகப்பட்டதாரி/பயிற்றப்பட்டவர்.

02.ஆசிரியர்கள்
கணிதம் 01
தமிழ் 01
ஆங்கிலம் 02
ஆரம்பப்பிரிவு 01

**02.நிர்வாகப் பகுதி :-**

01. கணக்காளர்/கணக்குப் பதிவாளர் 01
02. தட்டெழுத்தாளர் 01

**03.பராமரிப்புப் பகுதி :-**

01.பிள்ளைகள் மேற்பார்வையாளர்கள் 04
(ஆண்/பெண் 35 வயதிற்கு மேல்)

* விண்ணப்பங்களை அனுப்பும்போது தகைமைச் சான்றிதழ் பிரதியுடன் அனுப்பவும்.

* **விண்ணப்ப முடிவுத்திகதி :- 28 - 05 - 2004**

* **அனுப்பவேண்டிய முகவரி**

அறிவுச்சோலை சிறுவர் இல்லம்,
கைவேலி,
புதுக்குடியிருப்பு.

*நிர்வாகி,*
*அறிவுச்சோலை சிறுவர்இல்லம்.*

(சி-9613)

விரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வெள்ளி நாதத்தில்
வி.பி.யோசப்பின் புதிய மொழியாக்கத் தொடராக வெளிவருகின்றது
மூடுபனிக்குள் ஒரு தேடல்
ஆவலோடு எதிர்பாருங்கள்


(02ம் பக்கம் தொடர்ச்சி...)

அவசியமாகும்.

பேச்சுவார்த்தைகள் வெறுமனே காலத்தைக் கடத்தித் தனக்குத் தேவையான சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான உபாயமாகப் பயன்படுத்த அரசுக்கு வாய்ப்பளிக்கக் கூடாது என்பதே முக்கியமானதாகும் . இந்த நிலையில் விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள உறுதியான பேச்சுக்களைத் தொடங்குவதற்கான யோசனைகள் நியாயத்தன்மையைப் புரிந்துகொண்டு அரசு பேச்சுக்களை நடத்த தயார் நிலைக்கு வருமா? அதனை அதற்குத் தோழமைக் கட்சிகள் அனுமதிக்குமா? அரசு தேசிய நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுமா? அல்லது கட்சி நலனைக் கருத்திற்கொண்டு தீர்மானம் எடுக்குமா? என்ற கேள்விகள் எல்லாம் எழவே செய்கின்றன.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அரசின் அடுத்தகட்ட சமாதானம் குறித்த நகர்வுகளே பதிலாக அமையும்.

பலவீனமான ஒரு அரசுடன் பலமான நிலையில் - மக்களின் பேராதரவுடனும் சர்வதேச சமூகத்தின் அங்கீகார விருப்புடனும் உள்ள விடுதலைப்புலிகள் பேசத்தயார் என்று அறிவித்துள்ளதுடன் அப்பேச்சுக்கள் நம்பிக்கை தரும் வகையில் அமைவதற்குரிய வழிவகைகளையும் முன்வைத் திருக்கிறார்கள். அரசு இதனை நியாயபூர்வமாகப் பரிசீலிக்க வேண்டும்.

இதுவே இன்றைய அவசியமாகும். தவறின் வரலாறு, மீண்டும் துயரமான நிகழ்வுப் பதிவுகளைக் கொண்டதாக இலங்கையை அடையாளப்படுத்த வேண்டிய நிலை உருவாக அரசே காரணமாகிவிடும்.


## கணக்காய்வாளர் தேவை

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மாவட்டக்கல்விக்கழகப் பணியகங்களில் பணியாற்ற கணக்காய்வாளர் தேவை.

***தகைமைகள்:–***

***அகவை:–*** 25 - 35 அகவைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்

***கல்வித்தகைமை:–***

வேலை அனுபவத்துடன் முகாமைத்துவ/வர்த்தகப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

***வேதனம்:–*** பட்டதாரி ஆசிரியர் தொடக்கச் சம்பளம் வழங்கப்படும்

***விண்ணப்பிக்கும் முறை:–***

வேலை அனுபவத்துடன் நிறைவு செய்யப்பட்ட சுய விபரத்தை பொறுப்பாளர் தமிழீழக் கல்விக்கழகம், நடுவப்பணியகம், பரவிப்பாய்ஞ்சான், கிளிநொச்சி, என்ற முகவரிக்கு பதிவு அஞ்சலில் 20.05.2004ற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

***நேர்முகத்தேர்வு:–***

25.05.2004 செவ்வாய்க்கிழமை காலை 09.30 - 12.00 மணிவரை நடுவகப்பணியகத்தில் இடம்பெறும் மூலப்பிரதிகளுடன் வருகை தரவும்.

**பொறுப்பாளர்**
**தமிழீழக்கல்விக்கழகம்,**
**நடுவப்பணியகம்,**
**கிளிநொச்சி.**

(4382)


## 45 ம் நாள் நினைவில் நனைவோம்

இன்பத்தின் நிறைவாய்
10 - 09 - 1983



துயரத்தின் இமயமாய்
01 - 04 - 2004

அமரர்

### தெய்வேந்திரம் வசீந்திரன் (வசி)

(மு/யோகபுரம் மகாவித்தியாலய பழைய மாணவன்)

*இடியென இடித்து நெஞ்சில் ஈரமே தீயாய் கொடுந் தீ*
*மடிதனில் வீழ்ந்தனையோ மாணிக்கமா மலையே வசி*
*பிடியொரு சாம்பலென் றேத்திடும் தத்துவம் பிழையா கோழையா?*
*கற்றவர் மற்றவர் எரிமலை தோய்ந்திடு துயரென்றோதின்*
*பெற்றவர் உற்றசுற்றம் பேசிட மொழிதானேது? கொடிதேனும்*
*உற்றதோர் சதி இயற்கையின் கொதியாய் குமுறி உன்*
*பொன்னுடல் உருக்கிப் புதியதோர் வடிவைசெருக்கச்*
*சித்தமா கொண்டது...? சிந்தை வெந்து வெடித்தேங்க ...*
*அத்தனே அரனே எங்கள் வசீந்திரன் தம்மை உந்தன்*
*பக்கத்தே வைத்துப் பார்க்கும் ஆவலாமெமக்கு பாதகமேன்*
*செய்து இப்புவிதனில் மறைந்தாய்*
*ஆற்றிடப் போமோ இத் தீ......*

யோகபுரத்தில் உள்ள தற்காலிக இல்லத்தில் 15-05-2004 அன்று (நாளை) இவரது 45 ம் நாள் நினைவில் உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் தோழர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து இவர் துயரில் நனையுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

த.முகவரி:- இல 333,
3ம் யூனிட்
யோகபுரம், மல்லாவி.

நி.முகவரி:-ஐயனார் கோயில் வீதி,
கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.

திரு/திருமதி
தெய்வேந்திரம்.






## படத்திற்கு மெருகூட்டுங்கள் –68



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.


### படத்திற்கு மெருகூட்டுங்கள்–68

.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................

பெயர் : .......................................................
முகவரி : .......................................................
.......................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –67



தே. ஆரணி
மல்லாவி மத்தியகல்லூரி,
மல்லாவி.

### பரிசுக்குரிய வரிகள்

*மூச்சுத் திணறும் சின்னஞ்சிறு பயிரே*
*சிறுவர் உரிமைகள் பேச்சளவில் மட்டுமா?*
*உன் வாழ்வையும் வளத்தையும் பூட்டியது யார்?*
*பூட்டை உடைத்து புறப்படு வெளியே.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*பள்ளி செல்லும் வயதிலே- பகைவனது*
*சிறையினிலேயிருந்து ஏங்குகின்றாள்*
*தங்கையே ஏங்காதே நிச்சயம் - விடிவு*
*கிட்டும்.*

சி.கஜீபன்,
இல-53 ஜெயந்திநகர்.

*சிங்கள வல்லாதிக்கம் கொடுமைப்படுத்தி*
*சிறையில் எனை அடைத்த போதும்*
*சீறி எழுந்திடுவேன் சிறுத்தை என*
*தமிழினத்தின் விடிவிற்காய்.*

சு.சிவாஜினி,
மந்துவில், புதுக்குடியிருப்பு.

*இரும்புப் பூட்டு உன் மனதினுள் நெருப்பு - பகைவரின்*
*சிரிப்பு: பெண் என்பதால் கடுமையாய் வதைப்பு? விடுபட*
*எண்ணிடும் விளிப்பு? சிறைதனை உடைத்திடும் தவிப்பு-வீர*
*தமிழ் மண்ணில் இவைகளுக்கு கிடைக்கும் நாளை ஒருவிடிவு*

ம.அருள்யோண்சன்,
விசுவமடு.

*பூட்டுடைத்துப் புகலிடம் நாட்டிட - பகை*
*கோட்டைக்கு புலி பாயுமாஎன்று*
*சிறைக் கூண்டுக்குள் உன் ஏக்கமா*
*ஓட்டைவளியே ஓர் சேதி ஓடிவரும் உன் செவியருகே*

கு.மஞ்சு
பூநகரி

*பிஞ்சுக்கரத்தில் பாரவிலங்கு பூட்டி*
*வெஞ்சிறையில் அடைத்தாளும் வீரமங்கையின்*
*பார்வையில் பூட்டுத்தொறிக்கும்-இதை*
*புரிந்துகொண்டால் போதும்.*

க.ரத்தினசிங்கம்
கிளிநொச்சி.


இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகயம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.



நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை
அசல் 22 கரட்டில் அழகாக வடிவமைத்து உங்களுக்கு தருபவர்கள்!

# சிவா கோல்ட் ஹவுஸ்

இல:- 56, தர்மலிங்கம் வீதி, வவுனியா. T.P:- 024 - 2223034

(சி-9545)

கிளிநொச்சி மாநகரில் மே.14 இல் கோலாகலமான உதயம்

# துளசி புகைப்படக்கலையகம்



உங்கள் தேவைகளுக்காக எங்கள் சேவைகள்

கறுப்பு, வெள்ளை, கலர் படப்பிடிப்பு.
கணனி முறையில் அல்பங்கள் வடிவமைத்தல்.
புகைப்படங்களுக்கான வடிவமைப்பு
புதிய, பழைய பாடல் ஒலிப்பதிவு (CD Writing only)
லமினேட்டிங் (Leminatting)
டியூரோ பிரேமிங் (Dero Praming)

SCANING
DISIGNING
PTINTING

இவற்றோடு சகல மங்கள கரமான நிகழ்வுகளுக்கும்
வெளிப்புறப்படப்பிடிப்புகளும் செய்து கொடுக்கப்படும்.

துளசி புகைப்படக்கலையகம்
யாழ்சாலை, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

(சி-9546)

வன்னிப்பெருநிலப்பரப்பில் உந்துருளி விற்பனையில் தமக்கென தனியிடம் பதித்த





# சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

இல. 496, 496/1
நாயகி கட்டடம்,
யாழ்சாலை பரந்தன்,
கிளிநொச்சி.



(வன்னிப்பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)



மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்

# குமரகுரு



உங்கள்
இன்றைய
தெரிவுக்கு...

புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி



KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

(சி-9545)



# EXPOAir

your friend in the skies

எக்ஸ்போ எயார்



யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு
அழையுங்கள் -

021-2223891, 021-2226297, 0114 512666,
011-2360291, 0772-348888, 0772-349999,
011-2360290.,
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com



இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை


ஜப பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு மே மாதம் 14 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.